

### ஆசிரியர் உரை

# பின்னால் விடப்பட்டவர்கள்

## Left Behind

Louis Rushmore

**உ**ண்மையாகவே பின்னால் விடப்பட்டவர்கள் ஆயிரவருட அரசாட்சியில் பங்குபெற முடியாதவர்களோ அல்லது இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதலில் தவற விடப்பட்டவர்களோ அல்ல. மேற் சொல்லப்பட்ட ஆயிர வருட அரசாட்சிக் கொள்கை, இரகசிய எடுத்துக் கொள்ளப்படுதல் போன்ற உபதேசங்கள் வேத வாக்கியங்களுக்கு புறம் பானவைகளாகும். ஆனால், இந்த மார்க்கப் பிரிவினை உபதேசங்கள் கிறிஸ்தவ உலகில் பலரிடையே பிரபலமான உபதேசங்களாக வலம் வருகிறது. ஆனால் உண்மையாகவே பின்னால் விடப்பட்டவர்கள் தங்கள் பெற்றோர்களை, பிள்ளைகளை, கணவன் அல்லது மனைவியை குடும்ப அங்கத்தினர்களை இழந்து தவிப்பவர்கள்தான். உயிரோடிருக்கிற நாம் தனியாக விடப்பட்டு துக்கிக்கிறோம். துக்கத்தின் தாக்கம் நபருக்கு நபர் மாறுபடும். (உதாரணமாக, தெரிந்தவர்கள், நண்பர்கள், உடன்பிறந்தவர்கள் மாமா, அத்தை, கணவன் அல்லது மனைவி பிள்ளைகள்). அதேபோல் துக்கத்தின் தாக்கம் நாம் இழந்தவர்களோடு எந்த அளவு உறவு வைத்திருந் தோமோ, எந்த அளவு அன்பைப் பரிமாறிக் கொண்டோமோ அதைப் பொறுத்தே அமையும். எப்படிப் பார்த்தாலும் நம் பிரியமானவர்களின் பிரிவால் தனியாக விடப்பட்டிருக்கும் நாம் துயரப்படுகிறோம்.

தனியாக விடப்பட்டிருப்பவர்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகள் எண்ணற்றவை. அவர்கள் ஒரே நேரத்தில் உடலாலும் உணர்வாலும் பாதிக்கப்படுகிறார்கள். தனிமையும், கைவிடப்பட்ட உணர்வும் ஒரு குடையைப்போல் அவர்களை மூடிக்கொள்கின்றன. அவர்கள் தங்கள் சிந்தனைகளுடன், இப்பூமியில் முன்பு தங்களுக் கிருந்த ஆசைகளைத் துறந்து, எதையும் அனுபவிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு இல்லாமல் சொல்லப்போனால், வாழ வேண்டுமென்ற ஆசையே இல்லாமல் சிக்கித் தவிப்பதை நம்மால் காண முடியும்.

அதுமட்டுமல்லாமல், தங்களை அறியாமலேயே ஒரு கசப்புணர்வு உண்டாகி யார்மீது தங்கள் கோபத்தைக் காட்டுவது என்பதை அறியாமல் சிலவேளைகளில் தேவன் மீது தங்கள் கோபத்தைக் காட்டுகிறார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது தனிமையாக விடப்பட்டவர்களின் வாழ்க்கை இருளான, முடிவேயில்லாத துயர படு குழியாகும்.

அதிகாலையில் வெளிச்சம் வருவதற்கு முன்பு, சாலையில் பயணிக்கும் போதோ அல்லது சபையில் பாடல் பாட முயற்சிக்கும் போதோ இப்படிப்பட்ட வேளைகளில் சபையில் பெரும்பாலும் பரலோகம் அல்லது மரணம் பற்றிய பாடல்கள்தான் அதிகம் பாடப் படுகிறது. பாடலே ஒருவருடைய உணர்வுகளை தட்டி எழுப்பி விடுகிறது. தன் துணையோடு பல வருடங்களாக நெருக்கமாக வாழ்ந்த ஒருவர் திடீரென தன் துணையை இழக்கும்போது தன் உடல் உறுப்புகளில் ஒன்று துண்டிக்கப்பட்டதுபோல் உணர்கிறார். எப்படி? நான் தொடர்ந்து வாழ்வது சாத்தியமா? என்று நமக்கு நாமே கேட்டுக் கொள்கிறோம். நெருக்கமாக உள்ள இருவரில் ஒருவர் மரித்து மற்றொருவரை தவிக்க விடுவதென்பதை நினைத்துப் பார்ப்பதற்கே கொடுமையாக உள்ளது. அதைவிட, இருவரும் சேர்ந்தே மரித்தால் நலமாயிருக்கும். ஒரு முறை நாங்கள் சர்வதேச விமானத்தில் வெளி நாட்டில் ஊழியம் செய்யும் ஊழியர்களோடு பயணித்தபோது விமான விபத்தில் தன் துணையை இழந்த ஒருவர் நானும் இந்த விமானத்தில் தான் இருக்கிறேன் என திடீரென சத்தமிட்டார். அப்பொழுது பயணத்தி லிருந்த மற்றவர்களும், நானும் தனியாக விடப்படுவதின் வேதனையை உணர்ந்தோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்? நம் இழப்பின் வலி ஒருபோதும் தீராது. இப்போதைய தாங்க முடியாத வலி காலப்போக்கில் தாங்கக் கூடியதாக மாறும்.

இரண்டாவது, மரணமானது இவ்வுலகில் எது அவசியமானது, எது அவசியமில்லாதது என்பதை நமக்கு வேறுபடுத்திக் காட்டுகிறது. அதாவது, அவசியமானவைகள் ஆவிக்குரிய காரியங்கள், நித்தியத் திற்குரிய காரியங்கள்) என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

மூன்றாவது, நாம் உற்சாகமில்லாமல் சோர்ந்து போகும் வேளைக ளில், நாம் செயல்பட முடியாமல் தவிக்கும் வேளைகளில் ஆவிக்குரிய காரியங்களில் பங்கெடுப்பது நமக்கு உற்சாகத்தையும் உத்வேக த்தையும் கொடுக்கும். ஆவிக்குரிய காரியங்களில் நேரத்தை செல வழித்தல், உணவு, உடற்பயிற்சி, முற்றத்தில் உட்காருதல் போன்றவைகள் இல்லையென்றால் தனிமையில் ஆயுசு நாட்களை நாம் கழிக்க வேண்டியதாயிருக்கும்.

நான்காவது, நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு கனி கொடுக்கிற வேலையாட்களாக இருப்பதற்கான வாய்ப்புகளைத் தேட வேண்டும்.

அதுபோல, மனைவியானவளுக்கும், கன்னிகைகளுக்கும் வித்தியாச முண்டு. விவாகமில்லாதவன் சரீரத்தையும், ஆத்துமாவிலும் பரிசுத்தமா யிருக்கும்படி கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான். விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலா மென்று உலகத்திற்குரியவைகளுக்காக கவலைப்படுகிறாள். இதை நான் கண்ணியில் அகப்படுத்த வேண்டுமென்று சொல்லாமல் உங்களுக்குத் தகுதியாயிருக்குமென்றும், நீங்கள் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்றும் உங்கள் சுய பிர யோஜனத்துக்காகவே சொல்லுகிறேன். (1கொரி 7:34,35).

ஐந்தாவது, தனியாக விடப்பட்டவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து சென்ற ஆத்துமாக்களை பரலோகில் மறுபடியும் காணும் ஆசையை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். **தாவீது ஒரு சமயம், அது மரித் திருக்கிற இப்போது நான் உபவாசிக்க வேண்டுவது என்ன? இனி நான் திரும்பி வர பண்ணக் கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனோ அல்லாமல் அது என்னிடத்திற்கு திரும்பி வரப் போகிறதில்லை** என்றான். (II சாமு 12:23) இருந்த போதிலும் பரலோ கில் நம்முடைய உறவு இருக்கிறது போல் இருக்காது. உதாரணமாக பர லோகில் கொள்வனையும், கொடுப்பனையும் இல்லை (மத் 22:24-30) ஆனால், என்பது பூமிக்குரிய பந்தம் அது மரணத்திலே கலைந்து போகி றது. (ரோ 7:8). அதாவது, இப்போது உயிரோடிருக்கிற நாம் நம்முடைய பிரியமானவர்களோடு இப்பூமியில் வாழ்ந்ததை நினைத்து அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்தி நாட்களை நகர்த்த வேண்டும்.

ஆறாவது, புதுப்பிக்கப்பட்ட துணையின் மூலமாக சுற்று ஆறு தலை பெற்றுக் கொள்ள முடியும்.(ரோமர் 7:23) (1கொரி 7:39) (1தீமோ 5:14) அப்பொழுது ஈசாக்கு ரெபேக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக் கொண்டு போய் அவனை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காக கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந் தான்.

ஏழாவது, தனியாக விடப்பட்டவர்கள் 'கர்த்தருக்குச் சித்தமானால் எனும் சொற்றொடரை முழுமையாக நம் எண்ணங்களிலும், திட்டங்க ளிலும் செயல்படுத்த வேண்டும். (யாக் 4:15; (3-16) திட்டங்களை வகுத்துக்கொண்டு தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறார் என்று முழுமையாக உணர வேண்டும்.

எட்டாவது, இவ்வுலகில் நம் துயரங்கள் முழுமையாக தீர்ந்து போகாவிட்டாலும் கூட இனிவரும் உலகில் அதாவது பரலோகில் நம் கண்ணீர் முழுமையாக துடைக்கப்படும். (வெளி 21:4). பத்தாவது, பரலோகின் அளவில்லா ஆனந்தம் இப்பூமியில் எவ்வளவு துயரங்கள் அனுபவித்தாலும் அதையெல்லாம் மறைத்து விடும், மறைக்கச் செய்து விடும். (மத் 13:44).

நான் ஒப்பிட்டுப் பேசுகிறேன், நம் ஜீவன் குறுகிய கால அளவை உடையது (யோபு 14:12) (சங் 90:10) (1பேது 1:24) நாம் இப்பூமியில் எத்தனை காலம் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல. ஆனால், நாம் வாழும் காலத்தில் என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியமாக இருக்கிறது. தனியாக விடப்பட்டிருக்கும் நம் வாழ்க்கையை அரைகுறையாக அல்ல, முழுமையாக வாழ்ந்து நம் வாழ்க்கையின் முடிவை தேவன் தீர்மானிக்க அனுமதிக்க வேண்டும். (பிலி 1:20-24). அப்போதுதான், நாம் பரம பேரானந்தத்தை அனுபவிக்க முடியும். (லூக்16:1931). இடைப்பட்ட காலத்தில், குறிப்பாக தனித்துவிடப்பட்டிருக்கும் நாம் நம்மை கிறிஸ்தவ சேவைக்குள் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, நம் அவசர தேவையாயிருக்கிற ஆறுதலுக்காக கர்த்தர் மீது சாய வேண்டும்.

அந்த ஆறுதல் நமக்கு நம் கிறிஸ்தவ சகோதரர்களாலே அளிக்கப்படுகிறது. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால், எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்'' (11 கொரி 1:3,4).

## குடும்பத்தலைவனுடைய தவறுகள்

- தங்கள் பிள்ளைகளை விட வேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்
- குடும்பத்திற்குத் தலைவனாக இல்லாமலிருத்தல்
- குழந்தைகளின் சொல்லுக்கு செவிகொடுக்கத் தவறுதல்
- பிள்ளைகளின் திறமைக்கு அப்பால் அவர்களுக்கு இலக்குகளை நிர்ணயித்தல்
- அவர்கள் மீது நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக அவர்களை சந்தேகப்படுதல்
- மற்றவர்கள் முன்பாக தங்கள் பிள்ளைகளை கடிந்து கொள்ளுதல்
- அன்புக்கு மாற்றாக வேறு பொருட்களை அவர்களிடம் காட்டுதல்

நிர்வாக ஆசிரியர் உரை



# மிகுந்த பலனுக்கேதுவான தைரியத்தை விட்டு விடாதிருங்கள்

## Do Not Cast Away Your Confidence, Which has Great Reward

E.Z.S. Rajanayagam

**பு**திய ஏற்பாட்டில் உள்ள 27 நூல்களுள் தனித்துவம் வாய்ந்தது என்று சொல்லப்படும் தகுதி எபிரெயர் நூலுக்கு உண்டு. எப்படியெனில், இதன் ஆசிரியர் பவுலடியாராகத் தான் இருக்க வேண்டுமென்று ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், ஏதோ ஒரு காரணத்திற்காக ஆவியானவர் இதைத் திட்டமாக வெளிப்படுத்தவில்லை. இந்நூலில், கிறிஸ்து மேலானவர் என்பதையும், கிறிஸ்துவின் மார்க்கம் மேலானது என்பதையும் நிலைநாட்ட ஆசிரியர் அடுக்கடுக்கான காரணங்களை எடுத்துக் கொடுக்கிறார். ஆம், தூதர்களைக் காட்டிலும், மோசேயைக் காட்டிலும், ஆரோனின் ஆசாரித்துவ முறையைக் காட்டிலும், நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும், கிறிஸ்துவும் அவருடைய மார்க்கமும் மேலானது என்பது நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

பதிமூன்று அதிகாரங்களைக் கொண்ட இந்நூலை நாம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி (1:1–4:13) கிறிஸ்து மேலானவர் என்பது. இரண்டாம் பகுதி பகுதி (4:14–10:18) கிறிஸ்துவின் கிரியைகள் மேலானது என்பது. மூன்றாவது பகுதி (10:19–13–25) கிறிஸ்தவனின் விசுவாச வாழ்க்கை மேலானது என்பது. இதில் மூன்றாம் பகுதி ( 10: 35–39 வசனங்கள், முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவர்களுக்குப் பலன் உண்டு என்று கூறுகிறது. அதிலும் குறிப்பாக, நம்முடைய 35ம் வசனம், ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள் என்று கூறுகிறது.

### 1. எபிரெயக் கிறிஸ்தவனே விட்டுவிடாதே

பரலோக பலனுக்குத் தேவையான தகுதிகளில் ஒன்றாக இவ்வசனத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், விட்டுவிடக் கூடாது என்பது.

விட்டுவிடாதே என்று தமிழில் இருப்பதற்கான ஆங்கில வார்த்தையின் பொருள், எறிந்துவிடாதே என்பது. இவ்வார்த்தையை ஆசிரியர் பயன்படுத்தும் போது, அந்தக்காலப் போர் முறையை மனதில் கொண்டவாராகவே எழுதியுள்ளார் என்று நம்பப்படுகிறது. ஆம், அந்நாட்களில் போருக்குச் செல்லும் போது கேடகம் எடுத்துச் செல்லும் முறை வழக்கத்தில் இருந்தது. அப்படி எடுத்துச் செல்லும் கேடகத்தைப் போர் முனையில் போர் எவ்வளவு மும்முரமாக நடந்தாலும், ஒருவீரன் அதை விட்டுவிடவோ, எறிந்து விடவோ கூடாது. சில நேரங்களில் தாக்குதலைக் தாக்குபிடிக்க முடியாமல் சிலர் கேடகத்தை விட்டுவிட்டோ, எறிந்துவிட்டோ ஓடிவந்து விடுவார்கள். அந்நாட்களில் இப்படி ஓடிவந்துவிடுவது மிகவும் அவமானமானது. அப்படிப்பட்டவர்கள் குடும்பத்தாரின் மதிப்பையும் இழந்து, சமுதாயத்தாலும் ஒதுக்கி வைக்கப்படுவார்கள். இப்படி நடத்தப் படுவதற்குக் காரணம், போருக்கு போகும் ஒருவனுக்கு என்ன நேர்ந்தாலும், ஏன் உயிரே போகும் நிலை வந்தாலும் கேடகத்தை விட்டுவிடக்கூடாது என்பதே. அந்நாட்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவ்வழக்கம் எல்லோரும் அறிந்த ஒன்றாக இருந்தது. ஆகவே தான், ஆசிரியர் விட்டுவிடாதே என்று கூறி ஆவிக்குரிய ரீதியில் அவர்களை எச்சரிக்கிறார்.

அருமையானவர்களே, இதிலிருந்து என்ன தெரிகிறது? கிறிஸ்தவனாக வாழ விரும்பும் ஒருவன் மற்றும் சத்தியத்தின்படி கிறிஸ்தவனாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவன், ஆவிக்குரிய வாழ்வில் சிலவற்றை எக்காரணம் கொண்டும் விட்டுவிடக் கூடாது. உயிரே போனாலும், அவைகளை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும். இப்படி விட்டுவிடாமலிருக்க வேண்டியவைகள் பற்றி நம்மால் ஒரு நீண்ட பட்டியல் தயாரிக்க முடிந்தாலும், அவைகளில் பிரதானமாக தேவனுடைய வார்த்தைகளைக் கூறலாம். ஆம், இம்மைக்கும், மறுமைக்கும் பயனுள்ளதாக இருக்கும்படி கொடுக்கப்பட்டிருக்கும் **வேத வசனங்களை** நாம் ஒரு போதும் விட்டு விடவே கூடாது.

**II. எபிரெயக் கிறிஸ்தவனே தைரியமாயிரு.**

பரலோக பலனுக்குத் தேவையான தகுதிகளில் ஒன்றாக நம்முடைய வசனத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்தபாடம், தைரியமாயிருக்க வேண்டும்.

எபிரெய ஆசிரியர் 10: 35 ல் உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள் என்கிறார். தைரியம் என்ற வார்த்தை இந்நூலில் 5 முறை இடம் பெற்றாலும், இவைகளில் 10ம் அதிகாரம் 20 ம் வசனம், தைரியம் சம்பந்தமான ஓர் அழகான கருத்தை வெளிப்படுத்துகிறது. இங்கே ஆசிரியர் சொல்லும் தைரியம், பலத்தினாலோ, பணத் தினாலே, பதவியினாலோ வருகிறதாக இல்லாமல், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிடைக்கும் ஒன்றாக உள்ளது. இந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய **இரத்தத் தினாலே நமக்கு தைரியம்** உண்டாயிருக்கிறபடியானாலும் என்று கூறுகிறது.

ஒருவனுடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கான தைரியம் கிறிஸ்து வின் மாசற்ற இரத்தத்தினாலேயே கிடைக்கிறது. இந்த இரத்தத்தோடு ஒருவனுக்குத் தொடர்பு எப்பொழுது ஏற்படுகிறது? ஒருவன் பாவ மன்னிப்புக்காகத் தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்படும் போது, கிறிஸ்வின் இரத்தத்தோடு ஐக்கியமாகிறான் (எபே.2:13). அந்த இரத்தம் ஒருவனுடைய கடந்த கால பாவங்களைக் கழுவி, கிறிஸ்து வுக்காக வாழும் புதிய ஜீவனுக்கான வாழ்க்கைக்குத் தைரியத்தைக் கொடுக்கிறது. இந்த எபிரெயக் கிறிஸ்தவர்களில் அநேகர், தைரிய முள்ளவர்ளாகவே இருந்துள்ளனர் என்பதைக் கீழ்வரும் வசனங்கள் உறுதி செய்கிறது. முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரத்திரவங் களாகிய மிகுந்த போரட்டத்தைச் சகித்தீர்களே. நிந்தைகளாலும், உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டது அல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள். நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக் குறித்துப் பரிதபித்தது மன்றி, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலைமையுள்ளதுமான சுதந்திரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்தி களையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள் (10:32-34) இவ்வசனங்கள் கிறிஸ்துவுக்காய், கிறிஸ்தவ வாழ்க்கைக்காய், கிறிஸ்துவின் சபைக்காய் அந்நாட்களில் வாழ்ந்தவர்கள் எவ்வளவு தைரியமாய் வாழ்ந்தார்கள் என்பதையே காட்டுகிறது.

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிடைக்கும் தைரியத்தைப் பெறாதவர்களே தங்களை இப்பூமியில் அந்நியரும், பரதேசிகளும் என்று கருதி விசுவாசத்தோடே மரித்து மேன்மையான உயிர் தெழுதலை மனதில் கொண்டு, பாடுகளைச் சகித்திருக்கும் போது நானும், நீங்களும் நம்முடைய விசுவாசத்தை எப்படிக் காத்து வாழ வேண்டுமென்றும், கிறிஸ்துவின் வருகையில்

உயிர்ப்பிக்கப்படுவோம் என்பதையும் அறிந்து, (I தெச 4:16,17) எப்படி தைரியமான வாழ்க்கை வாழ வேண்டுமென்றும் எண்ணிப் பாருங்கள்! ஆனால், நாம் அப்படி வாழ்ந்து கொண்டுள்ளோமா?

ஆகவே, கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிடைக்கும் தைரியத்தை நாம் ஒரு போதும் விட்டு விடாமல், கிறிஸ்துவுக்காக நம்மை அர்ப்பணித்து வாழ்வோம். எப்படிப்பட்ட சோதனை வந்தாலும், வேதனை வந்தாலும் சவால்கள் வந்தாலும் தைரியமாய் எதிர் கொண்டு வாழ்வோம்.

**III. எபிரெயக் கிறிஸ்தவனே மிகுந்த பலன் உண்டு:**

நம்முடைய வசனப் பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கிறிஸ்துவினிமித்தம் படும் பாடுகளுக்குப் பலன் உண்டு என்பது.

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே உண்டாகும் தைரியத்தை, நாம் எதற்காகவும் விட்டுவிடாமல், தைரியமாய் வாழும் போது அதற்கு மிகுந்த பலன் உண்டு என்றே வேத வசனங்கள் கூறுகிறது. நம்முடைய தேவன் எப்பொழுதும் பாடுகளுக்குப் பலனளிக்கும் தேவனாகவே இருக்கிறார். நம்முடைய இரட்சகர் இயேசுவானவர் இக்கருத்தைத் தன் ஊழிய நாட்களின் ஆரம்பத்திலேயே மலை பிரசங்கத்தில் அடித்துச் சொல்லிவிட்டார். என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்: பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் (மத். 5:11,12) என்று. இன்னும், மத்தேயு 10:42ல் நம்முடைய இரட்சகர் சீஷன் என்னும் நாமத்தினித்மித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும், தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். நம்முடைய பரலோக தேவனும், இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் அவருக்காகப் படும் பாடுகளுக்குப் பலனைக் கொடுக்கிறார்கள் என்பது இதன்மூலம் நிச்சயமாகிறது.

எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு பலன் கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் வந்துவிடக்கூடாது என்பதற்காக, 6 –ம் அதிகாரத்திலேயே தெளிவுபடுத்தியுள்ளார். ஏனென்றால், உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த

அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதுக்கு தேவன் அநீதியுள்ள வரல்லவே என்று (எபி 6:10) தேவன் நீதியுள்ளவர் அவருக்காகப்படும் எந்த பிரயாசத்தையும் அவர் மறப்பதில்லை. பழைய ஏற்பாட்டின் காலத்தில், மோவாபிய ஸ்திரீயாகிய ரூத் இஸ்ரவேலின் தேவனை அடைக்கலமாய்த் தேடி, மாமி நகோமியோடு வந்தாள் அவளுக்குத் தனவான் போவாசைக் கொண்டு தேவன் சொன்னதைக் கவனியுங்கள். **உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவோலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறையான பலன் கிடைப்பதாக** (ரூத் 2:12) ஆவியானவர் சொன்னபடி இந்த ரூத்திற்கு நிறைவான பலன் கிடைத்ததா இல்லையா? நிச்சயமாகவே கிடைத்தது. பட்டுப் போன அவள் வாழ்வு பிறரால் மெச்சப் பேசப்படும்படியாய் மாறியதோடு அவளுடைய பெயர் இயேசு ஆண்டவருடைய ஜனனத்தின் வரிசையிலும் இடம் பெற்றுவிட்டது. நீதியுள்ள நம் பரலோக தேவன் வாக்கு மாறாதவர்.

ஆகையால், அருமையானவர்களே, இப்பூமியின் வாழ்க்கையில் கிறிஸ்துவுக்காக எந்தளவு பாடுபடுகிறோமோ அதற்குண்டான பலன் நமக்குப் பரலோகில் உண்டு. எபிரெயக் கிறிஸ்தவர்கள் அதிகப்பாடுகள் பட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு மிகுந்தபலன் வாக்களிக்கப் பட்டுள்ளது. அது போல நாம் ஒவ்வொருவரும், கிறிஸ்துவுக்காக கிறிஸ்துவின் சபைக்காக, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்காகப் பாடுகள், அனுபவிக்க நம்மை ஒப்புக்கொடுத்து, அதற்குண்டான பலனை, பரலோகத்தில் மிகுதியாய்ப் பெற்று, நித்திய நித்தியமாய் பிதாவோடும், இயேசு ஆண்டவரோடும், அவர் சமூகத்திலுள்ள ஆயிரமாயிரம் தூதர்களோடும், உலக முண்டானது முதல் வாழ்ந்து மரித்த நீதிமான்களோடும் என்றென்றும் வாழ்வோம்! அப்படி வாழ தேவன் நமக்கு உதவி செய்வாராக!ஆமென். ✝

---

**சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தை பெருகப் பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள் வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்து போகார்கள் (ஏசாயா 40:2931).**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பின்னால் விடப்பட்டவர்கள் | Louis Rushmore | ... 1 |
| மிகுந்த பலனுக்கேதுவான .... | E.Z.S. Rajanayagam | ... 5 |
| தேவன் அநீதியுள்ளவரல்லவே | Jerry Bates | ... 12 |
| தீர்மானங்கள், தீர்மானங்கள் | Byron Nichols | ... 16 |
| அர்ப்பணிப்பு | P.C. Philemon Rajah | ... 19 |
| ஒரு சந்ததி அவரை சேவிக்கும் | B. Arjunan | ... 23 |
| சத்தியத்தை அறியுங்கள் சத்தியம் .... | E.Z.Selvanayagam | ... 27 |
| சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது | Benny Martin | ... 31 |
| தேவன் – | **God** | |
| அடிமைத்தனத்தின் அழகிய பக்கம் | Brett Petrillo | ... 35 |
| தேவன் இருப்பதற்கான மறைமுக.... | Neal Pollard | ... 37 |
| நம்முடைய ஜீவனாகிய .... | Vance Tiutton | ... 39 |
| தேவனுடைய வார்த்தை – | **The Word of God** | |
| நீங்கள் வேதாகமத்தை அழிப்பீர்களா? | Steve Higgin Botham | ... 40 |
| ஏன் நீங்கள் வேதாகமம் தேவனுடைய .... | J.C. Choate | ... 42 |
| அறிந்திருந்தும் ஆனால் மறந்த அல்லது ... | Michael L.King | ... 45 |
| நாட்டப்பட்ட வசனம் ..... | Jimmy Clark | ... 48 |
| வார்த்தையை பகுத்துப்போதிப்பதற்கு... | *David R. Kennry* | ... 50 |
| இரட்சிப்பு – | **Salvation** | |
| இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய ..... | Kevin L. Moore | ... 55 |
| தேவனுடைய அஸ்திபாரம் | Tom Holland | ... 57 |
| வசன ஆராய்ச்சி | | ... 59 |
| பரலோகம் | Perry. N. Hall | ... 62 |
| சபை – | **The Church** | |
| அழைக்கப்பட்டவர்கள் ஒருமித்திருக்கும் .. | Royce Frederick | ... 66 |
| நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் .... | Owen D. Olbricht | ... 68 |

வாழ்வதற்கான உபதேசம் - Doctrine to Live by

| | | |
|---|---|---|
| சத்தியம் என்றால் என்ன? | Randall Caselman | ...72 |
| அவர் வெளிப்படும் போது | Clarence Deloach. Jr | ... 74 |
| தேவன் நமக்கும் பிள்ளைகளை | | ... 76 |

ஆராதனை - Worship

| | | |
|---|---|---|
| உங்கள் வாழ்க்கையில் முழுவதும்... | Danny Boggs | ... 77 |
| அக்கினியோடு விளையாடுதல் | Rick Cunngham | ... 80 |
| சத்தியத்தோடு ஆராதனை | Cecilmay Jr | ... 82 |

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை - Daliy Christian Living

| | | |
|---|---|---|
| நரகம் நகைச்சுவையான ஓர் .... | Charles Box | ... 85 |

செயலில் கிறிஸ்தவம் - Christianity in Action

| | | |
|---|---|---|
| கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தப்பட ... | Dale Grissom | ... 88 |
| ஆடுகளை இடமாற்றம் செய்கிறோமோ... | Patrick Morrison | ... 90 |
| மன ரம்மியமாய் இருக்க கற்றுக்... | Gareely Kirkpatride | ... 93 |

அனுதின கிறிஸ்தவ ஜீவியம் - Daliy Christian Living


| | | |
|---|---|---|
| தேவனோடு அந்த தொடர் ... | Betty Burton Choate | ... 95 |
| ... ஸ்தோத்திரத்தோடே... | Dan Winkler | ... 97 |

கிறிஸ்தவ இல்லம் - The Christian Home

| | | |
|---|---|---|
| விவாகம் ... | Ken Tyler | ... 99 |
| உங்கள் வலைகளைப்... | Gary. C. Hampton | ... 101 |

வேதாக கேள்விகள் - Bible Questions

| | | |
|---|---|---|
| ஓய்வு நாளை கிறிஸ்தவர்கள் ... | Maxle B. Boren | ... 103 |
| முக்கிய வசனம் குறித்த .... | Maxle B. Boren | ... 106 |
| தேவனுடைய தயவு | Mark.N. Posey | ... 107 |



இணை ஆசிரியர் உரை

# தேவன் அநீதியுள்ளவரல்லவே

## God is Not Unjust

***Jerry Bates***

எபிரெயர் 6:10 ல், தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர் உற்சாகமூட்டும் சில வார்த்தைகளை எழுதியிருக்கிறார். **ஏனென்றால், உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.** இந்த நிரூபம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்கள் உற்சாகமிழந்து சோர்வாகக் காணப்பட்டார்கள். முன்பு இதே அதிகாரத்தில், இந்நிரூபத்தின் ஆசிரியர் விழுந்து போவதின் ஆபத்தைக் குறித்து எச்சரித்திருந்தார். பின்பு ஒன்பதாம் வசனத்தில் அவர்கள் உண்மையாக தொடர்ந்து வாழ்வார்கள் என்று தம்முடைய நம்பிக்கையை வெளிப்படுத்தி, இந்த உற்சாக மூட்டும் வார்த்தைகளை அவர் எழுதினார். இவ்வார்த்தைகள் நம்மையும் உற்சாகப்படுத்த வேண்டும். ஏனென்றால், இவைகள் தேவனுடைய உண்மைத்தன்மையை நமக்கு நினைப்பூட்டுகின்றன. இவ்வார்த்தைகளை நாம் சுருக்கமாக சிந்தித்துப் பார்ப்போம்.

**தேவன் அநீதியுள்ளவரல்ல என்று நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும்.**

தேவன் தம்முடைய மனதை மாற்றுவதில்லை அல்லது தம்முடைய வாக்குத்தத்தங்களை ரத்து செய்வதுமில்லை. தேவன் மனிதனிடமிருந்து மாறுபட்டவராய் எப்போதுமே வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார். மனிதன் தன்னுடைய மனதை மூன்று காரணங்களுக்காக மாற்றுகிறான். நம்மால் வருங்காலத்தை முன்னறிவிக்க முடியாத காரணத்தால், சில சமயங்களில் நாம் புதிய சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய தாயிருக்கிறது. ஆனால், தேவன் எதற்காகவும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. சில வேளைகளில் நம்முடைய திட்டங்கள் நம்மை விட வலிமை வாய்ந்த ஏதோ ஒன்றால் அல்லது

யாரோ ஒருவரால் தடை செய்யப்படுகிறது. ஆனால் தேவனை விட வலிமை வாய்ந்த சக்தி இவ்வுலகில் எதுவுமில்லை. எனவே, இது தேவனுக்குப் பொருந்தாது. மூன்றாவது, மனிதன் தன்னுடைய பொருளாசையினால் அதிக லாபத்திற்கு ஆசைப்பட்டு தன் மனதை மாற்றுகிறான். இதுவும் தேவனுக்குப் பொருந்தாது. அதனால்தான், மோசே எண்ணாகமம் 23:19 ல், இவ்விதமாக சொல்கிறார்'' பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம் மாற அவர் ஒரு மனு புத்திரனும் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? மேலும், சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதினார்'' என் உடன் படிக்கையை மீறினாலும் என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன் (சங்கீதம் 89:34). தேவன், நாம் அவரை முழுமையாக நம்பமுடியும் என்பதை நாம் அறிய விரும்புகிறார் (எபிரெயர் 6:13-18).

**மறந்துவிடுவதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே**

இவ்வாக்கியம் காரியங்களை அலட்சியப்படுத்துவது சம்பந்தமான பொருளைக் கொண்டுள்ளது. மனிதனுக்கு மறதி என்பது இயல்பாகவே இருக்கிறபடியால் அவனுக்கு சில காரியங்களை அவ்வப்போது நினைப்பூட்டுவது அவசியமாகிறது. மனிதன் மறப்பது மட்டுமல்ல, தான் செய்ய வேண்டியது என அறிந்த காரியங்களையும் செய்யாமல் அலட்சியமாயிருக்கிறான். இக்கருத்தை நாம் எபிரெயர் புத்தகத்திலும் காண முடியும். இந்த கிறிஸ்தவர்கள் தங்கள் இரட்சிப்பைக் குறித்து கவலையில்லாமல் இருந்தமைக்காக எச்சரிக்கப் பட்டார்கள் (எபிரெயர் 2:3) அவர்களுடைய அலட்சியப் போக்கினால் அவர்கள் வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லை (5:12). அவர்கள் அந்நியரை உபசரிப்பதில் அலட்சியம் காட்டக் கூடாது என்றும் உற்சாகப்படுத்தப்பட்டனர் (13:12). இருந்த போதிலும், தேவன் ஒருபோதும் ஒன்றையும் மறப்பதில்லை. தேவன் அன்பின் சிறிய செயல்பாடுகளை கூட கணக்கில் வைத்துக் கொள்கிறார். எதையுமே அவர் மறப்பதில்லை. உதாரணமாக, அவருடைய நாமத்தில் ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட அதையும் தேவன் கணக்கில் வைத்துக் கொள்கிறார் (மத்தேயு 10:42). அது மாத்திரமல்ல, தேவன் எப்போதுமே தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் அலட்சியம் செய்வதே இல்லை. இந்த உண்மை ஏசாயாவால் அவர் தேவனை ஒரு தாயோடு ஒப்பிடும் போது வலியுறுத்தப்படுகிறது. ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை (ஏசாயா 49:15).

அதே நேரத்தில் , தேவன் சில காரியங்களை மறக்கவும் செய்கிறார். உதாரணமாக, தேவன் நம் கடந்தகாலப் பாவங்களை மறந்து விடுகிறார். நான் நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப் போடுகிறேன். உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன். [ஏசாயா 43:25]. எபிரெயர் 8:12 ல், இதன் ஆசிரியர் எரேமியா 31:34யை மேற்கோள்காட்டுகிறார். **அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்** என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே, தேவன் பாவங்களை மன்னிக்குமபோது அந்த பாவங்கள் காணாமல் போய்விடுகின்றன. இது பெரும்பாலும் மனித பழக்க வழக்கங்களிலிருந்து மாறுபடுகிறது.

தேவன் நம்முடைய நற்கிரியைகளை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்கிறார். ஆனால், நம் பாவங்களை மறந்து விடுகிறார். என்ன ஓர் ஆசீர்வாதம் இது!

**நம் அன்பின் பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன்அநீதியுள்ள வரல்லவே**

இது கைம்மாறு கருதாமல் அன்பின் நிமித்தமாக செய்யப்படும் கிரியைகளாகும். இது கிறிஸ்துவுக்காக காட்டப்படும் அன்பா யிருந்தாலும் கூட  கிரியைகள் தேவையாயிருக்கும் சக கிறிஸ்தவர் களுக்கு செய்யப்படுகிறது. ஒருவர் சக பரிசுத்தவனை விசாரிக் கிறவராயிருந்தால் அவர் கிறிஸ்துவை விசாரிக்கிறவராயிருக்கிறார் [மத்தேயு 25:40]. இங்கே கிறிஸ்தவர்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஒருவர் பரிசுத்தவானாக மாறுவதற்கு சாக வேண்டியதில்லை. இன்னும் சொல்லப்போனால், பரிசுத்தவான் என்னும் பதம் அதீத பக்தியுடைய ஆவிக்குரிய நபரை குறிக்கிறது. எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்தவான்களயிருக்கிறார்கள். அதாவது தேவனுடைய சேவைக்காக பரிசுத்தமாக்கப்பட்டு பிரித்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த கிறிஸ்தவர்கள் கடந்த காலங்களில் அன்பின் பிரயாசங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வார்த்தைகள் அவசியமாயிருந்தது. அவர்களுடைய பிரயாசம் விருதாகவில்லை என்பதை நினைப்பூட்டும் வார்த்தைகள் அவசியமாயிருந்தது.

சக கிறிஸ்நதவர்களிடத்தில் காட்டிய அன்பை தேவன் எப்பாதுமே நினைவில் வைத்துக் கொள்வார். தம்மைப்பற்றி உத்தம இருதயத் தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. [ஐஐ நாளாகமம் 16:9]. கொர்நேலியு தான்

இரட்சிக்கப்படாத நிலையிலும் தேவனைப் பிரியப்படுத்த அவர் கொண்டிருந்த ஆசையை தேவன் கவனித்தார் [அப்போஸ்தலர் 10:4]. அப்படியிருக்கும்போது, அவரை சேவிக்க அவருடைய பிள்ளைகள் எடுக்கும் முயற்சியை அவர் எந்த அளவு கவனிப்பார்? இவ் வார்த்தைகள் நம்மையும் கூட உற்சாகப்படுத்த வேண்டும். நாம் கர்த்தருக்காகப்படுகிற பிரயாசங்களுக்கு பலன் இன்னும் கிடைக்க வில்லையே என்று நாம் சிலவேளைகளில் சோர்வடைவது உண்டு. நம் பிரயாசங்களை யாராவது கவனிக்கிறார்களா என்று பல வேளைளில் நாம் நினைப்பதுண்டு. மனிதன் நினைக்காமல் இருக்கலாம். ஆனால் தேவன் எல்லாவற்றையும் கண்டு, நம்மை விசாரிக்கிறார் என்று நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். ✝

## தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகளின் தன்மைகள்

பக்தி விருத்தி அடையச் செய்கிறதாயிருக்கிறது
(அப்போஸ்தலர் 20:32)

கடைசி நாளில் நியாயந்தீர்க்கிறதாயிருக்கிறது
(யோவான் 12:48).

குறைவற்றது, ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது
(சங்கீதம் 19:7)

என்றென்றும் நிற்கிறதாயிருக்கிறது
(ஐ பேதுரு 1:23)

வெளிச்சம் தருகிறதாயிருக்கிறது
(சங்கீதம் 119:130)

ஜீவனும், வல்லமையும் உள்ளது
(எபிரெயர் 4:12)

ஆறுதல் அளிக்கிறது
(ரோமர் 1:4)



# தீர்மானங்கள், தீர்மானங்கள்

## Decisions, Decisions

Byron Nichols

**வே**தாகமம் பல முடிவுகளைப் பற்றி பேசுகிறது. சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, சில முடிவுகள் எடுக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. சிலர் முடிவுகளை மற்றவர்களை விட வேகமாக எடுக்கிறார்கள். சிலர் எளிதாக நம்மை விட வேகமாக எடுக்கிறார்கள். சிலர் எளிதாக நம்மை விட ஒரு காரியத்தின் சாதக பாதகங்களை எடைபோடும் திறன் பெற்றிருக்கிறார்கள். சிலர் முடிவுகள் சம்மந்தமான தகவல்களை கவனிப்பதில் கை தேர்ந்தவர்களாயிருக்கிறார்கள்.

இருந்தபோதிலும், வேகமாக முடிவெடுப்பவர்கள் எல்லாருமே முடிவெடுப்பதில் ஞானத்தை வெளிப்படுத்துவதில்லை. துரதிஷ்ட வசமாக பலர் முன்யோசனையின்றி, துரிதமாக முடிவெடுக்கிறவர் களாயிருக்கிறார்கள். நாமெல்லாரும் சில வேளைகளில் தேவை யில்லாமல் முன்யோசனையின்றி சில பொருள்கள் வாங்கிவிட்டு பல முறை வருத்தப்பட்டிருக்கிறோம். நாம் அப்படி செய்திருக்கிறோம் தானே? அதெல்லாம் மோசம் என்று சொல்ல வேண்டிய அவசிய மில்லை. ஏனென்றால், நம் தவறுகள் வருங்காலத்தில் முடிவெடுக்கிற காரியத்தில் நாம் ஜாக்கிரதையாக இருக்க உதவி செய்யும்.

இன்னும் சில மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் முடிவெடுக்கவே பயப்படுகிறார்கள். அவர்களால் ஒரு பொருளை வாங்குவது கூட கடினமாகும். ஒரு புதிய வேலையைத் தேடுவது அல்லது ஏற்றுக்கொள்வது அல்லது திருமணம் செய்து கொள்வது அல்லது திருமணம் செய்து கொள்ளாமல் தனியாக இருப்பது போன்றவற்றில் தயக்கம்காட்டி முடிவெடுக்க முடியாமல் திணறுகிறார்கள். நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி சில முடிவுகளை நாம் எடுத்தே ஆக வேண்டியிருப்பதால் அந்த முடிவுகளை நாம் ஞானமாக எடுக்க வேண்டும்.

**அனுதினமும் நாம் முடிவுகளை எடுக்க வேண்டியதாயிருக்கிறது**

உதாரணமாக, நான் இந்த நாளை எப்படிப் பயன்படுத்தப் போகிறேன்? தேவனை பிரியப்படுத்தும் வகையில் அதை பயன்படுத்த முயற்சிப்பேனா? மற்றவர்களை உற்சாகப்படுத்த முயற்சிப்பேனா? மற்றவர்களை உற்சாகப்படுத்த முயற்சிப்பேனா? மற்றவர்களுடைய தேவைகளில் என் கவனத்தைச் செலுத்துவேனா?

**சில முடிவுகள் மற்ற முடிவுகளைவிட முக்கியமானவைகளாக இருக்கின்றன.**

நான் காலை உணவுக்கு முன்பாக சவரம் செய்கிறேனா அல்லது உணவுக்குப் பின்பாக சவரம் செய்கிறேனா என்பது நான் சரியான நேரத்தில் வேலைக்குச் செல்கிறேனா என்பதை விட முக்கிய மானதல்ல. நம் வாகனம் சுத்தம் செய்யப்பட்டிருக்கிறதா என்று பரிசோதிப்பதை விட நான் போக வேண்டிய இடத்திற்கு அது என்னை அழைத்துச் செல்ல அதில் போதுமான அளவு எரிபொருள் இருக்கிறதா என்று பரிசோதிப்பதே முக்கியமாக இருக்கிறது. அதேபோல், என் சரீரத் தோற்றத்தை குறித்து முடிவெடுப்பதை விட, நித்திய இரட்சிப்பைக் குறித்து முடிவெடுப்பது மிக முக்கியமாக இருக்கிறது. ''மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அதற்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்'' என்று கிறிஸ்து கேட்டதில் நாம் எப்படிப்பட்ட முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டுமென்பதை நாம் கவனிக்க முடியும் [மத்தேயு 16:26].

**முடிவுகள் விளைவுகளை உண்டாக்குகின்றன**

நம்முடைய நண்பர்களைத் தெரிந்தெடுப்பது நித்திய விளைவுகளை உண்டாக்கும். தேவ பயமுள்ள கிறிஸ்தவர்களை நம் நண்பர்களாக தெரிந்து கொள்வது அருமையான ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கும். ஆனால், தேவனைப் பற்றி அக்கறையில்லாதவர்களை நாம் நண்பர்களாக தெரிந்து கொண்டால் அது தேவனை விட்டு நம்மை மிக எளிதாக வழிவிலகச் செய்துவிடும். யாக்கோபு ஆசிரியர் தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார், பாவிகளே உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள் . [யாக்கோபு 4:8] என்று சொல்லி விட்ட பின்பு பத்தாம் வசனத்தில் கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் என்றும் சொல்கிறார்.

நம் வாழ்க்கை முறையை வேதாகமம், விதைத்து விட்டு பயிர் வளர காத்திருக்கும் விவசாயிக்கு ஒப்பாகப் பேசுகிறது. எவ்வகையான விதையை நாம் விதைக்க வேண்டும்? எந்த அளவு விதைக்க வேண்டும் என்பதைக் குறித்து நாம் தான் முடிவெடுக்க வேண்டும். நாம் காலத்தியர் 6: 7,9 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் பவுலின் வார்த்தைகளுக்கு செவி கொடுக்க வேண்டும். மோசம் போகதிருங்கள், தேவன் தம்மை பரியாசம் பண்ணவெட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்; நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

மேலும், இங்கே பவுல் எவ்வகையான விதையை நாம் விதைக்கப் போகிறோம் என்பதைக் குறித்து கூட நாம் முடிவெடுக்க வேண்டுமென்று தெளிவுபடுத்தியிருக்கிறார். அது பூமிக்குரிய அழிவின் அறுவடையாக இருக்கலாம். அப்படிப்பட்ட முடிவை எடுப்பதில் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும்.

பெரும்பாலனவர்கள் தங்களுடைய முடிவுகளை தாங்களே எடுக்க விரும்புகிறார்கள். தாங்களே காரியங்களை தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். தேவன் இவ்விதமாக முழு சுதந்தரத்துடன் அது நாம் நம்மை உண்டாக்கியிருக்கிறார். தீர்மானங்களை எடுப்பதில் எவ்வளவு பெரிய பொறுப்பை நமக்கு தேவன் தந்திருக்கிறார் என்பதை புரிந்து கொள்வதில் தான் இருக்கிறது. முடிவுகள் எப்போதுமே விளைவுகளை தன்னகத்தேக் கொண்டுள்ளது என்பதை ஒரு போதும் மறந்து விடக் கூடாது. அந்த விளைவுகளை நாம் மாற்றவும் முடியாது, அகற்றவும் முடியாது.

நாம் இரவில் படுக்கைக்குச் செல்லும் போது, நாள் முழுவதும் நாம் எடுத்த தீர்மானங்களை திரும்பிப் பார்க்க வேண்டும். அவைகள் நல்லவைகளாகவும் இருக்கலாம், மோசமானவைகளாகவும் இருக்கலாம். ஆனால், அவைகளுக்கு நிச்சயமாக விளைவுகள் இருக்கும். நம் முடிவுகள் பாவமுள்ளவைகளாக இருந்தால் மனந்திரும்புதல் மற்றும் ஜெபத்தின் மூலாக மன்னிப்பைப் பெற்று கொள்ளலாம். ஆனாலும் கூட, நம் முடிவுகளுக்கான விளைவுகளை நாம் எதிர் கொண்டே ஆக வேண்டும்.

நம் வாழ்க்கை முழுவதும் நாம் எடுக்கும் தீர்மானங்களில் தேவன் நமக்கு ஞானத்தைத் தரும்படி நாமெல்லாரும் ஊக்கமாக ஜெபிப்போம். அப்போது நாம் எல்லோரும் நித்தியத்தை அனுபவிப்போம்.

# அர்ப்பணிப்பு
## Dedication
Philemon Rajah

**1 . அர்பணிப்பு என்பது என்ன ?**

அர்பணிப்பு (dedication) அல்லது ஒப்புக்கொடுத்தல் (surrender) எல்லாம் ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகள் தான் . முழு கவனத்துடன், முழு மனதுடன் ஒருவர் ஒரு செயலை செய்வது அர்ப்பணிப்பாகும் . எந்த ஒரு காரியத்திலும் ஒருவர் வெற்றியடைய, அல்லது இலக்கை அடைய அர்ப்பணிப்பு மிகவும் அவசியமாகும்.

கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்வு வாழும்படியாக (ரோமர் 6: 1–5) வந்தவர்களுக்கான முதல் அறைகூவலே, அந்த புதிய வாழ்வை வாழவும், அந்த வாழ்வில் வெற்றியும் பெற உங்களை நீங்களே ஒப்புக்கொடுங்கள் (அர்ப்பணியுங்கள் ) என்பதாகும். [ரோமர் 6: 13 –19] நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்திற்கு அடிமைகளாக ஒப்புக் கொடுத்ததுபோல இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள் .

**2 . எவைகளை அர்ப்பணிக்க வேண்டும் ?**

தேவனுக்கு நாம் எவைகளை அர்பணிக்க வேண்டும் என்பதையும் பைபிள் நமக்கு தெளிவாக அறிவிக்கிறது.

**நமது சரீரத்தை**

**ரோமர் 12: 1 அப்படியிருக்க, சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை .**

**நமது ஆத்துமாவை**

1பேதுரு 4: 19 **ஆகையால், தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.**

**3 . எப்படி அர்ப்பணிக்க வேண்டும்?**

நாம் நம்மை எப்படி அர்ப்பணிக்க வேண்டும் என்பதை, தேவனுக்காக தங்களை அர்ப்பணித்து அதில் வெற்றிகண்ட வேதாகம ஜாம்பவான்களிடம் இருந்து கற்றுக்கொள்வோம்.

**அர்ப்பணிப்பு பிரதானமானதாக இருக்க வேண்டும்**

அர்பணிப்புள்ள வாழ்வு என்பது ஒரு பிரதானமான முடிவுடன் [தீர்மானத்துடன்] தொடங்குகின்றது. யோசுவா 24: 15 ‘‘**கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்பறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர் களோ?** நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்.

**உறுதி த்தன்மையுடன் இருக்க வேண்டும்**

தேவன் தந்த பாலும் தேனும் ஓடுகின்ற கானான் தேசத்தில், தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ யோசுவா தனது பிரதானமான முடிவை அறிவிக்கிறார். நல்ல முடிவை அறிவிக்கிறார். நல்ல முடிவுகளே (தீர்மானங்கள்) நல்ல துவக்கமாக இருக்கின்றன. நல்ல துவக்கமே பாதி வெற்றியாகிவிடுகிறது. ஆனால், தீர்மானம் எடுப்பது நமக்கு மிகப்பெரிய போரட்டமான காரியமாகிறது. அதற்கு காரணம், தீர்மானங்கள் பற்றி நமக்குள் எழும் குழப்பங்கள். அக்குழப்பங் களுக்கு காரணம் நமது மாமிச பலவீனம். முடிவெடுத்துவிட்டால் நம்மால் செய்ய முடியுமா? ஒருவேளை முடியாமல் போய்விட்டால் என்ன செய்வது? அச்சம் கொள்ளாமல் பவுலை போல தைரியங் கொள்வோம். ஏனெனில், நம்மை பெலப்படுகின்ற கிறிஸ்துவினாலே நமக்கு எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு (பிலி4:13). எடுக்கப்பட்ட நல்ல முடிவில் உறுதியாக இருக்க வேண்டும். தானியேல் 3:17-18 நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லராயிருக்கிறார்: அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி

விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை. நீர் நிறுத்தின் பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது என்றார்கள்.

சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ தங்களுடைய முடிவில் உறுதியாக இருந்தார்கள். அதற்காக எல்லாவற்றையும், தங்கள் ஜீவனையும் கூட இழக்க ஆயத்தமாயிருந்தனர். ஏனெனில், நிலையில்லா மனம் நல்லதல்ல. இரண்டு மனம் உள்ளவர்கள் தங்கள் வழிகளில் நிலையற்றவர்களாக இருக்கின்றனர் (யாக் 1: 8). ஆகையால், அவர்கள் எதை சாதிக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அதை சாதிக்க முடியாமல் தோற்கின்றனர். இதே போன்ற உறுதித்தன்மையை நாம் பவுலிடம் காணமுடியும் அப் 21:13 **அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்து போகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதிற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்** என்றான்.

### கட்டுபாட்டுடன் இருக்க வேண்டும்

உறுதி தன்மையில் நிலைநிற்கக் கட்டுபாடு, அதாவது தன்னைத்தானே கட்டுபடுத்திக்கொள்வது மிகவும் அவசியம் . 1கொரி 9:24–27 **பந்தையச்சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார் கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சியமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். ஆகையால், பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் .**

கடவுள் இந்த அண்டசராசரங்களை ஒழுங்கமைவுடன் படைத்திருக்கிறார். ஒழுங்கை மீறுதல் என்பது பேராபத்தை, பேரழிவுகளை உண்டாக்கும் என்பது சந்தேகமில்லை. சில மில்லிமீட்டர் சூரியன் பூமியை விட்டு விலகினாலோ, நெருங்கினாலோ அது மனுக்குலம் மாத்திரமல்ல, பூமியில் உள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் பேராபத்தாகிவிடும். எங்கே அல்லது எவரிடம் ஒழுங்கு மீறப்படுகிறதோ அங்கே அர்ப்பணிப்பில் அவர் பின்வாங்கி, தோற்கின்றவராக இருக்கின்றார்.

சாலமோன் ஞானி தன் மனதை அடக்குதலே உத்தமமானது என்கிறார். நீதி 16: 32. பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் கிறிஸ்துவினுடையவர்கள் தங்களை அடக்குகிறவர்களாக, அதாவது கடவுள் வகுத்த ஒழுங்கிற்கு கட்டு படுகிறவர்களாக இருக்கின்றனர். கலா5 :24 கிறிஸ்துவினுடையவர் கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் .

**4. தேவ பக்தியுடன் இருக்க வேண்டும்?**

நான்காவதாக, தேவ பக்தியை நாம் படித்தாலும், மேலே குறிப்பிட்ட மூன்று காரியங்களுக்கும் இதுவே அடித்தளமாகும். தேவ பக்தி என்பது ஒருவர் கடவுளிடத்தில் கொண்டிருக்கின்ற ஆழமான விசுவாசமும், நெருக்கமான பற்றையையும் உள்ளடக்கியது. அதாவது, ஒருவர் கடவுள் மீது கொண்டுள்ள விசுவாசத்திலே அவரைக் கிட்டிச் சேர்வ தாயிருக்கிறது. எபி 11:6 விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர் களுக்குப் பலன் அளிக்கிறவரரென்றும் விசுவாசிக்க வேண்டும். வெற்றிகரமான அர்பணிப்புள்ள வாழ்விற்கு விசுவாசம் அடிப்படை தேவையாக இருக்கிறது. 1 யோவான் 5:4 தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் .

பவுல் அத்தேனே பட்டணத்து மக்களின் தேவ பக்தியை பாராட்டு கிறார் [ அப் 17] . தேவபக்தி என்பது பல ஆவிக்குரிய தன்மைகளின் வளர்ச்சியின் மேற்படியாக உள்ளது 2பேதுரு 1: 5–8 இப்படியிருக்க இச்சையடக்கத்தோடே நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோட தைரியத்தையும், தைரியத்தோட ஞானத்தையும், இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே, ஞானத்தோடே, தேவ பக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே, அன்பையும் கூட்டி வழங்குங்கள் . இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் ,உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது .

இறுதியாக, அன்பானவர்களே! அர்பணிப்பு இன்றி செய்யப்படு கின்ற எந்த ஒரு செயலும் சிறக்காது என்பது நாம் அறிந்ததே. நீதியுள்ள, பரிசுத்தமான வாழ்க்கை வாழ தேவனுக்கு நம்மை நாமே ஒப்புக் கொடுப் போம். நமது அர்பணிப்பில் நிலைநிற்காமல் நாம் தவறியிருந்தால், நம்மை நாமே தேவனுக்கு, நமது ஆண்டவர் இயேசுவைப் போல சுகந்த காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுப்போம் [எபே 5:2]. சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் தாமே அதில் நாம் நிலைநின்று வெற்றிபெற அருள்புரிவாராக.

✝

# ஒரு சந்ததி அவரை சேவிக்கும்
# A Posterity Shall Serve Him
## *B. Arjunan*

ஒரு சந்ததி அவரை சேவிக்கும். அந்த சந்ததி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயிருக்கிறது. அந்த சந்ததியில் நீங்கள் உங்களை இணைத்துக் கொண்டீர்களா? அந்த சந்ததியைக் குறித்து சங்கீதத்தில் வாசிக்கிறோம். **ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும் தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி எனப்படும்.** (சங்.22 :30). உலகத்திலே எத்தனையோ சந்ததிகளை நாம் காண்கிறோம். எல்லோரும் ஏதோ ஒன்றை தெரிந்து கொண்டு வழி வழியாக ஆராதித்துக் கொண்டும், அவைகளை சேவித்துக் கொண்டும் வருகிறார்கள். முப்பத்து முக்கோடி தேவர்கள் இருப்பதாக சொல்லுகிறார்கள். இப்படியாக அநேக மார்க்கங்களை நாம் இப்பூமியில் காண்கிறோம். இப்படி எண்ணிலடங்கா பிரிவினைகளுக்கு மத்தியில் ஒரு சந்ததி அவரைச் சேவித்துக் கொண்டு வருகிறது, அந்த சந்ததியைக் குறித்து பரிசுத்த வேதாகமம் சாட்சியிடுகிறது. அதைக் குறித்து நாம் தியானிப்போம்.

முதலாவது, பிதாக்களின் காலத்தில் அந்த சந்ததியைக் குறித்து படிக்கிறோம். ஆபிரகாம் பெயர்செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்திலே தொழுதுகொண்டான் (ஆதி.21:33). இந்த ஆபிரகாம் தேராகுடைய மகன். தேராகு ஒரு விக்கிரக ஆராதனைக்காரன். ஆபிரகாம் தேவனால் தெரிந்த கொள்ளப்பட்ட படியால் அவன் இனம், ஜனம், தேசம் எல்லாவற்றையும் விட்டு தேவன் காண்பிக்கும் தேசத்திற்குச் சென்று அங்கே சதாகாலமுமுள்ள தேவனை தொழுது கொண்டான். சிலர் வெளியூர் சென்றுவிட்டால் தேவனை மறந்துவிடுவார்கள். ஆபிரகாம் அப்படியல்ல. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியில் இருந்த படியால் எங்கு கடந்து சென்றாலும் அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டான். இவனுக்குப் பின்பாக வந்த இவனுடைய மகன் ஈசாக்கு அந்தபடியாகவே தொழுது கொண்டான். புதிய ஒரு இடத்திற்கு வந்தவுடன் அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி கர்த்தருடைய நாமத்தைக் தொழுதுகொண்டு அங்கே தன் கூடாரத்தைப் போட்டான். அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டினார்கள் என காண்கிறோம் (ஆதி. 26:25) இவனுடைய மகன் யாக்கோபு பற்றி படிக்கின்றோம்; அங்கே இவன்

ஒரு பலிப்பீடத்தைக் கட்டி, தன் சகோதரனுடைய முகத்துக்குத் தப்பி ஓடின போது அங்கே தனக்கு தேவன் தரிசனமானபடியால், அந்த ஸ்தலத்திற்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான் (ஆதி . 35:7). ஓடிப்போகக் கூடிய இடத்திலே கூட கர்த்தரை தொழுது கொண்டு அந்த இடத்துக்கு ஏல்பெத்தேல் என்று பெயரிட்டிருக்கிறான். ஒரு வேளை அவனுடைய மனது எப்படியிருந்திருக்கும்? என் சகோதரன் என்னை வெறுக்கிறானே, இந்த தேவன் அதைக் கேட்கவில்லையே என்ற கவலை அவனுக்குள் இருந்திருக்காதோ? எது எப்படியிருந்த போதும் அவன் தன் தேவனை மறக்காமல் அங்கு கர்த்தரை தொழுதுகொண்டான். பின் சந்ததியை அங்கு வரவழைத்து தன் சந்ததியாரோடு தேவனை ஆராதித்தான் என்றெல்லாம் பார்க்கிறோம்.

இப்படியாக அவர்களுடைய சந்ததி தொடர்ந்தது, யாக்கோபு இஸ்ரவேல் என்று தேவனால் அழைக்கப்பட்டான். திரளான ஜனங்களை உடையவனாக இருந்து ஆசீர்வதிக்கப்பட்டான். இந்த இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம் வருஷத்தில், சாலொமோன் இஸ்ரவேலின் மேல் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். சாலெமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழு நீளமும், இருபது முழு அகலமும், முப்பது முழ உயரமுமாயிருந்தது என 1 இரா.6:1,2 வசனங்களில் படிக்கிறோம். ஆதிகாலங்களில் பலிபீடங்களைக் கட்டி தொழுது கொண்டு வந்தார்கள். சாலொமோனுடைய நாட்களில் ஆலய வழிபாடு துவங்கியது. தாவீது அதைக் கட்டும்படியாக தேவன் அனுமதிக்கவில்லை. அவனுடைய கர்ப்பப் பிறப்பான சாலொமோன் அந்த ஆலயத்தை கர்த்தருக்காக எருசலேமில் கட்டினான். முதலாவது ஆராதனை அங்குநடை பெற்ற போது, கட்டட பிரதிஷ்டையின் போது தேவ சமூகம் அந்த ஆலயத்தை நிரப்பிற்று. அதை அப்பொழுது இருந்த ஜனங்கள் கண்டார்கள். அப்பொழுது சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபை யாரெல்லாருக்கும் எதிராக நின்று, வானத்திற்கு நேராய்த் தன் கைகளை விரித்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை; தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர் என்று விண்ணப்பம் பண்ணினான் (1இரா.8:22,23).

இந்த சந்ததி இயேசுவின் பிறப்பிற்கு முன்னும், பின்னும் தொடர்ந்ததை நாம் காண்கிறோம். தேவனைத் தொழுது கொண்டு வந்த சந்ததியில் இயேசு பிறந்தார். ஆகையால், அவர்கள் நியாயப் பிரமாணத்தில் சொல்லப்பட்டபடி புறாக் குஞ்சுக்களை பலி செலுத்தும் படி எருசலேம் தேவாயலயத்திற்கு வந்தார்கள். கர்த்தருடைய

நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி ஒரு ஜோடி காட்டுப் புறாவானது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும் அவரை எருசலேமுக்குக் கொண்டு போனார்கள் என்று லூக்.2:24 –ல் வாசிக்கிறோம். ஆண்டவர் இயேசுவும் வளர்ந்து முப்பதாம் வயதில் ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய திருச்சித்தத்தை செய்யும் படியாக தம்மை ஒப்புக்கொடுத்தார். அப்பொழுது பிசாசு அவரை சோதித்தான். இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார் [மத்.4:10]. சாத்தானுடைய ஆசைக்கு கர்த்தர் இணங்கவில்லை. அவனோடு வசனத்தை சொல்லி போராடி ஜெயித்தார். அவர் தெரிந்து கொள்ளப் பட்ட சந்ததியில் இருந்தார் அவரும் ஒரு சந்ததியை ஏற்படுத்தினார். அது ஆவிக்குரிய சந்ததி. இவர்கள் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு சபையாக கூடி தேவனை தொழுது கொண்டார்கள். யூதர்களுக்கு பயந்ததினாலே கதவுகளை பூட்டி ஆராதித்தார்கள். அந்த சந்ததியார்: வாரத்தின் முதல் நாளாகிய அன்றைய தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்கு பயந்ததினாலே கதவுகளை பூட்டி யிருக்கையில் இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்கு சமாதானம் என்றார் [யோவா.20:19].

அந்நாட்களில் இயேசுவை கிறிஸ்துவென்றும், அவருடைய சீஷர்களென்றும் சொன்னால் இயேசுவைப் போல அவர்களையும் சிலுவையில் அறைந்து விடுவார்கள். ஆகையால், யூதர்களுக்குப் பயந்தார்கள். ஆனாலும் அவர்கள் தேவனை ஞாயிற்றுக்கிழமை கூடி ஆராதித்து இருக்கிறார்கள் என்று காண்கிறோம். இங்கே நாம் கவனிக்க வேண்டும் பலிபீடங்களைக் கட்டி தொழுது கொண்டு வந்த காலம் சென்று ஆலய வழிபாடு வந்தது. பின்பு ஆலய வழிபாடு சென்று வீடுகளிலே தேவனைத் தொழுது கொள்ளும் பழக்கம் வந்தது. இது எப்படி வந்தது என்று நாம் பார்த்தோம். ஆண்டவர் இயேசு கிணற்றண்டையிலே கானானிய ஸதிரீயிடம் பேசும் போது ; ஸ்திரீயே நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது என்றார் [யோவா.4:21]. அந்தப்படியாக எங்கும் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலத்தில் நாம் இருக்கிறோம். நாம் ஆண்டவருடைய சந்ததியில் இருப்போமென்றால் நம்முடைய கால தொழுகையானது வேத வசனத்தின்படி ஆவிக்குரியதாக இருக்க வேண்டும். அதுவும் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியோரோடு இருக்க வேண்டும். அந்த தொழுகையை தேவன் ஏற்றுக் கொள்ளுவார். இல்லையேல் நம்முடைய தொழுகை வீணானதாயிருக்கும்.

## நீங்கள் யாரை சேவிப்பீர்கள்?

ஒரு சந்ததி அவரை சேவிக்கும் என்று நாம் தியானித்தோம். அந்த சந்ததியில் இருந்துகொண்டு நீங்கள் கர்த்தரை சேவிக்கிறீர்களா? அல்லது உங்களுடைய பாரம்பரியத்தின்படியாக ஆராதித்துவரும் தெய்வங்களை ஆராதனை செய்கிறீர்களா? இஸ்ரவேலர் பல வருடங்களாக கர்த்தரை சேவித்தவர்கள். அவர்களுக்குள் சிலர் பொல்லாதவர்களோடு ஐக்கியங்கொண்டு வீணானவைகளை வழிபட ஆரம்பித்தனர். ஆகையால், யோசுவா என்ற தேவனுடைய தாசன் அவர்களை நோக்கி கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக்குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான் [யோசு.24:15]. இன்றைக்கும் அநேகர் அந்தந்த தேசத்திற்கு சென்றுவிட்டால் அவர்களோடு சேர்ந்து அவர்களுடைய தேவர்களை வழிபடவும், அவர்களோடு ஐக்கியம் கொள்ளவும் மேலும், பெண் கொடுக்கவும், பெண் எடுக்கவும் செய்து, எல்லாம் ஒன்று தான் எல்லா ஆறுகளும் கடலிலே போய் கலப்பதைப் போல, எல்லாம் ஒரே இடத்திற்கு போகுமென்று பழமொழிகளைச் சொல்லி தாங்கள் போகும் வழி சரியானதுதான் என்று சொல்லிவிடுவார்கள். இப்படித்தான் இஸ்ரவேலர் எமோரியரின் தேவர்களை சேவிக்கவும், நரகலான விக்கிரங்களுக்கு தங்களுடைய பிள்ளைகளை தீக்கடக்கப் பண்ணவும் செய்தார்கள். இந்த அருவருப்புகளை கர்த்தர் வெறுத்தார். ஆகையால் யோசுவா நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப் போம் என்றான். அன்பானவர்களே, நீங்கள் யாரை சேவிக்கிறீர்கள்? யாரை சேவிக்கப்போகிறீர்கள்? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்! ✝

---

**ஆவிக்குரிய வளர்ச்சிக்கான திறவுகோல்கள்**

- வேத வாக்கியங்களின் மீது வாஞ்சையாயிருத்தல் (I பேதுரு 2:2)
- வேத வாக்கியங்களை தியானித்தல் (சங்கீதம் 1:2)
- மரண பரியந்தம் உண்மையாயிருத்தல் (வெளி 2:10).

# சத்தியத்தை அறியுங்கள்;
# சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

## And You Shall Know The Truth and The Truth Shall Make You Free

*E.Z.Selvanayagam*

இன்றைக்குக் கிறிஸ்துவ உலகம் அசலுக்கும், போலிக்கும் வித்தியாசம் தெரியாமல் குழம்பி நிற்கிறது. ஆரோக்கியமான உபதேசம் எது, கள்ள உபதேசம் எது என்று தெரியாமல் எவர் சொன்னாலும் **ஆமாம்** போட்டுக் கொண்டு இரட்சிப்பையும், நித்தியஜீவனையும் குறித்து நிர்விசாரமாயிருக்கின்றனர். அதைக் குறித்து வேத எழுத்துக் களின் வழியாக எவ்வளவோ எச்சரிப்புகளையும், அறிவுரை களையும் கொடுத்து அதன் அபாயத்தை பரிசுத்த ஆவியானவர் விளக்கி இருக்கிறார்.

இருந்தபோதிலும், மக்கள் வேதாகமத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை ஊன்றிப் படிப்பதில்லை. படித்தாலும் அதைக் கடைப்பிடிப்பதில்லை. அதற்கு என்ன காரணம்? ஒரு காலத்தில் செல்வந்தர்களும், வசதிபடைத்தவர்களுமே வாங்கக் கூடிய அளவில் விலை அதிகமாக இருந்தது. ஆனால், அச்சு எந்திரம் கண்டுபிடிக்கப் பட்டு மலிவு விலையில் வேதாகமங்கள் கிடைத்துக் கொண்டிருக்கும் இந்த நாளிலும் கூட பெரும்பான்மையோர் வேதாகமப் படிப்பை அலட் சியம் செய்கின்றனர். சூது மதியினரும், சுய நலமிகளும் இவர்களின் மெத்தனத்தை பயன்படுத்தி வஞ்சித்து வாழ்கின்றனர். அப்படி மக்கள் அசிரத்தையாக இருப்பதற்கு அவர்கள் சொல்லுகிற காரணங்கள் வீண் சாக்குபோக்குகளேயல்லாமல் நியாயமானவைகள் அல்ல. வேதாக மத்தைப் படிப்பதினால் ஏற்படும் நன்மைகளை அவர்கள் உணர்ந்து கொள்ளாததே அதற்குக் காரணம். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கல்வியைப் பற்றியும் இவ்வாறே அக்கறை அற்றவர்களாகவே மக்கள் இருந்தனர். அறியாமையைப் போக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியும், படித்து நல்ல உத்தியோகங்களில் அமர்ந்து கை நிறைய சம்பாதித்து வாழ்க்கையில் வசதியும் சௌகரியமும் ஆக இருக்க முடியும் என்பதை விளங்கிக் கொண்ட பிறகு, இன்றைக்கு மிக மிகச் சாமானியமானவர்கள் கூட அரசு நடத்துகிற பள்ளிகளைக் கூடப் புறக் கணித்து விட்டு பெரும் பணம் செலவு செய்து பிள்ளைகள் பிறப்பதற்கு முன்பே பதிவு செய்து, பால் மறப்பதற்கு முன்பே

கொண்டுபோய் பள்ளியில் சேர்க்கிறார்கள். குழந்தையோடு தாயாரும், சில வேளைகளில் தகப்பனாரும் பள்ளிக்குச் சென்று வருவதையும் பார்க்கிறோம். அது போதாது என்று ட்யூஷன் வேறு வைத்துக் கொள்கிறார்கள். ஏனெனில், கல்வியினால் கிடைக்கும் நன்மை களைப் புரிந்து கொண்டதால்.

அது போல வேதாகமத்தைப் படித்துத் தியானிக்கிற குடும்பங்களில் காணப்படுகிற மெய்ச் சமாதானம், மகிழ்ச்சி, இல்லாமையிலும் ஓர் நிறைவு, வறுமையிலும் ஒரு திருப்தி ஆகிய காரியங்களை கவனித்துப் பார்த்தால் அவர்களுடைய மகிழ்ச்சிக்கும், மனநிறைவுக்கும் தேவன் மேல் அவர்கள் கொண்டிருக்கிற விசுவாசமே காரணம் என்பது புரியும். ஆனால், ஏனோ மனிதகுலம் அமைதியையும், சமாதானத்தையும் விட ஆடம்பரத்திலும், பகட்டு வாழ்க்கையிலும் நாட்டம் கொண்டு அமைதியும் எளிமையும், கொண்ட வேதாகம வழிகளைப் புறக் கணித்து விட்டுத் தீமை செய்ய திரளாக ஜனங்களைப் பின்பற்றுபவர் களாக இருக்கிறார்கள்.

எந்தத் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கும், எந்தப் படிப்பை மேற்கொள்வதற்கும் முயற்சியும் பயிற்சியும் வேண்டும். அதேபோல் வேதாகமத்தைக் கற்றுக் கொள்வதற்கும் கூட முயற்சியும், பயிற்சியும் தேவை. அவ்விதமான முயற்சிகள் ஒன்றையும் மேற்கொள்ளாமல் எப்படி ஒன்றைக் கற்றுக்கொள்ள முடியும்? இன்னும் சிலர் எங்களுக்குப் போதிய நேரம் இல்லை என்பர். இதுவும் ஒரு விதண்டாவாத சாக்குப் போக்குத்தான். ஆண்டவரே நான் உம்மைத் தொழுகிறேன். உம்முடைய வேதத்தைப் படிக்கிறேன். எல்லோருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்றால் எனக்கு ஒரு மணி நேரம் சேர்த்து 25 மணி நேரமாகக் கொடும். உமக்குத் தான் எல்லாம் முடியுமே என்பது போல் உள்ளது. நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் வாய்ப்பு வசதிகளுக்கேற்ப வேதாகமம் படிப்பதற்கு நேர மில்லை என்று பிதற்றுவது, ஆண்டவரே, உம்மைத் தொழுவதும் உம து வேதத்தைப் படிப்பதும் எனக்கு வேண்டாத வேலை என்னுடைய முக்கிய அலுவல்களை அனைத்தையும் செய்துவிட்டு சாவகாசமாக உம்மிடம் வருவேன். வராவிட்டாலும் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டு வருத்தப்படாதீர் என்று சொல்லாமல் சொல்கிறோம். ‘‘முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியை யும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும், (மத். 6:33) என்று ஆண்டவர் கூறியதற்கு எதிர்த்தி சைச் சிந்தனையோட்டம், இது நியாயமா?

நண்பர்களே, மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு

வார்த்தையினாலும் பிழைப்பான்' என்றும் (மத். 4:4, உபா. 8:3) சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று பவுலடியாரும் (1தீமோ.4:8) கூறுவதின் கருத்தைச் சிந்தித்துப் பார்க்கும் போது வேதாகமத்தின் மூலம் தேவன் நமக்குத் தந்திருக்கிற ஆலோசனைகள் எவ்வளவு மேன்மையானது என்று புரியும்.

ஆகவே, பரிசுத்த வேதாகமத்தை நாள்தோறும் படித்து தியானித்து அவைகளின்படி நடப்பது எவ்வளவு முக்கியம் என்பதை எண்ணிப் பாருங்கள். சங்கீதக்காரன் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தை தியானிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்கிறார். (சங். 1:1,2) ஆகவே, வேதாகம வாசிப்பை அலட்சியம் செய்யாதீர்கள்.

வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள முற்படுவர்களுக்கு சில முட்டுக் கட்டைகள் இருக்கின்றன என்பது உண்மை. அதனால் ஆர்வம் குன்றிப்போகிறதா என்று தெரியவில்லை . அவைகளில் சில.

வேதாகமத்தின் தமிழ் நடை : பரிசுத்த வேதாகமம் தமிழ் மறுமலர்ச்சிக்கு முந்தி மொழியாக்கம் செய்யப்பட்டது. அதில் கணிசமான வடமொழிக் கலப்பு இருக்கிறது. அதனால் தற்போதைய இளைய சமுதாயம் வேதாகமத்தின் தமிழ்நடையைக் காரணம் காட்டிப் படிக்க ஆர்வமற்றவர்களாயிருக்கிறார்கள். வயதானவர்கள் வேதாகமத்தின் பொடி எழுத்துக்களைக் காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முயலுகின்றனர்.

இன்னும் அநேகருடைய ஆர்வமின்மைக்குக் கீழ்க்கண்டவைகள் கூடக் காரணமாயிருக்கலாம்.

1. வேதாகமம் ஒரே நூல் அல்ல, அது பல நூல்கள் அடங்கிய ஓர் நூல் நிலையம் என்ற உண்மை தெரியாமை.
2. வேதாகமத்தின் மையக் கருத்து பற்றிய தெளிவில்லாமை.
3. வரலாறு, புவியியல் பின்னணி தெரியாமை.
4. பகுத்துப் படிக்கும் முறை தெரியாமை.
5. வேதாகமம் நம்பத் தகுந்ததுதானா என்ற சந்தேகம்.

ஆதாம் காலத்து பேசுகிற பாம்பு, நோவா காலத்து ஜலப் பிரளயம் மோசே காலத்து செங்கடல் பிளவு, யோனா காலத்தில் மனிதனை உயிரோடு விழுங்கி பின்னர் கக்கிப் போட்ட மீன் இவைகள் எல்லாம்

வரலாற்று உண்மைகளா என்பதைவிட இதிகாசம் புராணங்களில் வரும் கற்பனைக் கதைகள் போன்றே உள்ளது என்று நினைப்போரும் உளர் இன்னும் சிலர் இயற்கையைப் பார்த்ததால் கடவுள் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளலாமே. பின்னே ஏன் வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்று கூட சிலர் நினைக்கின்றனர். இயற்கை தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துவது உண்மைதான் (சங்19: 1). ஆனால், இயற்கை தேவன் எப்படிப்பட்டவர் என்றும் அவருக்கும் மனுக்குலத்துக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது என்றும் மனிதன் என்ன செய்ய வேண்டும். என்ன செய்யக்கூடாது என்றும் சொல்வதில்லையே, ஆகவே, அவர் நமக்குத் தந்தருளியிருக்கிற வேதாகமத்தை வாசிக்க வேண்டும். வேதாகமத்தைப் படிப்பதினால் ஏற்படும் நன்மைகள்

1. ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது
2. பேதையை ஞானியாக்குகிறது
3. தெளிவு உண்டாக்குகிறது
4. எச்சரித்தும் புத்தி சொல்லுகிறது என்று தாவீது தமது சங்கீதப் புத்தகத்தில் கூறியிருக்கிறார். (சங். 19:7-11) அப்படிப்பட்டத் தேவ இரகசியங்கள் அடங்கிய ஞானப் பெட்டகத்தைப் புறக்கணியாமல் நாள்தோறும் தனிமையாகவும், குடும்பாகவும் வாசித்து அதன் வழியில் நடந்து ஆசீர்வாதம் பெறுவோம்! ஆமென் ✝

**நாம் எதை விதைக்கிறோம்?**

**நேர்மையை விதைத்தால்**
**நம்பிக்கையை அறுவடை செய்யலாம்**

**விடாமுயற்சியை விதைத்தால்**
**திருப்தியை அறுவடை செய்யலாம்**

**கடின உழைப்பை விதைத்தால்**
**வெற்றியை அறுவடை செய்யலாம்**

**மன்னிப்பை விதைத்தால்**
**ஒப்புரவாகுதலை அறுவடை செய்யலாம்**

# சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது

# All things work together for good

*Bro. Benny Martin*

தலைப்பில் காணப்படும் வாசகத்தைப் பார்த்து நாம் மலைத்துப் போகிறோம். காரணம் பரபரப்பான இவ்வுலகில் இது காணக் கிடைக்காத வார்த்தைகளாக மாறிவிட்ட படியால் எப்போதுமே இது பரவசத்தை ஏற்ப்படுத்துகிறது. இப்பாழாய்போன உலகில் காலையில் கண்விழித்ததிலிருந்து இரவில் விண்மீன்களை காணும் வரை எங்கும் தங்கு தடையின்றி அநியாயம் அரங்கேறி வருகிறதையும், தீமை தீப்போல் பரவிவருகிறதையும் பார்த்து பதறுகிறோம், கதறுகிறோம். சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் எனும் வேத வாக்கியம் ரோமர் 8:28 ல் இடம் பெற்றிருக்கிறது. இவ்வசனம் வாழ்வின் தாழ்வான நேரங்களில் உலகப்பிரச்சனைளில் நாம் உழன்று கொண்டிருக்கும் போது நம்மை உற்சாகப்படுத்தி உவகையின் உச்சத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

இவ்வசனத்தில் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய அரவணைப்பையும்; பராமரிப்பையும் உணர முடியும். தேவனுடைய பராமரிப்பு அருமையானது, அலாதியானது அதை நம் அன்றாட வாழ்வில் அனுபவித்து வருகிறோம். தேவனுடைய பராமரிப்பு இரண்டு வகைப்படும். 1. பொதுவான பராமரிப்பு. இது தேவன் தாம் உண்டாக்கின மனித இனத்தின் மீது அவர் கொண்டிருக்கும் அளவற்ற அன்பின் காரணமாக வானத்திலிருந்து செழிப்புள்ள காலங்களையும் நமக்கு தந்து ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம் இருதயங்களை நிரப்பி இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்து சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை (அப்போஸ்தலர் 14:17). 2. விசேஷித்த பராமரிப்பு. இந்த பராமரிப்புக்கு பங்காளிகள் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தான். இது நம்முடைய ஒட்டு மொத்த அறிவையும் ஒருமுகப்படுத்தி ஆராய்ந்து பார்த்தாலும் நம்முடைய புருவங்களை விரியச் செய்கிறது. நிச்சயமாகவே தேவனுடைய இந்த அன்பும், அரவணைப்பும் பராமரிப்பும் நம் அன்றாட வாழ்வில் நாட்களை நகர்த்தப் போதுமானது.

## 1. பாடுகள் பற்றி நம்முடைய பார்வை

பாடுகள் என்பது இப்பூமிக்குரிய வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது. அதைத் தவிர்க்கவோ, அல்லது தடுக்கவோ மனிதனால் முடியாது. பக்தனாகிய யோபு **ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாய் இருக்கிறான்** என்று சொல்கிறார் (யோபு 14:1). கிறிஸ்தவ வாழ்க்கையிலும் கூட பாடுகள் என்பது அழையா விருந்தாளியாக வந்து நம்மை சிரமத்தின் சிகரத்திற்கே அழைத்துச் சென்று விடுகின்றன. ஒரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையில் பாடுகள் வரவில்லையென்று சொன்னால் அவர் சரியான கிறிஸ்தவ வாழ்க்கை வாழவில்லை என்றுதான் அர்த்தம். அது மட்டுமல்லாமல் பாடுகள்தான் பல கிறிஸ்தவர்களின் பாதையை மாற்றுகிறதாக இருக்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, சிலர் வசனத்தை ஆரம்பத்தில் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு, பிற்பாடு வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டாகும்போது இடறலடைவார்கள் என்று சொன்னார். பலர் கிறிஸ்தவ மார்க்கத்தைத் தழுவினால் ஆனந்தமும், ஆசீர்வாதமும் அளவில்லாமல் கிடைக்குமென்று எண்ணி, அவைகள் நிரந்தரமில்லை என்று அறிந்த உடனே நிராசையுடன் கடந்து சென்று விடுகிறார்கள். எனவே, கிறிஸ்தவ வாழ்க்கையில் பாடுகளை எப்படி கையாள்வது? என்பதை அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

இந்த ரோமர் எட்டாம் அதிகாரம் பாடுகளைப் பற்றி நமக்கு எப்படிப்பட்ட பார்வை இருக்கவேண்டுமென்று கற்றுத் தருகிறது. அதிலும் குறிப்பாக, 18 ஆம் வசனத்தில் ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்று நாம் பார்க்கிறோம். இவ்வசனத்தைப் புரிந்து கொள்ள பெரிய விண்வெளி விஞ்ஞானம் ஒன்றும் அவசியமில்லை. இவ்வுலகில் ஒருவர் ஒரு பெரிய சாதனையை நிகழ்த்த வேண்டுமென்றால் அதற்கான முறையில், அதற்கான துறையில் பாடுபடுவது அவசியமானது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். சோதனையும் வேதனையும் நிறைந்த உலகில் சாதனைப் புரிவதற்கு பாடுபடுவது அவசியம் என்றால் கண்ணீரும் கவலையும் இல்லாத பரலோகில் பிரவேசிப்பதற்கு எத்தனைப் பாடுபட்டாலும் அத்தனையும் தகும்.

## 11 தேவனுடைய தீர்மானம்

தேவன் ஒன்றை தீர்மானித்து விட்டால் அது தீர்க்கமாய் நடந்தே தீரும். மனிதன் பல தீர்மானங்களை தன் வாழ்வில் எடுக்கிறான், ஆனால், பல்வேறுபட்ட காரணங்களால் அவைகளை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறது. இது தேவனுக்குப் பொருந்தாது ஏனென்றால், அண்டசராசரங்களை உண்டாக்கின தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தேவனுடைய தீர்மானத்தை இவ்வுலகிலுள்ள சக்திவாய்ந்த எந்த மனிதனாலும் தடுக்க முடியாது. பழம்பெரும் பக்தனாகிய யோபு **தேவன் செய்ய நினைத்தது தடைபடாது** என்று சொல்கிறார் யோபு 42:2; ஏசாயா 42:2]. ஏசாயா 14:24 ல் இஸ்ரவேலின் சத்துருவாகிய அசீரியாவின் வீழ்ச்சியைப் பற்றி சேனைகளின் கர்த்தர் சொல்லும்போது ''நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும்'' என்று சொன்னார்.

அதே போல், இஸ்ரவேலை சிறைவாசத்திலிருந்து மீட்க கோரேசை எழுப்ப தேவன் தீர்மானித்தபோது அதை யாரும் தடுக்க முடியவில்லை. இப்படி வேதாகமத்தின் பல சம்பவங்களை நாம் எடுத்து அடுக்கிக் கொண்டே போனாலும் தேவனுடைய தீர்மானங் களுக்கெல்லாம் முத்தாய்ப்பாய் ஆதியாகமம் 37–50 அதிகாரங் களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நெஞ்சை நெகிழ வைக்கும் சம்பவம் நிமிர்ந்து நிற்கிறது. யாக்கோபு தன்னுடைய எல்லா குமாரரைக் காட்டிலும் யோசேப்பை அதிகமாக நேசித்து யோசேப்புக்கு பலவண்ண வஸ்திரங்களை உடுத்தி அழகு பார்த்தான். இதன் காரணமாக யோசேப்பின் சகோதரர்கள் அவன் மேல் பொறாமைக் கொண்டு அவனை இஸ்மவேலரிடத்தில் விற்றுப்போட்டு, கொடிய விலங்கு அவனை கொன்று விட்டதாக தங்கள் தகப்பனாகிய யாக்கோபி னிடத்தில் பொய்ச் சொன்னார்கள். எகிப்தில் அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு தன் சகோதரர்களுக்கு ஆதரவாயிருந்து அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தான். ஆரம்பத்தில் யோசேப்பு தேவனுடைய பராமரிப்பை அறியவில்லை. ஆனால், தன் வாழ்க்கையில் சகலமும் நன்மைக் கேதுவாக நடந்தேறியபின் அவன் சகோதரர்களைப் பார்த்து ''நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு அதை நன்மையாக முடியப் பண்ணினார்'' [ஆதியாகமம் 50:20] என்று சொன்னார். இதுதான் தேவனுடைய பராமரிப்பு எனப்படுகிறது.

பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும் பல காரியங்கள் நமக்கு எதிராக நடக்கும்போது, பல காரியங்கள் புதிராகத் தோன்றும்போது எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? தேவன் என்னை கைவிட்டு விட்டார் என்று அவசரப்பட்டு முடிவெடுத்து விடுகிறோம். நாம் யோசேப்பின் வாழ்க்கையில் பார்த்ததுபோல் நம்முடைய வாழ்க்கையிலும் ஆரம்பத்தில் சகலமும் தீமைக்கு ஏதுவாக நடப்பதுபோல் தோன்றலாம். ஆனால், இறுதியில் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று உறுதியாக சொல்லமுடியும். விண்ணில் வாசம் செய்யும் தேவனுடைய செயல்பாடுகளை மண்ணில் வாழும் மனிதனால் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது. நம்முடைய கண்களால் காணமுடியாத தேவனுடைய கிரியைகளை நம் விசுவாசக் கண்களால் காண பிரயாசப்பட வேண்டும். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✝

---

1. பாராட்டு என்னும் ஈவு

விமர்சகர்கள் உறவை முறித்துப்போடுகிறார்கள். உற்சாகப்படுத்துபவர்கள் கட்டி எழுப்புகிறார்கள். ஒருவரை ஒருவர் நாம் பாராட்டப் பழகிக் கொள்ள வேண்டும்.

2. புரிந்து கொள்ளுதல் என்னும் ஈவு

மற்றவர்கள் நம்மை சரியாகப் புரிந்து கொள்ள வில்லை என்று ஆதங்கப்படுகிறோம். நாம் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது.

3. விட்டுக்கொடுத்தல் என்னும் ஈவு:

வாழ்க்கையில் நாம் எப்போதுமே வெற்றி பெற்றுக் கொண்டே இருக்க வேண்டிய அவசியமில்லை. மற்றவர்கள் வெற்றி பெறவும் நாம் இடங் கொடுக்க வேண்டும்.

## தேவன்

# அடிமைத்தனத்தின் அழகிய பக்கம்




அடிமைத்தனம், இது அழகான வார்த்தை அல்ல. இது நல்ல உணர்வை உண்டாக்கும் வார்த்தையும் அல்ல. இன்றைய கலாச்சாரத்தின் வார்த்தையுமல்ல. இவ்வார்த்தையை நாம் கேட்கும் போது நம் நினைவுக்கு வருவது ஒடுக்குதல், மனிதத்தன்மையற்ற முறையில் நடத்துதல், வெறுப்புணர்வை வெளிப்படுத்துதல் போன்றவைகள் தான். அடிமைத்தனத்தின் இருண்டகாலத்தையும், அதை அரங்கேற்றிய கொடூரமான மனிதர்களையும் நாம் சிலவேளைகளில் நினைத்துப் பார்கிறோம். அடிமைத்தனம் எனும் வார்த்தை நல்ல காரணத்துக்காக எதிர்மறையான கூடுதல் அர்த்தங்களை கொண்டுள்ளது. அடிமைத்தனத்திற்கு ஆழமான, அந்தகாரமான அசிங்கமான கடந்த காலம் உண்டு என்பதில் எந்த சந்தேகமுமில்லை. எனவே, அடிமைத்தனத்தை குறித்த நல்ல காரியம் என்னவாயிருக்க முடியும்?

ரோமர் ஆறாம் அதிகாரம் அடிமைத்தனத்தின் மறு பக்கத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. இந்த அதிகாரத்தில் பவுல் நம் வாழ்க்கையின் ஏதோ ஒருகட்டத்தில் நாம் பாவத்திற்கு அடிமைபட்டிருப்பதை பற்றி பேசுகிறார். பாவம் நம் எஜமானாகிறது. பாவம் நம்மை ஆளுகை செய்கிறது, நம்மை ஒடுக்குகிறது. கடைசியாக, நம்மை அழிக்கிறது (வசனம் 23) அதன் பின்பு, ஏதோ ஒரு அற்புதமான சம்பவம் நடந்தது. நாம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடிமைகளானதால் நம் துன்மார்க்கமான எஜமானிடமிருந்து நமக்கு விடுதலை கிடைத்தது (1–7). எஜமானாகிய கிறிஸ்து நமக்கு புதிய ஜீவனைத் தந்திருக்கிறார் (வசனம் 4). அவர் நம்முடைய பாவங்களிலிருந்து நமக்கு விடுதலையை தந்திருக்கிறார் (வசனம் 7). அவர்

நமக்கு நீதியையும், பரித்தத்தையும் தந்திருக்கிறார். அவர் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார்(வசனம் 20).

இந்த ஈவு இன்றும் நமக்கு தரப்படுகிறது. நாம் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து அவரை சேவிக்க திரும்பும்படி கட்டளையிடுகிறார். அவர் நமக்குத் தரும் பலன்கள் அளவிடமுடியாதவைகள். அவர் நமக்குத் தரும் நன்மைகளை நாம் விவரிக்கவே முடியாது. அவர் நம்மிடம் அதிகமாக எதையும் எதிர்பார்க்கவில்லை. அவர் நம்மை அன்புடனும், அக்கறையுடனும், அரவணைப்புடனும் நடத்துகிறார். அவர் நம்மிடம் நீடிய பொறுமையுள்ளவராக, மன்னிக்கிறவராக சாந்தமானவராக நடந்து கொள்வார். உண்மையில் சொல்லப்போனால், அவர் நம்மை அடிமைகளாகவே நடத்துவதில்லை. மாறாக, நம்மை அவர் சுதந்தரராகவும், உடன் பிறந்தவராகவும் நடத்துவார் (கலாத்தியர் 4:7).

இங்கே பிரச்சனை என்னவென்றால், நாம் எப்போதுமே ஏதோ ஒன்றுக்கு அடிமைப்பட்டுதான் இருப்போம். இவ்வுலகில் இனவெறி , மொழிவெறி பாகுபாடு பட்சபாதம் போன்றவைகளெல்லாம் ஒழிந்து போனாலும் அடிமைத்தனம் இருந்துகொண்டே தான் இருக்கும். அது இல்லாமல் இருப்பதென்பது அசாத்தியமான ஒன்றாகும். அதற்கான காரணம் என்னவென்றால், நாம் தெரிந்துகொள்ளும்படியாக இரண்டு காரியங்கள் தான் உண்டு. 1. பாவமும், சாத்தானும் நம் எஜமானாக இருப்பது 2. தேவன் நம் எஜமானாக இருப்பது.

உண்மையாகவே, இவைகளை நாம் நினைத்துப் பார்க்கும்போது, தேவனுக்கு அடிமையாக நாம் இருப்பதனால் எதிர்மறையாக நமக்கு எதுவும் நடப்பதில்லை. அடிமைதனத்தினால் உண்டாகும் எந்த ஒரு எதிர்மறை உணர்வுகளும் அர்த்தங்களும் கர்த்தரோடு நாம் கொண்டிருக்கும் இந்த உறவுக்குப் பொருந்தாது. அடிமைதனத்திற்கு ஓர் அழகான பக்கம் இருக்கமானால் அது இதுவாகத்தான் இருக்கமுடியும். இப்போது இங்கே கேட்கப்படவேண்டிய கேள்வி என்னவென்றால்! நாம் யாரை சேவிப்போம்? யோசுவபாவின் புகழ்பெற்ற வார்த்தைகளை நாம் எதிரொலிப்போம் என்று நம்புகிறேன். **கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க்கண்டால் பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களா? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்** என்றால் (யோசு 24:15). ✝

**பாவம் நம்மை ஆளுகை செய்தது, நம்மை ஒடுக்கியது. கடைசியாக, நம்மை அழிக்கவிருந்தது. அதன்பின்பு ஏதோ ஓர் அற்புதமான சம்பவம் நடந்தது.**

## தேவன்

# தேவன் இருப்பதற்கான மறைமுக காரணங்கள்

## Implications of God 's Existence

Neal Pollard



**தேவன் இருக்கிறார்.** தேவன் உண்மையாகவே இருக்கிறார். தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார். தேவன் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். மேற்சொல்லபட்டவைகளும், இன்னும் எண்ணற்ற காரியங்களும் தேவன் இருக்கிறார் எனும் உண்மையை நமக்கு மறைமுகமாக வெளிப்படுத்துகின்றன. தேவன் இருக்கிறார் என்பது இன்னும் பல காரியங்களை உள்ளடக்குகிறது.

தேவனால் தம்முடைய உன்னத நோக்கத்தை நிறைவேற்ற மனிதர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் கிரியை செய்ய முடியும்[ரோமர்8:28].

தேவனால் அற்புதவிதமாக மனிதனுடைய வாழ்வில் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளையும், செயல்பாடுகளையும் தம்முடைய சித்தத்தின் படி ஒருங்கிணைத்து பார்க்க முடியும். அவர் யாரையும் பலவந்தப்படுத்தி காரியங்களை செய்ய வைப்பதில்லை. ஆனால், மனிதர்களால் ஏற்படுத்தப்படும் சோகச் சம்பவங்களைக் கூட நன்மைக்கேதுவாக மாற்ற முடியும். பல வேளைகளில் மனிதர்கள் தங்கள் எண்ணப்படி, விருப்பப்படி நன்மைக்கு விளக்கம் கொடுக்கும் போது தான் பிரச்சனை

ஏற்படுகிறது.மனிதன் எல்லாவற்றையும் கடந்த பொதுவான நன்மையை பார்க்காமல் தனக்கான நன்மையைத்தான் பார்க்கிறான். சோதனையில் பலன், சோகச் சம்பவத்திலும், நற்பண்பு மிகப்பெரிய நஷ்டம் அல்லது வேதனைக்கு மத்தியிலும் உதாரணம் போன்றவை கள் நம் தனிப்பட்ட வாழ்வில் நாம் காணும் எல்லாவற்றையும் கடந்த நன்மைகளாயிருக்கிறது.

**தேவன் நம்மை தனியாக விடவில்லை (ரோமர் 8:35–39).**

தேவன் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தார் என்று நம்பும் அதே நேரத்தில், வேதாகமத்தின் வெளிப்பாடுகளை நிராகரிக்கும் கொள்கைக்காரர்கள் தேவன் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்து விட்டு மிகப்பெரிய ஓய்வெடுத்துவிட்டார் அவர் நம்முடைய காரியங்களில் தலையிடுவதில்லை என்று சொல்கிறார்கள். தேவன் மனிதனுடைய காரியங்களைக் கண்டு கொள்ளாமலுமில்லை, அக்கறைப்படாமலு மில்லை. இது கல்வாரிக் குருசில் நிரூபணமாகிறது. இது அவருடைய அனாதி தீர்மானத்தின்படியாக சபை மூலமாக கிடைக்கும். ஐக்கியத் தின் மூலமாக நிரூபணமாகிறது எபேசியர்(3:9–11).

நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு கணக்கொடுப்புவிக்க வேண்டும் (ரோமர் 14:12) தேவ சாயலில் உண்டாக்கப்பட்ட மனித இனத்தில் ஒருவராக எண்ணப்பட்டு அவருடைய ஆசீர்வாதங்களின் பங்குதாரராக இருப்பது எத்தனை ஆசீர்வாதமான, சிலாக்கியமான காரியமாயிருக்கிறது! எவனிடத்தில் அதிகங்கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும்; மனிதர் எவனிடத்தில் அதிக மாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள் (லூக்கா 12:48). இது தேவனுடைய உறவுக்கடுத்த காரியங்களில் உண்மையாயிருக்கிறது. தேவன் நமக்கு ஜீவனையும்,



விசுவாசத்தையும் பூமிக்குரிய ஆசீர்வா தத்தையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்க ளையும், நேரத்தையும், தாலந்தையும், வாய்ப்பையும் அபரிதமாக தந்திருக்கி றார். இந்த வளங்களுக்கெல்லாம் நாம் தேவனுக்கு உக்கிராணத்துவ கணக்கை கொடுக்க வேண்டும்.

இவ்வுலகில் தெளிவாக காணப்படுகின்றவைகளை மூடன்தான் மறுக்கவும் மறுதலிக்கவும் முடியும்(சங்கீதம் 14:1;53:1 எபிரெயர் 11:3).நம் தேவன் ஜீவனுள்ள தேவனாயிருக்கிறபடியால் நாம் அவ ருக்கு சரியாகப் பொருத்தமாக பதிலளிக்க வேண்டும். நாம் தெளிந்த புத்தியோடும் நன்றி நிறைந்த இருதயங்களோடும் ஜீவனுள்ள தேவ னுக்கு சரியாகப்பதிலளிக்க வேண்டும். ✝

# தேவன்
# நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து
# Christ Our Life

*Vance Tiutton*

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை **நம்முடைய ஜீவன்** என்று குறிப்பிடுகிறார் [கொலோசெயர் 3:4]. பவுலைப் பொறுத்தவரை கிறிஸ்து அவருடைய ஜீவன் என்று சொல்கிறார் [பிலிப்பியர்1:21]. பவுலுக்குள் கிறிஸ்து வாழ்ந்தார். [கலாத்தியர் 2:20] கிறிஸ்து உங்கள் சரீரத்தில் மகிமைபடுகிறாரா? [பிலிப்பியர் 1:20]. பவுல் பல சந்தர்ப்பங்களில் கிறிஸ்து நமக்குள் இருப்பதின் முக்கியதுவத்தைப்பற்றி எழுதியிருக்கிறார் [கொலோ 1:27; II கொரிந்தியர் 13:5]. கிறிஸ்து நம் ஜீவனாக இருக்கும்போது அதில் உள்ளடங்கிய காரியங்களை நாம் சற்று கவனிப்போம். இந்த காரியங்கள் நம் ஜீவியங்களில் வெளிப்படையாகக் காணப்பட வேண்டும்.

### கர்த்தரைப்பற்றி நினைத்துக்கொண்டும், படித்துக்கொண்டும், தியானித்துக்கொண்டுமிருத்தல்

நாம் நம் இருதயங்களில் சில காரியங்களை ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கும்படியாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம். நம் இருதயத்தின்விருப்பமெல்லாம் பரலோகத்தை நோக்கித்தான் இருக்கிறது [கொலோ 3:1–3]. நாம் நீதியுள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் [பிலிப்பியர் 4:8]. சங்கீதக்காரன் இராச்சமயங்களில் தேவனை தியானிப்பதாகச் சொல்கிறார் [சங்கீதம் 63:67]. பவுல் தீமோத்தேயுவுக்கு ஆவிக்குரிய காரியங்களில் தியானமாயிருக்கும்படி அறிவுறுத்து கிறார். [I தீமோத்தேயு 4:15]. தேவனுயை வார்த்தைகளை தியானிக்கும்படி அதிக நேரத்தை நாம் ஒதுக்க வேண்டும். நாம் அந்த பெரெயா பட்டணத்து மக்களைப்போல் அனுதினமும் செய்ய வேண்டும் [அப்போஸ்தலர் 17:11].

### கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.

கர்த்தருக்கு நம்மீது அதிகாரம் உண்டு [மத்தேயு 28:18 அப்போஸ்தலர் 5: 36].அவருடைய வார்த்தைகள் தான் நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் [யோவான் 12:48].நாம் தேவனிடத்தில் அன்புகூருவதென்பது அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதாயிருக்கிறது [யோவான் 14:15]. தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமாகிறார் [எபிரெயர் 5:9]. கர்த்தருக்குக் கீழ்ப்படியாதவர்கள், அவருடைய கோபாக்கினைக்கு பங்காளிகிறார்கள் [II தெசலோனிக்கேயர் 1:7–9]. கிறிஸ்து நம்முடைய கர்த்தராக இருக்கும்போது நாம் தேவனுக்கு கீழ்ப்படிய ஜாக்கிரதையாயிருப்போம் [அப்போஸ்தலர் 5: 29]. ✝

## தேவனுடைய வார்த்தை

# நீங்கள் வேதாகமத்தை அழிப்பீர்களா ?

## Would You Destroy Bible?

Steve HigginBotham

**ப**ல வருடங்களுக்கு முன்பு ஒரு மோசமான ராஜாவிடத்தில் தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கிய புத்தகச்சுருள் கொடுக்கப் பட்டது. அப்புத்தகச்சுருளில் இடம்பெற்றுள்ள வார்த்தைகளை வாசிக்கும்படி தன் வேலைக்காரர்களுக்கு கட்டளை கொடுத்தார். ஆனால், அப்புத்தகச் சுருளிலிருந்து சில பத்திகள் வாசிக்கப்பட்ட உடனே ராஜா சூரிக்கத்தியை எடுத்து அச்சுருளை அறுத்து கணப்பி லுள்ள அக்கினியிலே வெந்து போகும்படி கணப்பிலிருந்த அக்கினி யில் எறிந்துப்போட்டான் (எரேமியா 36:21-23). அந்த ராஜா தேவனுடைய வார்த்தையை அழித்த பிறகு எரேமியா இவ்விதமாகப் பதிவுசெய்திருக்கிறார். **ராஜாவாயினும் அந்த வார்த்தைகளை யெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியர்காரராயினும் பயப் படவில்லை. தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவு மில்லை** (எரேமியர் 36:24).

ஆனால், இந்த வரலாற்றுச் சம்பவத்தில் என் கவனத்தை அதிக மாக ஈர்த்தது, தேவனுடைய வார்த்தையை அழித்தது ரராஜாவுக்கு எவ்வளவு ஆபத்தாயிருந்ததோ அதுபோல,தேவனுடைய கண்ணோட்டத்தில் ராஜாவுக்கு அருகில் இருந்த வேலைக்காரர்கள் கொஞ்சம் கூட பயப்படாத காரணத்தால் அவர்களுக்கு ஆபத்து காத்திருந்தது. ராஜாவை சுற்றி நின்ற வேலைக்காரர் பயப்படவில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவுமில்லை என்பது ஆச்சரியமாகிறது.

இங்கே நான் உங்களிடம் விட்டுவிட விரும்பும் காரியம் என்ன வென்றால், நமக்கு வேதாகமத்தில் சில காரியங்கள் பிடிக்கவில்லை என்பதற்காக துணிகரமாக வேதாகமத்தை அழிக்க நாம் துணியமாட் டோம். ஆனால், மற்றவர்கள் வேதாகமத்தை அவமதித்து அதை அழிக்க முற்படும்போது , நாம் அக்கறையில்லாதவர்களாக இருந்தால் குற்றவாளிகளாக இருப்போம். நாம் பயப்படுகிறோமா? நம்முடைய வஸ்திரங்களை நாம் கிழித்திருக்கிறோமா? நாம் இரட்டுத் திருக்கிறோமா?

நண்பர்களே, வானத்துக்கு கீழே ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சமயம் உண்டு. சிரிக்க ஒரு காலமுண்டு (பிரசங்கி 3:4), அதே நேரத்தில் நகைப்பைத் தள்ளிவிட்டு, அழவும், புலம்பவும் ஒரு

காலமுண்டு (யாக்கோபு4:9). தேவனையும் அவருடைய வார்த்தையையும் அவமதிக்கும் கலாச்சாரத்தைக் கண்டு உணர்வற்றவர்களாக இருக்கவேண்டாம். பெரும்பலான நம் ஊடகங்கள் (தொலைக்காட்சி, திரைப்படம், இசை, இணையதளம்) போன்றவைகள் அந்த ராஜா எப்படி சூரிக்கத்தியினால் தேவனுடைய வார்த்தையை அப்பட்டமாக அழித்தானோ அதேபோல் அழிந்து வருகின்றன. அதற்கு நம்முடைய பிரதிக்கிரியை என்னவாயிருக்கும்? தேவனுடைய வார்த்தை அவமதிக்கப்படுவதைக்கண்டு நாம் ரசித்து, நகைப்போமா? அல்லது அதற்காக நாம் துயரப்பட்டு அழுது புலம்புவோமா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

தேவனையும் அவருடைய வார்த்தையையும் அவமதிக்கும் கலாச்சாரத்தைக் கண்டு உணர்வற்றவர்களாக இருக்க வேண்டாம். ✝

## ஆவிக்குரிய மனிதனின் இலட்சணங்கள்

- தன் வாழ்க்கையில் தேவனுக்கு முக்கியத்துவத்தை முதலாவது கொடுக்கிறான் (மத்தேயு 6:33)
- மேலானவைகளை நாடுகிறவனாக இருக்கிறான் (கொலோ 3:12)
- ஆவியின் கனிகளைக் கொடுக்கிறான் (கலா 5:22-26)
- தேவனைப் பற்றியும், தன் வாழ்க்கை மீதான தேவனுடைய சித்தத்தையும் நன்றாக அறிந்திருக்கிறான் (யோவான் 17:3).
- சபைக்குள்ளாக சகோதர, சகோதரிகளின் பாரத்தைச் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான் (கலாத்தியர் 6:2)
- பொய்யைக் களைந்து பிறனுடனே மெய்யைப் பேசுகிறவனாக இருக்கிறார் (எபேசியர் 4:25)

# ஏன் நீங்கள் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நம்ப வேண்டும்?

## Why You Should Believe The Bible To be the Word of Go

J.C.Choate

உலக முழுவதிலும் லட்சக்கணக்கான மக்கள் வேதாகமம் தேவனுடைய வார்த்தையென்று நம்புகிறார்கள். அவர்கள் வேதாகமத்தைக் குறித்து கேள்வி கேட்பதை விட்டுவிட்டு இதை உண்மையென்று ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் வேதத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற காரியங்களைக் குறித்துச் சந்தேகப்படவில்லை. இன்னும் சிலர் வேதாகமத்தை முற்றிலுமாக நிராகரிக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் உலகத்தினால் பிறந்து ஏதாவது ஒன்றை ஏற்றுக் கொள்வதற்காக வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேற்சொல்லப்பட்ட இரண்டுவகைகளில் ஏதாவது ஒன்றில் நீங்கள் இருந்தால் நீங்கள் ஏன் வேதாமகம் தேவனுடைய வார்த்தை என்று நம்ப வேண்டும் என்பதற்கான சில காரணங்களை சுருக்கமாகச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்

**1. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று சொல்லிக் கொள்கிறது.**

இது கர்த்தருடைய வார்த்தை என்று அழைக்கப்படுகிறது (எரேமியா 14:1) தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள் (II பேதுரு 1:20,21) என்று பேதுரு சொன்னார். கிறிஸ்து அடிக்கடி பழைய ஏற்பாட்டிலிருந்து வசனங்களை மேற்கோள்காட்டி, அதை தேவவசனம் என்று அழைத் திருக்கிறார் (யோவான் 10:35). கடைசியாக, பவுல் வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று சொன்னார் (II தீமோத்3:1617)

**2. வேதாகமம் உண்மையான அறிவியலோடு ஒத்துப் போகிறது**

பூமி உருண்டை என்றும், கடலில் வழிகள் இருக்கின்றன என்று மனிதன் கண்டுபிடித்தற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, தேவன் அந்த விஞ்ஞானப்பூர்வமான உண்மைகள் வேதாகம எழுத்தாளர்களுக்கு அந்த காலத்திலேயே எப்படித் தெரியும்? தேவனே அவர்களுக்கு அதை வெளிப்படுத்தினார்.

**3. பல தொல்பொருள் கண்டுபிடிப்புகள் வேதாகமத்தை ஆதரிக்கின்றன**

இத்தகைய கண்டிபிடிப்புகள் கிறிஸ்துவுக்கு பல நூற்றாண்டு களுக்கு முன்பாக நடந்த சம்பவங்களை தெளிவுபடுத்தியிருக்கின்றன. அதே நேரத்தில், வேதாகமம் எதைச் சொல்லியிருக்கிறதோ அதற்கு முழு ஆதரவைக் கொடுத்திருக்கின்றன. சில குறிப்பிட்ட வேதாகம சம்பவங்களைச் சந்தேகிக்கிற சிலர் இருக்கிறார்கள். ஆனால், 1872 –ல் George Smith என்பவர் சில பாபிலோனிய கற்பலகைகளை கண்டுபிடித்தார். அவைகள் ஜலப்பிரளயத்தைப் பற்றி அறிவித்தன மேலும், சில உதாரணங்களையும் கொடுக்க முடியும்.

**4. வேதாகமும், புவியியலும் இசைந்திருக்கின்றன.**

இவ்வுலகில் காணப்படும் பெரும்பாலான மலைகள், ஆறுகள் பட்டணங்கள் இன்று எந்தெந்த பெயர்களில் பதிவு செய்யப் பட்டிருகிறதோ அந்தந்த பெயர்களிலேயே வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இது வேதாகம எழுத்தாளர்கள் ஒருபோதும் இருந்திராத கற்பனையான இடங்களை வேதாகமத்தில் பதிவு செய்யவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

**5. வேதாகமும், உலக வரலாறும் இசைந்திருக்கின்றன.**

உதாரணமாக, வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் சம்பவங்கள் உலக வரலாற்றிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் உலகின் வெவ்வேறு வரலாறுகளை வாசிக்கும் போது இதைத் தெரிந்து கொள்ள முடியும். வேதாகமம் கட்டுக்கதைகளின் புத்தகமாயிருந்தால் இது எப்படி சாத்தியம்?

**6. வேதாகமத்தை மனிதன் மாத்திரம் எழுதியிருக்க முடியாது.**

ஏனென்றால், இதில் இடம் பெற்றுள்ள பல காரியங்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவைகளாயிருகின்றன. மனிதன் மாத்திரம் இதை எழுதியிருந்தால் ஏன் இதுவரை எந்த மனிதனும் இதற்கு இணையான புத்தகத்தை எழுதவில்லை? ஒருவேளை மனிதன் இதை எழுதியிருந்தால், இன்றைய தேதியில் யாரோ ஒருவர் இதை விட சிறப்பான புத்தகத்தை எழுதியிருப்பார்களே!

7. **வேதாகமம் ஓர் அருமையான ஒருங்கமைவுள்ள புத்தகம்**

வேதாகமம் சுமார் நாற்பது ஆசிரியர்களால், சுமார் 1600 வருடங்களாக பல்வேறுப்பட்ட எழுதப்பட்டிருந்தாலும் கூட,

எல்லோராலும் ஓரே மாதிரியாக எழுதப்பட்ட ஒருங்கமைவுள்ள புத்தக மாயிருக்கிறது. தேவன் வேதாகம எழுத்தாளர்களை வழிநடத்தாமல் இருந்திருந்தால். இது எப்படி சாத்தியமாயிருக்கும்?இடங்களிலிருந்து

8. வேதாகமம் பல தீர்க்கதரிசனங்களை மட்டும் உள்ளடக்கவில்லை அவைகள் எப்படி நிறைவேறின என்பதையும் வெளிப்படுத்தி யிருக்கிறது. உதாரணமாக, [யோவேல் 2:28,29] வசனங்களில் இதன் ஆசிரியர் மாம்சமான யாவர் மேலும், தேவன் தம்முடைய ஆவியை ஊற்றும் காலத்தைப் பற்றி பேசுகிறது. பின்பு அப்போஸ்தலருடைய நடபுகள் புத்தகத்தில் நாம் பார்க்கும்போது, அங்கே பேதுரு தீர்க்க தரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது என்று சொன்னார். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப் பற்றி ஏராளமான தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாமே புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப்பட்டிருக் கின்றன [ஏசாயா 13:5 மற்றும் லூக்கா 22:63,64] வனங்களை வாசிக்கவும்.

9. வேதாகமம் பலவிதமான சோதனைகளின் மத்தியிலும் அது தேவனுடைய வார்த்தையாக நிலைத்து நிற்கிறது. வேதாகமம் பல சத்துருக்களை சந்தித்து காலத்தால் அழியாததாக நிற்கிறது. அது பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. நவீனகால மொழியாக்கத்தை பண்டையகால தோல்சுருள்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் வேதாகமத்தின் மாறாத தன்மை மனதில் பதியும்.

10. வேதாகமம் மனிதனுடைய மாபெரும் கேள்விகளுக்கு பதில் அளிக்கிறது. மனிதன் எங்கே இருந்து வந்தான்? மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன? அவன் எங்கே போய்க்கொண்டிருக்கிறான்? இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்கும் ஓரே புத்தகம் வேதாகமம்தான் மனிதன் தேவனிடமிருந்து வந்தான் [ஆதியாகமம் 1:26-27]. மனிதன் தன்னுடைய சிருஷ்டிகரை மகிமைப்படுத்துவதே அவனுடைய வாழ்க்கையிள் நோக்கமாயிருக்கிறது [IIபேதுரு 4:11]. மனிதன் நிச்சயமாக பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ தன்னுடைய நித்தியத்தை கழிப்பான் [மத்தேயு 25: 46]

11. மற்றெந்த புத்தகத்தைக்காட்டிலும் இவ்வுலகில் மனிதன் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்துவது வேதாகமம் மாத்திரமே. உலகம் மிக மோசமான ஒன்றாக இருந்தாலும் கூட, வேதாகமத்தின் தாக்கத்தினாலேயே அது ஓரளவு நல்ல இடமாக இருக்கிறது. ✝

## தேவனுடைய வார்த்தை

# அறிந்தும், ஆனால் மறந்த அல்லது கண்டுகொள்ளாமல் விடப்பட்ட

# Known, But Forgotten or Ignored

Michael L. King

**ந**ம் வாழ்க்கையைப் பற்றியும், நலம் சார்ந்தவைகள் பற்றியும் பல தகவல்களைப் பெற்றுக்கொள்வது மனித இயல்பு போல் தெரிகிறது. ஆனால், ஏதோ சில காரணங்களுக்காக நாம் கற்றுக்கொண்டவை களைப் பெரும்பாலும் பின்பற்றுவதில்லை. இதே பலவீனங்கள் நாம் நம்முடைய ஆவிக்குரிய காரியங்களில் இடைபடும்போது நம்மை வாட்டி வதைக்கிறது. நாம் கற்றுக்கொண்ட பல காரியங்கள் நம் ஆத்து மாவுக்கடுத்த காரியங்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் அறிந்திருந்தாலும்கூட , முக்கியமற்ற காரியங்களில் நம் கவனம் சிதறுவதால் முக்கியமான ஆவிக்குரிய காரியங்களில் நம் பாதுகாப்பு ஆபத்துக்குள்ளாகிறது.

இது மனித இயல்பு என்பதை தேவன் அறிந்திருந்தபடியால் மனி தன் ஆவிக்குரிய காரியங்களில் ஆவலாயிருந்து, முதல் காரியங் களுக்கு முக்கியத்துவம் கொடுக்க பலமுறை திரும்ப திரும்ப எச்சரிப்புகளை விடுத்திருக்கிறார். யாக்கோபு இந்த நிருபத்தை யாருக்கு எழுதினாரோ அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் (யாக்கோ 4:7). பவுல் தீமோத்தேயவுக்கு இவ்விதமாக புத்திச்சொன்னார்.

- இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டி ஒன்றுக்கும் பிரயோஜனமில்லால் கேட்கிறவர்களை கவிழ்த்துப் போடுகிறதற் கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்து புத்தி சொல்லு (II தீமோத்தேயு 2:14).

- இதினிமித்தம் இவைகளை நீங்கள் அறிந்தும் நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும் உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன் (II பேதுரு 1:12).

- நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும் நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில் கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார் (யூதா 1:5).

சத்தியத்தை அறிந்து அதை நன்கு புரிந்து கொண்டவருக்கு ஒரு மிகப்பெரிய கடமையிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் எபேசு பட்டணத்து சபை ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்டமைக்காக குற்றஞ்சாட்டப்பட்டது [வெளி 2:4].சத்தியத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்பு நமக்கு கிடைத்து, அதை நாம் நன்றாகப் புரிந்துகொண்டால் நாம் அதன்படி செய்யாமலிருக்க சாக்கு போக்கு சொல்லவே இடமில்லை. [அப்போஸ்தலர் 17:30]; [எபிரெயர் 6:4–6]. இஸ்ரவேலின் ஒட்டுமொத்த வரலாற்றை நாம் புரட்டிப்பார்த்தால் அவர் களுக்கு தேவனைப்பற்றிய அறிவு அதிகமாயிருந்தும் அவர்கள் தேவ னுக்கு விரோதமாக கலகம் செய்தபடியால் அவர்களுடைய வாழ்க்கை குழப்பமும்,அலைச்சலும் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

உபாகமம் 9:23 வசனத்தை வாசிக்கவும். தேவன் மோசேக்கு இஸ்ர வேல் ஜனங்கள் எப்படி வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமிக்குள் பிர வேசிக்க வேண்டுமென்பதைக்குறித்தும் புதுப்பிக்க வேண்டுமென்ப தைக் குறித்தும் மோசோக்கு கட்டளையிட்டபோது, அவர்களுடைய மறதியும், கலக்கமும் அங்கே அப்பட்டமாக வெளிப்படுத்தப்பட்டது. அங்கே மோசே இஸ்ரவேலர்களை கடுமையாக குற்றஞ்சாட்டினார். [உபாகமம் 9:24]. **நான் உங்களை அறிந்த நாள்முதற்கொண்டு நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறவர் களாயிருந்தீர்கள்.** இப்புத்தகத்தின் பல அதிகாரங்களில் நினைப் பாயாக என்னும் வார்த்தை பல முறை வருகிறது இஸ்ரவேல் ஜனங்கள் அடிக்கடி மறப்பதாலும் அறியாமலும் இருப்பதால்தான் இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. எபிரெய எழுத்தாளர் இதை மனப்பூர்வமான பாவம் என்று எச்சரிக்கிறார் [எபிரெயர் 10: 26] **சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்** [எபிரெயர் 10:26]. ரோமாபுரியில் தேவனைப்பற்றிய அறிவை சிலர் கொண்டிருந்தார்கள். ஆனால், தேவனை அறியும் அறிவைப்பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால் தகாதவைகளைச் செய்யும்படி , தேவன் அவர்களைக் கேடான சிந்தனைக்கு ஒப்புக்கொடுத்தார் [ரோமர் 1:28]. **இதே புத்தகத்தில் சிலர் நியாயப்பிரமாணத்தின் அறிவையும் சத்தி யத்தையும் காட்டிய சட்டமுடையவர்களாக எண்ணியதாக சொல் லப்பட்டிருக்கிறது** [2:20]. **அதேபோல் பவுல், தீமோத்தேயுவிடம் சிலர் தேவபத்தியின் வேஷத்தைத்தரித்து அதின் பலனை மறுத லிக்கிறவர்கள்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களையும் நீ விட்டு விலகு** என்று எச்சரித்தார்[II தீமோத்தேயு 3: 5].

தேவன் எப்போதுமே நாம் தேவையான காரியங்களை நினைவில் கொள்ளவேண்டும்மென்று விரும்புகிறார். நாம் எப்போதுமே உற்றுப் பார்க்கும்படி சுயாதீனப்பிரமாணம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது: வேதாகமம் ஒரு கண்ணாடியைப்போன்றது. எப்படி ஒரு கண்ணாடியைப் பார்த்து நம் முகத்தை சரி செய்து கொள்கிறோமோ அதே போல் வேதாகமத்தைப் பார்த்து நம் வாழ்கையில் மாற்றங்களை செய்து கொள்ளவேண்டும். (யாக்கோபு 1:23). ஆவிக்குரிய மறதியை தவிர்க்க மிகச்சிறந்த வழிகளுள் ஒன்று சக விசுவாசிகளோடு சேர்ந்து தேவனைப் ஆராதிப்பதாகும். அப்போது நாம் தவறாமல் தொடர்ச்சியாக ஒருவருக்கொருவர் புத்தி சொல்கிறோம் (எபிரெயர் 10:25). தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமா? (அப்போஸ்தலர் 2: 42-47). நன்மை செய்ய வும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருப்போம். இப்படிப்பட்ட பலிக ளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் (எபிரெயர் 13:16).

✝

---

## சபைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள உறவு

சபையைக் கட்டினவர் அவரே. மத்தேயு 16:18

தம்முடைய சபைக்காக இரத்தத்தைச் சிந்தினார் (அப்போஸ்தலர் 20:28)

கீழ்ப்படிகிற சபைக்கு அவர் தலைவராயிருக்கிறார் (எபேசியர் 5:23,24)

அவரே சபையின் இரட்சகராயிருக்கிறார். (எபேசியர் 5:23)

அவர் தம்முடைய சபையை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்திருக்கிறார் (எபேசியர் 5:26).

அவர் சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (எபேசியர் 5:27)

அவர் தம்முடைய சபையில் அதிக அன்பு கூருகிறார் (எபேசியர் 5:25)

# தேவனுடைய வார்த்தை

## நாட்டப்பட்ட வசனம் (யாக்கோபு 1:21)

## The Engrafted Word

Jimmy Clark

**ஆ**கையால் நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு உங்கள் உள்ளத்தில் நாட்டப் பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதுமாயிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்'' (யாக்கோபு 1:21).யாக்கோபு புத்தகத்தில் தேவனுடைய வார்த்தை பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. உதாரணமாக 1:18ல் **சத்திய வசனம்** என்றழைக்கப்படுகிறது (1:25)ல் சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணம் என்றழைக்கப்படுகிறது. மேலும், இப்புத்தகத்தில் தேவனுடைய வார்த்தை **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம்** (2:1); **ராஜரீகப்பிரமாணம்** (யாக்கோபு 2:8) நியாயப்பிரமாணம்(2:9); சுயாதீனப்பிரமாணம் ((2:12),வேதவாக்கியம் (2:23);சத்தியம் (3:14); பரத்திலிருந்து வருகிற ஞானம் (3:17)என்னும் பெயர்களில் அழைக்கப்படுகிறது.



இங்கே யாக்கோபு **ஆசிரியர் உள்ளத்தில் நாட்டப்பட்ட வசனம்** என்னும் வாக்கியத்தை பயன்படுத்துவதன் மூலமாக தேவவசனம் உள்ளார்ந்த மனிதனுக்குள் காணப்பட வேண்டிய ஒன்று என்றும் வலியுறுத்துகிறார். உள்ளத்தில் நாட்டப்பட்டது என்று தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தையின் அர்த்தத்தை மூலமொழியாகிய கிரேக்க மொழியில் பார்த்தால் உள்பிறந்த உள்ளவக்கப்பட்ட மற்றவர்களுடைய போதனைகளால் உள்பதியப்பட்ட என்னும் அர்த்தங்கள் கிடைக்கின்றன. ஆகவே, இவ்வார்த்தை போதிப்பவர்களால் நம் மனதினுள் பதியப்பட்டருக்கும் உபதேசம் என்று பொருள்படுகிறது. நம் உள்ளத்தில் நாட்டப்பட்டிருக்கும் தேவவசனத்தைப் பற்றி பல கருத்துகள் உண்டு. அவைகள் படிக்க உகந்தவைகள். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

### 1. ஒருவரை தடை செய்யும் தாக்கத்திலிருந்து விடுவிக்கிறது

தேவனுடைய வார்த்தைக்கு தேவன் அதை என்ன நோக்கத்திற்காக உண்டாக்கினாரோ அதை நிறைவேற்றும் வல்லமை உண்டு

என்பது உண்மையாயிருந்தாலும் கூட (ஏசாயா 55:10;11; ரோமர் 1: 16) அதன் முழுமையான பலனை அடைய அது சரியான இருதயத்தில் விதைக்கப்பட வேண்டும். விதைக்கிறவனுடைய உவமை இவ்வுண்மையை பல விதங்களில் விளக்குகிறது (லூக்கா 8:5-15) இங்கே அழுக்கு என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தை (யாக்கோபு 1:21) துன்மார்க்கமான அல்லது ஒழுக்க ரீதியாக மோசமான எந்த ஒரு காரியத்தையும் குறிக்கிறது. இது கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களின் பதில் சொன்ன வார்த்தைகளை நமக்கு நினைவு படுத்துகிறது. இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டா யிருக்கிறபடியினால் பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாக்குதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் (II கொரி 7:1) சுத்தமான தேவனுடைய வார்த்தையை இவ்வுலகத்தின் அசுத்தங்களோடு நாம் கலக்க முடியாது. (யாக்கோபு 1:27)ல் நாம் பார்க்கிறபடி உலகத்தால் கறைபடாதபடிக்கு நம்மை காத்துக்கொள்வதுதான் சுத்தமாயிருப்பது என்பதன் பொருளாயிருக்கிறது. ஒருவருடைய உள்ளத்தில் நாட்டப்பட்ட வார்த்தை பலன் கொடுக்க வேண்டுமென்றால் அந்த நபர் எதிர்மறையான தாக்கங்களை தன்னை விட்டு முற்றிலுமாக அகற்ற வேண்டும்.

**2. வசனத்தை சாந்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்**

இங்கே ஏற்றுக்கொள்ளுதல் என்னும் வார்த்தை வரவேற்றல் என்னும் பொருளைக் கொடுக்கிறது.(யாக்கோபு 1:21).சாந்தம் எனும் மென்மையான பண்பு தேவனுடைய வார்த்தை ஒருவருடைய இருதயத்தில் வசிக்க இடத்தைக் கொடுக்கிறது. வசனத்தை ஏற்றுக் கொள்பவருக்கு சத்திய வசனம் எவ்வளவு விஷேசமானது ! (யாக்கோபு 1: 18). இதைப் பார்க்கும்போது கொர்நேலியு, எத்தியோப்பிய மந்திரி, சவுல் லீதியாள் பிலிப்பிய சிறை அதிகாரி ஆகியோர் நம் கண்களுக்கு முன்பாக வருகிறார்கள்.

**3. இரட்சிக்கும் வார்த்தையின் வல்லமையை அடையாளங்காணுங்கள்.**

யாக்கோபு தேவனுடைய வார்த்தைக்கு ஆத்துமாவை இரட்சிக்கும் வல்லமை உண்டு என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறார். தேவன் எப்பொழுதுமே தம்முடைய வார்த்தை மூலமாகத்தான் மனிதனை இரட்சித்து வருகிறார்(ரோமர் 1:16). ஒருவர் தன்னை குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கும் போது அது இரட்சிப்பின் திட்டத்தையும் சபையின் அடையாளத்தையும், ஆராதனையில் தேவனை அணுக வேண்டிய முறையையும் அறிந்து கொள்ள செய்கிறது. வேதாகமம் உண்மையாகவே வெளிச்சமாக இருக்கிறது (சங்கீதம் 119: 105) (II தீமோத்தேயு 1:10) ✝

# தேவனுடைய வார்த்தை

## வார்த்தையை பகுத்துப்போதிப்பதற்கு வேதாகமத்தை சரியாகப் படிப்பது அவசியமாகிறது

## Rightly Dividing The Word Requries Proper Bible Study

David R. Kennry

வேதாகமத்தை படிப்பதைக்குறித்து இரண்டு மிதமிஞ்சிய கருத்துக்கள் உண்டு. ஒரு கருத்து வேதவித்தகர்கள் அல்லது வேத ஞானிகளின் உதவியின்றி வேதாகமத்தை ஒரு சராசரி மனிதனால் புரிந்துகொள்ள முடியாது என்பதாகும். இதைத்தான் மதகுருக்கள் இல்லாமல் சாதாரண மக்களால் வேதாகமத்தை சரியயாகப் புரரிந்துகொள்ள முடியாது என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் வேதாகமம் இதைப்பபற்றி எதையும் சொல்லவில்லை. வேதாகமத்தை படிப்பதைக்குறித்து மற்றுமொரு கருத்து வேதாகமத்தை யார் வேண்டுமானாலும் சர்வசாதாரணமாக வாசித்துப் புரிந்து கொள்ள முடியும் என்பதாயிருக்கிறது. ஆனால் உண்மை இவ்விரு மிதமிஞ்சிய கருத்துக்களுக்கு இடையில் உள்ளது. சரியான முயற்சியை பிரயோகித்தால் எல்லோரும் வேதாகமத்தைப் புரிந்து கொள்ள முடியும். ''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு'' (தீமோத்தேயு 2:15). ஜாக்கிரதையாயிருப்பதற்கு முயற்சி அவசியமாயிருக்கிறது. ஊழியக்காரன் என்னும் பதம் இக்கருத்தை மேலும் வற்புறுத்துகிறது. தேவனைப் பிரியப்படுத்துவதற்கும், கடைசி நாளில் இரட்சிக்கப் படுவதற்கும் தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை கற்றுக் கொள்வதற்கு வேதாகமத்தைப் படிக்க ஒருவர் சரியான முயற்சியை எடுக்க வேண்டும். வசனத்தைததப் பகுத்து போதிப்பதென்பது வசனத்தை சரியாக கையாள்வது, சத்தியத்தை சரியாகப்போதிப்பது என்று பொருள் படும். இதற்கு சரியான முறையில் வேதாகமத்தை படிப்பது அவசியமாகிறது. நிச்சயமாகவே தேவன் நமக்கு தந்திருக்கிற வார்த்தைகளை நாம் கவனமாக கவனிக்க வேண்டும். கவனமாக கையாளவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

ஒரு வேத மாணவன் வேதாகமத்தில் தேவன் மனிதனோடு எப்படி இடைப்பட்டார் என்று உணர்ந்து கொள்ள வேண்டும். முதல் காலம், பிதாக்களின் காலம் (தேவன் குடும்பத்தலைவர்களோடு இடைப்பட்டார்). மோசேயின் காலம் (தேவன் மோசேக்கும் இஸ்ரவேலருக்கும் பிரமாணத்தை கொடுத்த காலம்); இப்போது

கிறிஸ்தவ காலம் (தேவனுடைய குமாரன் புதி உடன்படிக்கையை எல்லோருக்கும் உண்டாக்கின காலம்) இன்றைய நாட்களில் நாமெல்லோரும் புதிய ஏற்பாட்டின்படி தான் நியாயந்தீர்க்கப் படுவோம். சிலர் தவறுதலாக பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் குழப்பி பழைய பிரமாணத்தின் நடைமுறைகளை புதிய பிரமாணத்தின் நடைமுறைகளை புதிய பிரமாணத்திற்குள் கொண்டு வருகிறார்கள். இவைகள் வேறுபட்ட உடன்படிக்கைகள், இரண்டும் ஒன்றல்ல.

நாம் வேதாகமத்தை சரியாகப் படிக்கும் போதுதான் உடன் படிக்கைகள் கட்டளைகள் குறித்த சரியான கண்ணோட்டம் நமக்கு ஏற்படும். கூடுதலாக, கீழ்ப்படுவேன், கட்டளைகள், பின்பற்ற வேண்டிய உதாரணங்கள் சில வேளைகளில் சந்தர்ப்பத்தைப் பொறுத்து ( தவிர்க்க வேண்டியவைகள்) ஆகியவைகளை உணர்ந்து வசனத்தை தர்க்கரீதியாக அணுகும் முறையை ஒருவர் கொண்டிருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தையை கையாள்வதில் பலரால் அலட்சியப் படுத்தப்படும் ஒருவிதி மௌனமாயிருக்கும் வேதவாக்கியங்களை மதிப்பதுதான். சிலர் நாம் ஒரு செயலைச்செய்ய முடியாதென்று வேதாகமம் சொல்லவில்லை என்றார். நாம் அச்செயலைச் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், நாம் அச்செயலை செய்ய முடியாதென்று வேதாகம உதாரணம் கட்டளை தொடர்பு போன்றவைகளை வேதாகமத்தில் நாம் தேட வேண்டும். வேறு விதமாகச் சொன்னால் நான் இதைச் செய்ய முடியாதென்று வேதாகமம் சொல்லவில்லை என்று சொன்னால் நாம் குறி தவறுகிறோம். இங்கே கேள்வி என்னவென்றால் இக்காரியத்தைச் செய்ய வேதாகமம் எங்கே அங்கீகரிக்கிறது? நாம் எந்தெந்த காரியங்களை செய்யக்கூடாதென்று ஒவ்வொன்றாக தேவன் நமக்குச் சொல்லுகிறதாக இருந்தால் வேதாகமம் எவ்வளவு நீளமாயிருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

நம்மைத் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி நாமெல்லோரும் வேதாகமத்தை சரியாகப் படிக்க வேண்டும்.

அநேகரைப் போல, நாங்கள் தேவ வசனத்தை கலப்பாய் பேசாமல் துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்து வுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் (II கொரி 2:17).

# செய்யாமல் விட்டுவிடுதல் எனும் பாவம்

**Lonise Buffingtton**

கர்த்தாவே தொண்ணூறில் நான் தனியாக வாழ்கிறேன்
உம்முடைய சிங்காசனத்திற்கு முன்பாக நான் பணிந்து குனிகிறேன்
நான் செய்யத் தவறிய காரியங்களைக் குறித்த துக்கமான எண்ணங்களை உம்முடைய சமூகத்தில் தாழ்மையோடு கொண்டு வருகிறேன்.


ஒரு கட்டத்தில் நான் என்னையே தவற விட்டு விட்டு
ஆவிக்குரிய பாதையை விட்டு அலைந்து திரிந்து கொண்டிருந்தேன்
இருந்தபோதிலும் என் மனநிலையில் உம்மை நான்
அலட்சியப்படுத்தினேன் என்பதை அறிந்து அவமானப்படுகிறேன்.

என் வாலிபப் பிரயாத்தில் சுவிசேஷ சத்தியத்திலிருந்து
நான் விலகாதிருந்திருந்தால் இன்னும் அதிகமாக
உமக்கென்று உழைத்திருக்க முடியும்.
என் பாடுகள் என் பாதையை மங்கலாக்கி
என் ஜெபத்திற்கு தடைக்கற்களாக இருக்கின்றன.


மரணப்பிடியை நான் எதிர் கொண்டபோது
நான் எனக்குள் வந்தேன்
குற்ற உணர்வு என்னை உறுத்திக் கொண்டே இருந்தது
விட்டுவிடுதல் என்பது தொடர் பாவமாக மாறிவிட்டது

கர்த்தாவே நான் என்னை இழந்து விட்டேன்
என்று சொல்ல வெட்கப்படுகிறேன்
உம் துதிபாடாமல் வீணடித்த வருடங்களுக்காக,
ஆத்துமாக்களை சந்திக்காத வருடங்களுக்காக
துன்மார்க்கமாய் வீணடித்த நாட்களுக்காக என்னை மன்னித்து
ஆத்துமாக்களை உம் சிலுவையினிடத்தில்
கொண்டு வர உதவிச்செய்யும்.

# ராஜ்ஜியம் / சபை ஸ்தாபிக்கப்பட்டது



# ஞானஸ்நானம் & இரட்சிப்பு




விளக்கம் : நாம் கிறிஸ்துவின் நாமத்திற்க்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம். அங்கே அவருடைய அதிகாரத்திடத்தில் நாம் போய் சேருகிறோம் அது அவருடைய நாமத்தில் நமக்கு இரட்சிப்பைக் கொண்டுவருகிறது.

நாம் அவருடைய சரீரத்திகுள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம். சரீரம் சபையாக இருக்கிறபடியால் நாம் சபையிடத்தில் சேருகிறோம். அது அவருடைய சபையில் இரட்சிப்பைக் கொண்டுவருகிறது.

நாம் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம், அங்கே கிறிஸ்துவின் இரத்தத்தினிடத்தில் சேருகிறோம், அது அவருடைய இரத்தத்தில் இரட்சிப்பைக் கொண்டு வருகிறது.

நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்வுக்குள் இருக்கிறபடியால், இந்த ஆசீர்வாதங்களிடத்தில் நாம் சேருகிறோம்.

இரட்சிப்பு

## இட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? அது சில காரியங்களைப் பொறுத்து...

## What Must I Do To Be Saved? Well It Depends...

*Kevin. L. Moore*

இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்கும் ஒருவருக்கு வேதாகம பதில் என்னவாயிருக்கும்? இதற்கான பதில் கேள்வியை யார் கேட்கிறார், அவருக்கு தேவனிடத்தில் எப்படிப்பட்ட உறவு இருக்கிறது என்பதைப் பொறுத்து அமையும். இக்கேள்வி அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் மூன்று சந்தர்ப்பங்களில் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒவ்வொரு நேரமும் வித்தியாசமான பதில்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது [அப்போஸ்தலர் 2:37; 16:30;22:10]



ஒரு அவிசுவாசி, முதலாவது தேவனையும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும் [அப்போஸ்தலர் 14:15; 17:23-27] அப்போஸ்தலர் 16:30-31]. ஒருவர் இந்த விசுவாசத்தின் ஆரம்பப் படிகளை எடுத்து வைக்காமல் இரட்சிப்பின் காரியங்களில் முன்னே போகவே முடியாது. விசுவாசிப்பதற்கு முன்பாக தேவனுடைய வார்த்தை பரிமாறி கொள்ளப்பட வேண்டும். புரிந்து கொள்ளப்பட வேண்டும், ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் [அப் போஸ்தலர் 2:37;16:32; 17:23,24]. தேவச் செய்தி ஏற்றுக் கொள்ளப்பட்டு, விசுவாசம் உண்டாகும் போது [ரோமர் 10:17] விசுவாசிக்கும் அந்த நபர் அடுத்து, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?

கிறிஸ்து இயேசுவின் மேல் விசுவாசம் வைக்கும் ஒருவர் அந்த விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். துரதிஷ்டவசமாக, கிறிஸ்துவை விசுவாசிக்கும் சிலர் அவரை அறிக்கையிடுவதில்லை

[யோவான் 12:42]. இன்னும் சிலர், கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமல் அவரை அறிக்கையிடுகிறார்கள் [மத்தேயு 7:21].

ஒரு விசுவாசி மனந்திரும்ப வேண்டும். அதாவது, பாவத்திலிருந்து முற்றிலுமாக திரும்ப வேண்டும் [அப்போஸ்தலர் 2:38;17:30;26:20]. மனந்திரும்புதல் இல்லையென்றால் இரட்சிப்பு சாத்தியமில்லை [லூக்கா 13:35; 24:47]. விசுவாசிக்கும் ஒருவர் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு திரும்பும் போது அடுத்து மனந்திரும்பிய இந்த விசுவாசி இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

விசுவாசத்தை அறிக்கையிட்ட பிறகு [I தீமோத்தேயு 6:12] மனந் திரும்பிய ஒரு விசுவாசி பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற வேண்டும் [அப்போஸ்தலர் 2:38;22:16 ரோமர் 6:1-5]. ஜலத்தினாலும், ஆவியினாலும் ஒருவர் பிறக்கவில்லையென்றால் அவர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது [யோவான் 3:5, 22,23] இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியாலும் [II தீமோத்தேயு 2:10] ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் வைக்கிறபடியாலும் [ரோமர் 6:3; கலாத்தியர் 3:27] ஞானஸ்நானம் ஒருவருடைய இரட்சிப்புக்கு அவசியமாகிறது [மாற்கு 16:15,16; I பேதுரு 3:20,21]. ஞானஸ்நானத்திற்கு பிறகு மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்ற ஒருவர் இரட்சிப்பில் நிலைத்திருக்க அடுத்து என்னச் செய்ய வேண்டும்?

மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்ற ஒருவர் தொடர்ந்து அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும் [அப்போஸ்தலர் 2:48; 14:22]. ஞானஸ்நானத்திற்கு பிறகு பாவம் செய்தால் அதை ஒப்புக் கொண்டு உடனே மனந்திரும்ப வேண்டும். அப்போஸ்தலர் 8:22; I யோவான் 1:7-10]. மேலும், அந்த நபர் கிறிஸ்துவின் சபையில் செயல்படுகிற அங்கத்தினராக இருந்து, ஆவிக்குரிய காரியங்களை கற்று அதிலே வளர்கிறவராக இருக்க வேண்டும் [ரோமர் 12 : 118; I கொரிந்தியர் 12:12-27].

இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? இதற்கான விடை இக்கேள்வியை யார் கேட்கிறார் என்பதைப் பொறுத்து அமையும். அவிசுவாசி விசுவாசிக்க வேண்டும். ஒரு விசுவாசி தன் நம்பிக்கையை அறிக்கையிட வேண்டும். ஒரு விசுவாசி மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்பிய விசுவாசி ஞானஸ்நானம் பெற்று விசுவாசி வேத வாக்கியங்களின்படி உண்மையுள்ள வாழ்க்கையை தொடர்ச்சியாக வாழ வேண்டும்.

இரட்சிக்கப்பட நான் என்னச் செய்ய வேண்டும்? இதற்கான பதில் கேள்வியை யார் கேட்கிறார், அவருக்கு தேவனிடத்தில் எப்படிப்பட்ட உறவு இருக்கிறது என்பதைப் பொறுத்து அமையும். ✝

இரட்சிப்பு

# தேவனுடைய அஸ்திபாரம்

## The Foundation of God

*Tom Holland*



ஒரு கட்டிடத்திற்கு அஸ்திபாரம் மிக முக்கியமானது. அதுபோல, ஒருவருடைய வாழ்க்கையில் அஸ்திபாரங்கள் மிகவும் அவசியமானவைகள். மிகவேகமாக மாற்றங்கள் ஏற்பட்டு வரும் இக்காலகட்டத்தில் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது என்று அறிந்து கொள்வது மறு நிச்சயம் செய்து கொள்வதாகிறது [II தீமோ2:19].

முதல் நூற்றாண்டில் நம் சகோதரர்கள் நாம் இந்நாட்களில் மத சம்பந்தமான தவறுகளை எதிர்கொள்வது போல் பல தவறுகளை எதிர் கொண்டார்கள். சத்தியத்தைவிட்டு விலகிச் சென்ற பிரசங்கிகள் போதகர்கள் இருக்கத்தான் செய்தார்கள் [II தீமோத்தேயு 2:18]. சத்தியத்தை அவர்கள் நிச்சயமில்லாமல் பேசி, அதை திரித்து, புரட்டி, சீர்கேடாக நடந்து கொண்டார்கள். இருந்த போதிலும், சத்தியத்தில் தவறு செய்தவர்கள் தேவனுடைய அஸ்திபாரத்தை அசைக்கவில்லை.

கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் [II தீமோத்தேயு 2:19]. கர்த்தரை நன்கு அறிந்தவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். கர்த்தரால் அறியப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபடியால் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள் [கலாத்தியர் 3:26,27]. அதே போல் எத்தனை எதிர்ப்புகள், இடர்பாடுகள், சோதனைகள், பாடுகள் வந்தாலும் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கிற உண்மையுள்ள ஜனங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் [யோவான் 15:4].

கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார் என்பது எத்தனை அலாதியானது. கர்த்தர் தம்முடையவர்களை அறிந்து, அவர்களிடத்தில் அன்பு கூருகிறார் என்பது எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது.

நியாயத்தீர்ப்பு நாளிலே கர்த்தர் நம்மைப் பார்த்து நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை என்று சொன்னால் எவ்வளவு சோகமாயிருக்கும்? (மத்தேயு 7:23). ஆனால், கர்த்தர் நம்மை அறிந்து நம்மை நித்திய நித்தியமாக ஏற்றுக்கொள்வது எத்தனை ஆனந்தமாக இருக்கும்!

✝

---

*கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டினால் ஆளப்படுகிறார்களா?*

- அது இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டது (உபாகமம் 5:1-3)
- நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே யாரும் நீதிமானாக்கப்படுவதில்லையே (கலாத்தியர் 2:16).
- அது சிலுவையின்மேல் ஆணியடிக்கப்பட்டது (கொலோசெயர் 2:14).
- பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது (எபிரெயர் 8:13).
- அது உறுதியானதாயிருக்கிறது (எபிரெயர் 11:27).

# வசன ஆராய்ச்சி

- பவுலால் கேள்விப்பட்ட கொரிந்தியர் மத்தியில் காணப்பட்ட பாவம் என்ன? [5:1]

- அதைக்குறித்து கொரிந்தியர் என்ன செய்தார்கள்? அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்?[5:2]

- நான் சாரீரத்தினாலே உங்களுக்கு ...................... ஆவியினாலே உங்களோடேகூட ....................., இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறது போல [5:3]

- பாவம் செய்தவன் சம்மந்தமாக கொரிந்தியர் என்ன செய்ய வேண்டியதாயிருந்தது? [5:45]

- பவுல் பாவத்தை எதோடு ஒப்பிடுகிறார்? [5:6]

- கொஞ்சம் ...................... பினசந்தமா முழுவதையும் ............. அறியீர்களா? [5:6]

- நம்முடைய பஸ்கா யார்? [5:7]

- கிறிஸ்தவர்களாகிய நாம் ........................... ...................... என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம் [5:8]

- சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது கொரிந்து பட்டணத்து சபையார் என்னச் செய்யவேண்டுமென்று பவுல் சொல்கிறார்? [5:9–11]

- பவுல் இந்த வசனத்தில் வேறெந்தப் பாவங்களையெல்லாம் பட்டியிலிடுகிறார் [5:11]?

- நாம் ஏன் கிறிஸ்தவர்களல்லதவர்களை கிறிஸ்தவர்களைப் போல் நடத்தகூடாது? [5:12]

- யார் சபைக்குப் புறம்பே இருக்கிறவர்களை தீர்ப்பு செய்கிறார்? [5:13]

# I கொரிந்தியர் 5

உங்களுக்குள்ளே விபச்சாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக் கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபச்சாரமாயிருக்கிறதே. இப்படிப்பட்ட காரியஞ் செய்தவனை நீங்கள் உங்களை விட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள். நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடே கூட இருக்கிற வனாய், இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறது போல , நீங்களும், என்னுடைய ஆவியும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடி வந்திருக்கையில், அப்படிப் பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும் படி மாமிசத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனை சாத்தானுக்கு ஒப்பு கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு செய்கிறேன். நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாகுமென்று அறிவீர்களா? ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிற படியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும் படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள்; ஏனெனில் நம்முடைய பங்காவாகிய கிறிஸ்து நமக்காக பயிரிடப்படுகிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே கலந்திருக்கக் கூடாதென்று நிபத்தில் உங்களுக்கு எழுதினேன். ஆனாலும் இவ்வுலகத்திலுள்ள விபச்சாரக்காரர் பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கண்டாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கப் போக வேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனெனப்பட்ட ஒருவன் விசாரக்காரனயாவது பொருளாசைக்காரனாவது விக்கிரகாராதனைக்காரனையாவது, உதாசினையாவது, வெறியாரை யாவது, கொள்ளைக்காரனையாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது. அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தீர்ப்பு செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிறவர்களை குறித்துக் தேவனே தீர்ப்பு செய்வார். ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள்.

குறிப்பு: இவ்வசனப்பகுதியில் பவுல் சபை எப்படி தன் அங்கத்தினர்கள் மத்தியில் காணப்படும் பாவத்தை எப்படிப் கையாள வேண்டுமென்று விவாதிக்கிறார். பாவத்தைக் கண்டு கொள்ளாமலும், அதை குறித்து மேன்மை பாராட்டுவதை விட்டு விட்டு வெளிப்படையாகவும், தொடர்ச்சியாகவும் பாவத்தில் இருப்பவர்களிடமிருந்து சபை ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும் இவர் சொல்கிறார். இது பலருக்கு கடுமையாகத் தோன்றலாம். ஆனால், இங்கே நோக்கம் அவர்கள் மனந்திரும்பி, தங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கும் படிக்கு அவர்கள் பாவத்தைக் கண்டித்து உணர்த்துவதாகும். சபைக்குள்ளேயே பாவம் என்பது ஞானமாக, உடனடியாக கையாளப்பட வேண்டும். இல்லையென்றால் கடைசியாக அது ஒட்டு மொத்த சபையையும் பாதித்துவிடும். இங்கே பாவம் புளித்தமாவோடு ஒப்பிடப்பட்டிருக் கிறது. கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?

இங்கே பவுலின் அறிவுரைகள் கிறிஸ்தவர்களுக்கு மட்டுந்தான் பொருந்தும், இதே அளவுகோலை எல்லோருக்கும் பொருத்திப் பார்த்தால் கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தை விட்டு நீங்கி போக வேண்டியதாயிருக்கும். கிறிஸ்தவர்களல்லாதவர்கள் கிறிஸ்தவர் களைப் போல் வாழவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. கிறிஸ்துவின் சரீரத்திற்கும் புறம்பே இருக்கிறவர்களை தீர்ப்பு செய்வது நம் பொறுப்பல்ல. தேவனே தீர்ப்பு செய்வார். ஆனால் சபைக்குள்ளிருப்பவர்களை நாம் தீர்ப்பு செய்யும் படியாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ✝

**வேறு இல்லை**

**கிறிஸ்துவைத் தவிர வேறு ஆகமம் இல்லை**

**வேதாகமத்தைத் தவிர வேறு புத்தகம் இல்லை**

**கிறிஸ்துவின் வழியைத் தவிர வேறு வழி இல்லை**

**கிறிஸ்துவின் சபையைத் தவிர வேறு சபை இல்லை**

**கிறிஸ்துவின் போதனையைத் தவிர வேறு போதனை இல்லை.**

இரட்சிப்பு

# பரலோகம்

# Heaven

*Perry. N. Hall*

**ஆ**பிரகாமும், சாராளும் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற்றுக்கொள்ளாத போதும் கூட விசுவாசத்தில் தளர்ந்து போகவில்லை. **விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்** [எபிரெயர் 11:8-16]. **உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி,** என்ன ஓர் உன்னதமான எண்ணம்! [மத்தேயு 25:14-30] வசனங்களில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளில் உண்மையுள்ளவர்களுக்கு தேவனுடைய திட்டத்தை நாம் காண்கிறோம்.''நல்லது உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்''. இந்த இடத்திலும்,நீதிமான்களின் நித்திய வாசஸ்தலத்தைக்குறித்து இயேசு கிறிஸ்து அருமையாக,விவரமாக பேசியிருக்கிறார். துன்மார்க்கரிடமிருந்து முற்றிலுமாக மாறுபட்டு, நீதிமான்கள்,எப்போதும் சரியான உறவையும், ஐக்கியத்தையும் கொண்டிருப்பவர்களாக பேசப்பட்டிருக்கிறார்கள்.

கிரேக்க பெயர்ச்சொல்லான ouranos என்னும் வார்த்தை தேவனுடைய வாசஸ்தலத்தை விவரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த கிரேக்க பதத்திற்கு இணையான எபிரெய பதம் shamayim என்பதாகும். இதன் பொருள், **மேலான இடங்கள்** அல்லது **மேலே உள்ள உயரங்கள்** என்பவைகளாகும். இப்பதம் நமக்கு அதிகமாக காரியங்களைச் சொல்வதில்லை. ஆனால், புதிய ஏற்பாட்டில் காணப்படும் தகவல்கள் இரகசியத் திரையைக் கிழித்து இவ்வாழ்க்கைக்கு அப்பால் இருக்கும் அந்த அற்புதமான இடத்தை நமக்குப் படம் பிடித்துக்காட்டி சரியாக சிந்திக்கும் ஆற்றல் கொண்ட ஒவ்வொருவரையும் நல்ல போரட்டத்தைப் போராடி நித்திய ஜீவனை பற்றிக் கொள்ளும்படி தூண்டுகிறது [I தீமோத்தேயு 6:12].

மனிதனுக்கு தொன்றுதொட்டே கல்லறைக்கு அப்பால் என்ன என்னும் ஏக்கம் இருந்து வருகிறது. தேவனுடைய திட்டத்தில் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினால் வெளியரங்கமாக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார் [II தீமோத்தேயு 1:10].

தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி மனித சாயலானார் [யோவான் 3:13]. கிறிஸ்து பரமேறின உடனே பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார் [எபிரெயர் 8:1]. இன்றும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திலே தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்[I பேதுரு 3:22]. இப்போது உலகம் உண்டாகிறதற்கு முன்னே தேவனிடத்தில் தமக்கு உண்டாயிருந்த மகிமையினாலே மகிமைப்பட்டிருக்கிறார் [யோவான் 17:5].

பரலோகத்தில் வாசம் செய்யும் நீதிமான்களின் அனுபவம் அவர்களுடைய ஜீவனைப்பற்றிய காரியங்களில் வலியுறுத்தப்பட்டிருக்கிற பரலோக வாழ்வின் தரத்தை நாம் இவ்வுலக வாழ்வின் தரத்தோடு ஒப்பிட முடியாது. அது எவ்வகையில் பார்த்தாலும் இவ்வுலக வாழ்க்கையைக் கடந்த ஒரு மேலான வாழ்க்கையாகும். பரலோக வாழ்க்கை என்பது வெறும் மேலான வாழ்க்கை மட்டுமல்ல, அது நித்தியமானதும் கூட, நரகமும்கூட நித்தியமானதுதான். ஆனால், அது நித்திய வேதனையை உள்ளடாக்கியதாகும். மனித மனதால் பரலோகத்தைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. மனிதப்புரிந்து கொள்ளுதலின்படி சொல்ல வேண்டும் என்றால் வேதவாக்கியத்தில் பரலோகம் **இளைபாறுதலாக** விவரிக்கப் பட்டுள்ளது [எபிரெயர் 3:11:18;4:1,3,8,9]. **கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தங்கள் பிரயாசதங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்.** அந்த நித்திய வீட்டிலே பிரவேசிப்பதென்பது அங்கே போய் நாம் சோம்பேறித்தனமாக இருப்பதை குறிக்காது. இரவும் பகலும் நாம் கர்த்தரை மகிழ்ச்சியோடு சேவிக்க இவ்வுலகப் பாடுகளுக்குப் பிறகு புதுப்பிக்கப்பட்ட பெலனை பெற்றுக்கொள்வதாகும்.

மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன். அது இதோ மனுசர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன்தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். **அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமில்லை, துக்கமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது** [வெளி 21:34]. இங்கே தேவன் தம்முடைய ஜனங்களோடே வாசமாயிருப்பார். அவர்களோட ஐக்கியங்கொள்வார் என்று நாம் காண்கிறோம்! தேவன் தம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இவ்வுலகத்தோடு தொடர்புடைய துக்கம், வருத்தம், பாவம் போன்றவைகளை அனுமதிப்பதில்லை. அதிலும் குறிப்பாக, பாவம் பரலோகத்தில் பிரவேசிப்பதில்லை [வெளி 21:27].

புதிய எருசலேமாகிய, புதிய நகரம் அதன் உயரமான மதில்களால் முழுமையான பாதுகாப்பை அதின் ஜனங்களுக்கு கொடுக்கிறது. மனித கற்பனைக்கு எட்டாத அழகான உருவக நடையில் பரலோகத்தின் அழகு வெளிப்படுத்தின விசேஷம் 21: 10–22:5 வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அது ஓர் அழகான தோட்டம் அது ஒரு சொர்க்கபுரி. அங்கே ஜீவ விருட்சம் வளர்கிறது. வேதாகமத்தின் ஆரம்பத்தில் இழந்துபோன சொர்க்கத்தை நாம் காண்கிறோம்! ஆனால், வேதாகமத்தின் முடிவில், ஜெயங்கொள்கிற ஆட்டுக்குட்டியால் அவரால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் தேவனுடைய ஐக்கியத்திலும், அவருடைய நித்திய பிரசன்னத்திலும் பிரவேசிக்கிறார்கள். இழந்துபோன பரலோகம் மறுபடியும் மீட்கப்படுகிறது. பரலோகத்தைப் பற்றி நாம் அதிகமாக அறிய விரும்புகிறோம். ஆனால், நாம் இவ்வளவு தான் அறிந்து கொள்ள முடியும். அப்போஸ்தலனாகிய யோவானின் வார்த்தைகளை கவனியுங்கள். **நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரியதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும், அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.** [Iயோவான்3:1–3]. ✝

---

## கிறிஸ்துவில் வெற்றி

**வாழ்க்கையில் வெற்றி. கொலோ 1:27; எபேசியர் 6:17**

**மரணத்தில் வெற்றி. மத்தேயு 16:19 ஐஐ தீமோத்து1:10**

**நித்தியத்தில் வெற்றி. எபேசியர் 4:8; ஐஐ தீமோத்தேயு 4:8**

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

## ஜனங்கள் பிறக்கிற அந்த ராஜ்ஜியம் என்ன?





அந்த ராஜ்ஜியம் அவருடைய ஒரே சரீரமாகிய சபையாயிருக்கிறது. அதற்கு அவரே தலையாயிருக்கிறார்.

சபை என்பது குடும்பமா யிருக்கிறது. கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறது இது மணவாளனுடைய பெயரைத்தான் தரித்திருக்க வேண்டும்.

… ஒருவன் மறுபடியும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் (யோவான் 3:5)

… இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்…

… எல்லோரும் ஒரே ஆவியினாலே, ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (Iகொரிந்தியர் 12:13).

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபேசியர் 1:23).

அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோசெயர் 1:18).

இதினிமித்தம் நான் பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழுங்கால்படியிட்டு (எபேசியர் 3:14,15)

## அழைக்கப்பட்டவர்கள் ஒருமித்திருக்கும் படியாக அழைக்கப்பட்டவர்கள்

# Called Out and Called Together

*Royce Frederick*

இந்தக் கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன் (மத்தேயு 16:18). புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து (எபேசியர் 5:25).

சபை என்னும் தமிழ்ச்சொல் மூலபாஷையாகிய கிரேக்கத்தில் **எக்லீசியா** என்றழைக்கப் படுகிறது. ஆம், நாம் கிறிஸ்து வால் அந்தகாரத்திலிருந்து அல்லது பாவத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆனால், நாம் தனித்தனி வழிகளில் போகும்படியாக அழைக்கப்படவில்லை. எக்லீசியா என்னும் கிரேக்க கூடி வருதல் என்னும் பொருளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. முதல் நூற்றாண்டில் எக்லீசியா என்பது நகரத்தின் பல பாகங்களில் வசித்தவர்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுகூடி முக்கிய மான காரியங்களைக் குறித்து விவாதித்த மக்களைத்தான் குறித்தது.

அதே போல், இன்று கிறிஸ்து நாம் ஒன்றாக கூடும்படி நம்மை அழைத்திருக்கிறார். உலக முழு வதும் சுவிசேஷத்திற்கு கீழ்ப் படிந்தவர்கள் ஆவிக்குரிய (கொலோ1:18) பிரகாரமாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒன்று கூடுகிறார்கள். ஒரே ஒரு சரீரந்தான் உண்டு (எபேசியர் 4:4). கிறிஸ்துவே சரீரமாகிய சபைக்குத் தலை யாயிருக்கிறார் கொலோ 1:18)



நாம் இப்பூமியின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் சபை கூடி வரவேண்டுமென்று கிறிஸ்து போதித்திருக்கிறார். [ரோமர் 16:15,23]; [I கொரிந்தியர் 1:2;16:19] [கொலோ 4:15]. பிராந்திய சபைகள் எல்லாமே கிறிஸ்துவின் சபைகளாகத்தான் இருக்கின்றன [ரோமர் 16:16]. கிறிஸ்துதான் சபையைக் கட்டினார். சபைக்காக மரித்தார், அவரே அதற்கு தலையாயிருக்கிறார்.

மற்ற கிறிஸ்தவர்களோடு சபை கூடி வருவதன் நோக்கத்தையும், நன்மைகளையையும் நமக்கு காட்டியிருக்கிறார். நாம் வாழும்படி சபை கூடுகிறோம். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள் [அப்போஸ்தலர் 2:42]. ஓரிடத்தில் சபை கூடி தேவனுடைய வார்த்தையிலிருந்து போதனையை கேட்பது நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளர உதவுகிறது [அப்போஸ்தலர் 2:42]. அவர்கள் ஒரு வருஷ கால மாய்ச் சபையோடே கூடிவந்து. அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள் [அப்போஸ்தலர் 11:26]. I கொரி 1:10;4:17; II பேதுரு 3:16-18].

நாம் பகிர்ந்து கொள்ளும்படி கூடுகிறோம். அவர்கள் ஐக்கியத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் [அப்போஸ்தலர் 2:46] தேவனுடைய குடும்பத்தில் நாம் சகோதர சகோதரிகளாக இருக்கிறோம் நாம் ஒவ்வொருவருடைய தேவைகளையும், துக்கங்களையும் சந்தோஷங்களையும் பகிர்ந்து கொள்கிறோம். விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். [அப்போஸ்தலர் 2:44,45]. ஆதலால், ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவையவங்களும் கூடப்பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும் [I கொரிந்தியர் 12:26]. நாம் வாரத்தின் முதல் நாள்தோறும் காணிக்கை கொடுப்பதன் மூலமாக தேவனுடைய வார்த்தை விரிவடைய உதவுகிறோம் (I கொரிந்தியர் 16:12;II கொரிந்தியர் 9:7]. தேவனுடைய கிருபையால் நாம் ஒன்றிணைந்து அவருடைய மகிமைக்காக வேலை செய்கிறோம் [ ரோமர் 12:14-27]; I தெசலோனிக் கேயர் 1:13] [ எபேசியர் 3:20,21;] [ I பேதுரு 4:10,11].

முதல் நூற்றாண்டில் எக்லீசியா என்பது நகரத்தின் பல பாகங்களில் வசித்தவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுகூடி முக்கியமான காரியங்களைத் குறித்து விவாதித்த மக்களைத் தான் குறித்தது. அதே போல், இன்று கிறிஸ்து நாம் ஒன்றாக கூடும்படி நம்மை அழைத்திருக்கிறார்.

சபை

# நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாயிருக்கிறோம்?

## Why are we Members of The Church of Christ?

*Owen D. Olbricht*



பெரும்பாலான மக்கள் பிறருடைய காரியங்களில் அதிக ஆர்வமாயிருக்கிறார்கள். மற்றவர்கள் ஏன் ஒரு குறிப்பிட்டமதத்தில் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறவர்கள், நாம் ஏன் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாயிருக்கிறோம் என்று நம்மைப் பார்த்தும் கேட்கலாம். இது ஒரு நல்ல கேள்வியாயிருக்கிறது. இது வேதாகம பதிலுக்கு தகுதியாயிருக்கிறபடியால் அங்கத்தினர்களாய் நாம் பதிலளிக்க எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும் (I பேதுரு 3:15).

நாம் ஏன் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக இருக்கிறோம்? நாம் ஏன் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இருப்பதை தெரிந்து கொண்டோம்? அல்லது ஏன் குறிப்பிட்ட சில செயல் பாடுகள் மற்ற சபையின் அங்கத்தினராவதை விட கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக்கியிருக்கிறது?

### ஏன் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக வேண்டும்?

ஒரே ஒரு சரீரம் தான் உண்டு என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (ரோமர் 12:5; I கொரி 10:17;12:13; எபேசியர் 2:16; கொலோ 3:15) அந்த சரீரம் சபை தான் ( எபேசியர் 1:20-22; கொலோ 1:18,24). நாம் ஞானஸ்நானத்தின் மூலமாக அந்த ஒரே சரீரமாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கிறோம் (I கொரிந்தியர் 12:27)

வேறுவிதமாகச் சொன்னால், நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27) அந்த ஒரே சரீரமாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராகிறோம் (I கொரிந்தியர் 12:20,27).

இயேசு கிறிஸ்துவால் போதிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானம் நம்மை அந்த ஒரே சரீரத்தில் அங்கத்தினராக்குகிறது ( மத்தேயு 28:19, (மாற்கு 16:15,16) (I கொரிந்தியர் 12:13). நாம் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக சுவிசேஷத்தைக் கேட்டு அதை விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 16,15,16; அப்.2 :38)மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும். (ரோமர் 10:9,10). நாம் இயேசு கிறிஸ்துவின் ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றபடியால் தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினர்களாயிருக்கிறோம். நாம் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்கும் போது (யோவான் 3:5 இருளிலிருந்து கிறிஸ்துவின் ராஜ்யமாகிய சபைக்குள் மாற்றப் படுகிறோம் (மத்தேயு 16:18,19; கொலோசெயர் 1:13) இயேசு கிறிஸ்துவின் ஒரே ஞானஸ்நானம் நம்மை அவருடைய சரீரமாகிய சபையில் வைத்தபடியால் நாம் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவால் போதிக்கப்பட்ட ஞானஸ்நானம் நம்மை வேறொரு சபையில் வைத்திருந்தால் நாம் அந்த சபையின் அங்கத்தினர்களாகத் தான் இருப்போம்.

**நாம் ஏன் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இருப்பதைத் தெரிந்து கொண்டோம்?**

இயேசு கிறிஸ்துவுக்கு சபையோடு இருக்கின்ற உறவின் காரணமாக நாம் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இருக்கிறோம். கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள உறவு கீழ்க்கண்டவாறு உள்ளது.

- கிறிஸ்துவே சபையைக் கட்டினார் (மத்தேயு 16:18)
- கிறிஸ்துவே சபைக்காக இரத்தம் சிந்தினார் (அப்போஸ்தலர் 20:28)
- கிறிஸ்துவுக்கு அவருடைய சபையில் மகிமை உண்டு (எபேசியர் 3:21)
- கிறிஸ்து தமக்கு கீழ்ப்படிகிற சபைக்குத் தலையாயிருக்கிறார் (எபேசியர் 3:21)
- கிறிஸ்துவே சபையின் இரட்சகராயிருக்கிறார். (எபேசியர் 5:23)

- கிறிஸ்து தம்முடைய சபையில் அன்புகூருகிறார்.
(எபேசியர்5:25)
- கிறிஸ்து சபைக்காக தம்மையே ஒப்புக்கொடுத்தார்.
(எபேசியர் 5:25)
- கிறிஸ்து சபையை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிந்து பரிசுத்தமாக்குகிறார் (எபேசியர் 5:26)
- கிறிஸ்து சபையை கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதமான மகிமையுள்ள சபையாகத் தமக்கு முன் நிறுத்துவார் (5:27)
- கிறிஸ்து தம்முடைய சபையில் அங்கம் வகிப்பவர்களின் பெயர்களை பரலோகத்தில் எழுதியிருக்கிறார்.
(எபிரெயர் 12:22,23).

நாம் சபையில் அங்கத்தினர்களாக இருக்கும் காரணத்தால் பெற்றுக்தகொள்ளும் நன்மைகளினாலும் இயேசு கிறிஸ்துவோடும் நமக்கிருக்கும் உறவினாலும் கிறிஸ்துவின் சபையில் இருக்கிறோம்.

**மிக முக்கியமான காரணம்**

நாம் கடைசியாகப் பார்த்த மேலே குறிப்பிட்ட காரணந்தான் நாம் கிறிஸ்துவின் சபையில் இருப்பதற்கு மிக முக்கியமான காரணமாயிருக்கிறது. சபையானது முதற்பேறானவர்களால் உண்டானது. பழைய ஏற்பாட்டைப் போல் தலைச்சன்பிள்ளை குடும்பத்தில் விசேஷமானவர்கள். கிறிஸ்துவின் சபையானது பரலோகத்திலே ஜீவ புத்தகத்தில் பெயரெழுதப்பட்டிருக்கிற கிறிஸ்துவுக்குப் பிரியமான முதற்பேறானவர்களை உள்ளடக்கியதாகும் (எபிரெயர் 12:22,23).

கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக நம் நாமங்கள் ஆட்டுக்குட்டியின் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறபடியால் (வெளிபடுத்தின விசேஷம் 21:27) புதிய எருசலேமுக்குள் நாம் பிரவேசிப்போம் (வெளிபடுத்தின விசேஷம் 21:2). நம் பெயர்கள் அங்கே இல்லையென்றால் நாம் தண்டிக்கப்படுவோம் ஜீவ புத்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான் (வெளி 21:15).

நாம் கிறிஸ்துவின் சபைக்குள் இருக்கிறோம். ஏனென்றால், நாம் அதற்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். மேலும், நாம் அக்கினிக்கடலிலே தள்ளப்பட விரும்பவில்லை. நாம் அதற்குள் இருப்பதால் நிகழ்கால ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கிறோம், பரலோகத்தில் என்றென்றும் கிறிஸ்துவோடு நித்திய நித்தியமாக இருக்கவும் விரும்புகிறோம். ✝




# அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் மூலமாக தேடுதல் வேட்டை

*Scavenger Hunt Through Acts*

**Rebecca Rushmore**

- சபை ஸ்தாபிக்கப்பட்ட நாளில் எத்தனை யூதர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்?
- யூத அதிகாரிகள் இயேசுவைக் குறித்து பிரசங்கிக்கக்கூடாது என்று கட்டளையிட்டபிறகு பேதுரு, யோவான் மற்றும் மீதமுள்ள அப்போஸ்தலர்கள் எதற்காக ஜெபித்தார்கள்?
- தேவன் ஏன் அனனியாவையும், சப்பீராளையும் அடித்தார்?
- புழுப்புழுத்து இறந்தது யார்?
- பவுலும், பர்னபாவும் எந்தப் பட்டணத்திலிருந்து தங்கள் சுவிசேஷ பயணங்களைத் தொடங்கினார்கள்?
- பவுல் எந்தப் பட்டணத்தில் அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருந்த பலபீடத்தைக் கண்டார்?
- எபேசு பட்டணத்திலிருந்து எத்தனை பேர் தவறாக யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்?
- பவுலின் மனமாற்றச் சம்பவங்களை எந்தெந்த அதிகாரங்களில் ஒருவர் வாசிக்க முடியும்?
- தீர்க்கதரிசனம் சொல்லுகிற ஏழு குமாரத்திகளை உடைய சுவிசேசகனுடைய பெயர் என்ன?
- இப்புத்தகத்தில் ஐந்து பேரின் மனமாற்ற சம்பவம் விவரமாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

## வாழ்வதற்கான உபதேசம்
## சத்தியம் என்றால் என்ன?
## What Is Truth?
*Randall Caselman*

சத்தியம் என்றால் என்ன? என்று பிலாத்து கேட்டார். சத்தித்தை வாங்கு அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு என்று சாலமோன் ஞானி தமது வாக்கியங்களில் பதிவு செய்திருக்கிறார் (நீதி. 23:23). சத்தியத்தின் மதிப்பு மிகவும் விலையேறப்பெற்றது. அதைவிட்டு விலகுவது என்பது மிகவும் கடினமானதாகும். ஞானி சாலமோன் சத்தியத்தின் மதிப்பை அறிந்திருந்தபடியால் தான் கிருபையினாலும், சத்தியத்தினாலும் பாவம் நிவர்த்தியாகும் என்றார் (நீதிமொழிகள் 16:16).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று போதித்தார் (யோவான் 8:32) சத்தியத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படிவதன் மூலமாகத்தான் பாவத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இக்காரியத்தை தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு தெளிவு படுத்தியிருக்கிறார் (II தெசலோனிக்கேயர் 1:7–10) இங்கே நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கு என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். எனவே, சுவிசேஷத்திற்கு மறுப்பது அல்லது தவறுவது, சத்தியத்திற்கு கீழ்படியப் மறுப்பது அல்லது தவறுவது, சத்தியத்திற்குக் கீழ்படியப் மறுப்பது அல்லது தவறுவதற்குச் சமமாகும்.

சத்தியம் அறிந்து கொள்ளகூடியது, அடைந்து கொள்ளகூடியது, நம்பத்தகுந்தது. சத்தியத்தை மனித இனத்தால் நம்ப முடியும். சத்தியம் ஒரு போதும் நம்மை தோற்கவிடாது. இது மதம் உட்பட மனித முயற்சியின் எல்லா பகுதிகளிலும் உண்மையாயிருக்கிறது. அதுவும் குறிப்பாக மதசம்மந்தமான காரியங்களில் பிரசங்கியார்கள் நமக்கு என்ன போதிக்கிறார்களோ அதை அப்படியே ஏற்றுக்கொள்கிற சந்ததியாகத்தான் நாம் இருக்கிறோம். வேத வாக்கியங்களில் சத்தியம் என்ன சொல்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். இது ஒரு வேலையாகும். உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17). அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள் (பிலிப்பியர் 2:12).

தேவனுடைய சத்தியம் ஒரு போதும் தோற்பதில்லை. தேவனுடைய வார்த்தையை யாரும் உடைக்க முடியாது. வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை [மத்தேயு 24:35].

**நாம் சத்தியத்தோடு என்ன செய்யலாம்?**

அதைஅறிந்து கொள்ளலாம். சத்தியத்தையும் அறிந்து கொள்வீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் [யோவான் 8:32]. அதை வாங்கலாம். சத்தியத்தை வாங்கு அதை விற்காதே [நீமொழிகள் 23:23]. சத்தியத்தில் ஆராதிக்கலாம் தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மை யோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் [ யோவான்4:24].

**சத்தியம் நமக்கு என்ன செய்கிறது?**

நமக்கு வழிகாட்டுகிறது. சத்திய ஆவியாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் [ யோவான் 16:13]. நம்மை பரிசுத்தமாக்குகிறது உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் [யோவான் 17:17]. நம்மை நியாயந்தீர்க்கிறது **நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளிலே நியாயந்தீர்க்கும்** [யோவான் 12:48].

சத்தியம் என்பது ஒரு முதலீடாகும். நாம் எதில் முதலீடு செய்து கொண்டிருக்கிறோம்? சத்தியத்திலா அல்லது பொய்யிலா? நாம் அதை அறிய விரும்புகிறோம் அப்படித்தானே? ஏணி எந்தச் சுவற்றில் சாய்ந்து கொண்டிருக்கிறது என்பதை காண நாம் நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. மனுஷனுக்குச் செம்மையாய் தோன்றுகின்ற வழி உண்டு அதின் முடிவே மரணம். அழிவு தேவனிடமிருந்து நித்திய பிரிவு என்று வேத வாக்கியம் சொல்கிறது [நீதிமொழிகள் 14:12] நம் கர்த்தர் ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது என்று சொல்கிறது [மத்தேயு 7:13,14]. அந்த நம்பிக்கையைக் குறித்து நீங்கள் முன்னமே சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்தச்சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறது போல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக் கேட்டு தேவ கிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள் முதல், அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது என்று அப்போஸ் தலனாகிய பவுல் சொல்கிறார் [கொலோசெயர் 1:6]

பிலாத்து சத்தியம் என்றால் என்ன? என்று கேட்டான். ஆனால் கேட்டுவிட்டு உடனே நடந்து சென்றுவிட்டான். பதிலுக்காக அவன் காத்திருக்கவில்லை. நாம் பதிலுக்காக காத்து கொண்டிருக்கிறோமா? பதில் இருக்கிறது. ✝

வாழ்க்கைக்கான உபதேசம்

# அவர் வெளிப்படும்போது

## When He Appears

*Clarence Deloach. Jr*

ஆதிக் கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்பது வாக்குவாதம் செய்யவோ அல்லது விவாதம் செய்யவோ அது ஓர் இறையியல் விவாதம் அல்ல. அது ரோமக் கிறிஸ்தவர்களுடைய ஊக்கமான எதிர்பார்ப்பாக இருந்தது. கீழ்க்காணும் வேதவாக்கியங்களை கவனியுங்கள். அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் [பிலிப்பியர் 3 : 20]. நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம் [ரோமர் 8 : 23]. தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் [II பேதுரு 3 : 18]. மேற்கண்ட வசனங்களிலிருந்து ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் வருகைக்காக எதிர்நோக்கினார்கள், காத்திருந்தார்கள் என்று வெளிப்படையாகத் தெரிகிறது.

அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். பிரிய மானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்பது அறிந்திருக்கிறோம் [I யோவான் 3: 1,2]. கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய நம்பிக்கை மூளையில் அல்ல, இருதயத்தில் ஏற்பட வேண்டும். அது கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கான பெலனைத்தரும்.

I. அது நம்மை ஊக்கப்படுத்தும் !

அது நிச்சயமாக நாம் பந்தயப்பொருளை பெற்றுக்கொள்வதற்கு நம்மை ஊக்கப்படுத்தும். கிறிஸ்துவின் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதைவிட இவ்வுலகில் பெரிய காரியம் என்னவாக இருக்க முடியும் ? அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாளானது அதை விளங்கப்பண்ணும் [I கொரிந்தியர் 3:1:3]. உத்தமும்

உண்மையுமுள்ள ஊழியக்காரனே, என் எஜமானுடைய சந்தோசத்திற்குள் பிரவேசி என்னும் வார்த்தைகளை கேட்பதைவிட பெரிய ஆனந்தம் எதுவாக இருக்க முடியும் ? (மத்தேயு 25 : 23).

II. அது நம்மை பொறுப்பாளிகளாக்குகிறது

நம்முடைய ஒவ்வொரு கிரியையைக்கும் நாம் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல் பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (II யோவான் 8). ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்கு கனக்கொப்பு விப்பான் (ரோமர் 14 : 15).

III. அது நமக்கு பாதுகாப்பை அளிக்கிறது.

நாம் வருங்காலத்தைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நான் மறுபடியும் வருவேன் என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (யோவான் 14 : 3). அதுதான் நம் நம்பிக்கையாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறது. நாம் கிறிஸ்துவினுடையவர்கள். அவர் நமக்காக வருகிறார். நம் சுதந்திரம் பாதுகாப்பில்லாத இவ்வுலகில் அல்ல. நம் சுதந்திரம் அழியாதது, மாசற்றது, வாடாதது. அது பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது (I பேதுரு 1 : 4). அது நம்முடைய நிச்சயமாயிருக்கிறது. இந்த நம்பிக்கையை உயிருள்ளதாக வைப்போம்.

---

**சகதியைக்குறித்து முறுமுறுக்கிறவராக இருந்தால் மழைக்காக ஜெபிக்காதீர்கள். ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகும். நம் பூமிக்குரிய தகப்பனோடு நாம் பேசாமல் எப்படி உறவை வைத்துக் கொள்ள முடியும்? அதே போல் நம் பரம தகப்பனோடு பேசாமல் (ஜெபிக்காமல்) எப்படி அவரோடு உறவை வைத்துக் கொள்ள முடியும்?**

# தேவன் நமக்குப் பிள்ளைகளைத் தந்திருக்கிறார்

தேவன் நமக்கு பிள்ளைகளைத் தந்திருக்கிறார்
அந்த சின்னஞ்சிட்டுகள் அழகானவர்கள்
நாம் அவர்களைத் தழுவுகின்றோம் முத்தமிடுகிறோம்
அவர்களோடு கண்ணாமூச்சி விளையாடுகிறோம்

தேவன் நமக்கு பிள்ளைகளைத் தந்திருக்கிறார்
அவர்கள் நாள்தோறும் வளர்கிறார்கள்
நாம் அவர்களைத் அடிக்கிறோம் பயிற்றுவிக்கிறோம்
அவர்கள் வழிதப்பிச்செல்லாதபடி பார்த்துக் கொள்கிறோம்.

தேவன் நமக்கு பிள்ளைகளைத் தந்திருக்கிறார்
சிலர் நிம்மதி இல்லாமல் இருக்கிறார்கள்
நாம் அவர்களைத் பக்குவப்படுத்தி தயார் படுத்துகிறோம்
அவர்கள் வழிதப்பிச்செல்லாதபடி பார்த்துக் கொள்கிறோம்.

தேவன் நமக்கு பிள்ளைகளைத் தந்திருக்கிறார்
அவர்கள் தினமும் நம்மை தொந்தரவு செய்கிறார்கள்
அவர்கள் அற்ப காரியங்களுக்கு பரவசமடைந்தாலும்
எல்லாவற்றிலும் நமக்கு அவர்கள்
கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புகிறோம்.

தேவன் நமக்கு பிள்ளைகளைத் தந்திருக்கிறார்
ஒவ்வொருவரையும் நாம் ஒழுங்குபடுத்த வேண்டியதாயிருக்கிறது
அவர்களைப் பக்குவப்படுத்தி உருவாக்கி
தேவனுக்கே திருப்பி கொடுத்து விட வேண்டும்.

ஆராதனை

## உங்கள் வாழ்கை முழுவதும் இதை வாரத்திற்கு ஒருமுறை எடுங்கள்

## Take This Once a week For The Rest of Your Life

*Danny Boggs*

**வா**ரத்தின் முதல் நாளிலே இயேசு கிறிஸ்துவின் முதல் நுற்றாண்டு சீஷர்கள் அப்பம் பிட்கும்படியாகக் கூடினார்கள் [அப்போஸ்தலர் 20:7] அப்போஸ்தலருடைய வழி நடத்துதலின் கீழ், ஞாயிற்றுக்கிழமை கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும் நாளாக இருக்கிறது.



நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன். என்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு, நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக் கிறது ; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தை புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.[I கொரிந்தியர் 11:23–26]

நாம் கிறிஸ்துவை நினைக்கும்படி அப்பத்தைப் புசிக்கவும் திராட்சை ரசத்தை குடிக்கவும் செய்கிறோம். அவர் தம்முடைய சரீரத்தைக் கொண்டு என்னச் செய்தார். என்பதை நாம் நினைவு கூருகிறோம். அவர் தம்முடைய இரத்தத்தைக்கொண்டு என்ன செய் தார் என்பதை நாம் நினைவு கூருகிறோம். நாம் கூடிவந்திருக்கும் யாவருக்கும் கிறிஸ்துவின் மரணத்தைத் தெரிவிக்கிறோம். அவர் இனி மரிக்கப்போவதில்லை. அவர் ஜீவிக்கிறார், மறுபடியும் வருகி றார் என்பதை நாம் தெரிவிக்கிறோம்.

இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணு கிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். இந்த அப்பத்தைப் புசித்து இந்தப்பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனம் பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன் னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம் உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநே கர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்திருந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்ப டும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் (I கொரிந்தியர் 11:27–32).

இது ஒரு வழக்கமான போஜனமல்ல, இது சரீரப்பசியை ஆற்றாது, கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்து ஆழ்ந்து யோசிக்காமல், நம்மை நாம் சோதித்தறியாமல் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவது அபாயகரமானது. இது தற்பரிசோதனை செய்வதற்கான அருமையான தருணம். கிறிஸ்து எனக்காக மரித்தார் ! இது கடந்த ஏழு நாட்களில் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தியது? இது அடுத்த ஏழு நாட்களில் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தும்? இந்நேரத்தில் அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது?

கர்த்தருடைய பந்தியில் அஜாக்கிரதையாக, அருகதையில்லாமல் பங்கு பெறுவது மிகவும் அபாயகரமானது. கர்த்தருடைய பந்தியில் தவறாமல் பங்கெடுக்க நமக்கு நேரமில்லையென்றால், நம்மை நாம் சோதித்தறிந்து, ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட நம் மனதை கட்டுப்

படுத்தவில்லையென்றால் நாம் நோய்வாய்ப்பட்டிருக்கிறோம்; நாம் பெலவீனமாய் இருக்கிறோம் என்று தான் பொருள்.

இந்த தற்பரிசோதனை நம்மை நியாயம் விசாரிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் கர்த்தருக்கான அழைப்பாகும். அவர் நம்மை பரிசோதித்து சுகப்படுத்தட்டும். இல்லையெனில், ஒருநாள் உலகத் தோடு நாம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவோம்.

எனவே, நாம் கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்துவை நினைக்கவும் அவருடைய மரணத்தையும் தெரிவிப்பதற்கும்,நம்மை நாம் சோதித்தறியவும் பங்கு பெறுகிறோம். நாம் நினைவுகூர வேண்டும் நாம் அவருடைய மரணத்தைத் தெரிவிக்க வேண்டும், நம்மை நாம் சோதித்தறிய வேண்டும்

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் மிகச்சிறந்த ஆவிக்குரிய நலனுக்காக பந்தியை ஏற்படுத்தினார். மிகச்சிறந்த பலனை நாம் பெற்றுக்கொள்ள மாபெரும் வைத்தியர், **வாழ்க்கை முழுவதும் இதை வாரத்திற்கு ஒருமுறை எடுத்துக்கொள்ளுங்கள்** என்று சொல்கிறார். ✝

---

**கூசப்பின் கதவையும் பகையின் கைவிலங்கையும் உடைத்தெறியும் சாவி மன்னிப்புதான். இச்சாவியை பலர் பயன்படுத்தாததால்தான் இவ்வுலகம் சமாதானமும் சந்தோஷமும் இல்லாமல் சிக்கித் தவிக்கிறது.நாம் மற்றவர்களை மன்னிக்காவிட்டால் தேவனிடமிருந்து மன்னிப்பை எதிர்பார்க்க முடியாது. மன்னிப்பு எனும் இந்தச்சாவி உங்களிடம் இருக்கிறதா?**

# அக்கினியோடு விளையாடுதல்
# Playing with Fire
## Rick Cunningham

**மோ**சேயின் சகோதரனாகிய ஆரோன் மோசேயின் உடன்படிக்கை முறைமையின் முதல் ஆசாரியனாக இருந்தார். ஆரோன் எலிசபாலை என்னும் பெண்ணை விவாகம் பண்ணினார். இந்த தம்பதியினருக்கு நாதாப், அபியு . எலெயாசார் மற்றும் இத்தாமார் ஆகிய குமாரர் இருந்தார்கள். ஆரோனின் குமாரர்களும் ஆசாரியர்களாக இருந்தார்கள்.



மோசே சீனாய் மலைக்கு ஏறினபோது அவர் மட்டுமே தேவனை சந்தித்து உடன் படிக்கையை பெற்றுக் கொண்டார். ஆனால், ஆரோன் நாதாப், அபியு மற்றும் இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஆறு பேர் தேவனுடைய பிரசன்னத்தின் இடத்தைக் காண மலைக்குப் போனார்கள். யாத்திராகமம் 24:9-11 வசனங்களில் மோசே இவ் விதமாக எழுதினார். பின்பு மோசேயும் ஆரோனும், நாதாபும் அபியுவும் இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபது பேரும் ஏறிப்போய் இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள். அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும், தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது. அவர் இஸ்ரவேலே புத்திரருடைய அதிபதிகள்மேல் தம்முடைய கையை நீட்டவில்லை; அவர்கள் தேவனைத் தரிசித்து பின்பு புசித்துக் குடித்தார்கள்'' எனவே, நாதாப் அபியு உட்பட சில மனிதர்கள் சீனாய் மலையில் தேவனுடைய சமூகத்தில் புசிக்கவும், குடிக்கவும் செய்தார்கள். ஆனால், தேவன் இவர்களுக்கு விரோதமாக தம்முடைய கைகளை நீட்டவில்லை. இருந்தபோதிலும் பின்னர், நாதாப் மற்றும் அபியுக்கு விரோதமாக தம்முடைய கைகளை நீட்டினார்.

இந்த இரு ஆசாரியர்களும் கூடாரத்தில் பணிசெய்து கொண்டிருக்கும்போது நாதாபும், அபியும் தன்தன் தூபகலசத்தை எடுத்து அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்திய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள். [லேவியராகமம் 10 : 12]. இந்தச்சம்பவத்தில் நாதாபும், அபியும் அந்நிய அக்கினி அல்லது அங்கீகரிக்கப்படாத அக்கினியைப் பயன்படுத்தினார்கள். அங்கீ கரிக்கப்படாத எந்த ஓர் ஆராதனையும் தேவனுக்கு அருவருப்பாக இருக்கிறது. இந்த வேதாகமச்சம்பவம் தேவனை அணுகும் எல்லோருக்கும் ஓர் எச்சரிப்பாகும். தேவன் தம்மை ஆராதிப்பவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று குறிப்பாகச் சொல்லியிருக்கிறார். தேவன் கட்டளையிட்டதற்குப் பதிலாக எதையாவது செய்வது தேவனுடைய பார்வையில் கலகமாக பார்க்கப்படும். நாதாபும், அபியும் இந்த பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். தேவனால் அங்கீகரிக்கப்படாத ஆராதனையை ஏறெடுப்பவர்கள் அக்கினியோடு விளையாடுகிறார்கள் .

அங்கீகரிக்கப்படாத அக்கினி அல்லது அங்கீகரீக்கப்படாத எந்த ஓர் ஆராதனையும் தேவனுக்கு அருவருப்பாக இருக்கிறது . தேவனால் அங்கீகரிக்கப்படாத ஆராதனையை ஏறெடுப்பவர்கள் அக்கினியோடு விளையாடுகிறார்கள் . ✝

---

*அற்புதங்களின் நோக்கம்*

| | | |
|---|---|---|
| *மாற்கு 16:20* | : | *வசனத்தை உறுதிபடுத்த* |
| *அப்போஸ்தலர் 2:22* | : | *இயேசுவை கிறிஸ்துவென்று, தேவனுடைய குமாரனென்று நிரூபிக்க* |
| *யோவான் 16:13* | : | *வேத வசனங்களைப் பூரணமாய் வெளிப்படுத்த* |
| *யோவான் 20:30,31* | : | *இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க* |


# சத்தியத்தோடு ஆராதனை

## Worship in Truth

*Cecilmay Jr*

கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின (யோவான் 1 :17) உண்மையாய்த் தொழுது கொள்கிறவர் கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும் (யோவான்(4: 23).

ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வதென்பது சரியான மனநிலையோடும், வேதவாக்கியங்களின் போதனையின் படியும் தொழுது கொள்வது என்று பொருள்படுவதை பலர் புரிந்திருக் கிறார்கள். ஆனால், இந்த வசனப்பகுதி முந்தைய உடன் படிக்கையோடு பிந்தைய உடன்படிக்கை வேறுபடுவதை மறை முகமாகச் சொல்கிறது (யோவான் 1 : 17 ; 4 : 2123). பழைய உடன்ப டிக்கையின் கீழ்கூட ஆராதனையானது இருதயத்திலிருந்து வேத வாக்கியங்களின் படியாகவும், தேவன் கட்டளையிட்டபடியாகவும் உண்மையாக ஏறெடுக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. கிருபையும் சத்தியமும் பல வழிகளில் மோசேயின் கீழும் வெளிப்படையாகவே இருந்தது. இங்கே வித்தியாசம் என்னவாக இருக்கிறது?



புதிய ஏற்பாட்டில் ஆவி எனும் வார்த்தை எவ்விதமாக பயன்படுகிறது என்பதற்கான உதாரணங்கள்

ஏனெனில், மாமிசத்தின்மேல் நம்பிக்கையாயிராமல் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகின்ற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள் (பிலிப்பியர் 3:3)பழைய உடன்படிக்கை ஆவியாயிருக்கிறது (II கொரிந்தியர் 3:4–11).

**புதிய ஏற்பாட்டில் சத்தியம் எவ்விதமாக பயன்படுத்தப்படுகிறது என்பதற்கான உதாரணங்கள்:**

மோசேயின் பிரமாணத்தில் ஆசாரியத்துவம் மற்றும் திரும்பச் செலுத்தப்பட்ட பலிகள் போன்றவைகள் நிழலாயிருந்தன. கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மற்றும் ஒரே தரம் செலுத்தப்பட்ட பலிதான் உண்மையாய் இருக்கிறது (எபிரெயர் 8.22;9:22). மோசேகள் கொடுத்தார் ; கிறிஸ்துவே மெய்யான அப்பம் (யோவான்6;30)


மேற்சொல்லப்பட்ட விளக்கத்தின்படி, ஆவியோடு ஆராதிப்பதென்பது புதிய உடன்படிக்கையின்படி ஆராதிப்பதாகும். எழுத்து அல்லது மாம்சமாகிய பழைய உடன்படிக்கையின் படி ஆராதிப்பதல்ல. உண்மையோடு ஆராதிப்பதென்பது புதிய உடன்படிக்கையின் யதார்த்தத்தோடு ஆராதிப்பதாகும். பழைய உடன்படிக்கையின் நிழலோடு அல்ல.

மோசே மூலமாக கொடுக்கப்பட்ட நியாயப்பிரமானம் அல்லது உடன்படிக்கை பொய்களை உள்ளடக்கிய ஒன்றல்ல. அது நிழலாயிருந்தது. ஆனால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நிழலுக்கு மாற்றாக நிஜத்தை கொண்டு வந்தார். கிறிஸ்து வந்த பிறகு சரீரப் பிரகாரமான பலிகள், நீண்ட நெடிய லேவியராகம மதச்சடங்குகள் நறுமணம் நிறைந்த தூபவர்க்கம், தேவாலய பாடல் குழு போன்றவைகளை தம்மைத்தாமே ஒரே தரம் பலியாகச் செலுத்தியதன் மூலமாக ஒழித்துப் போட்டார். ✝

---

**ஆத்தும சுத்தம்**

பெற்றோர் தங்கள் பிள்ளைகள் முகத்தைக்கழுவி உடலை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்குக் கொடுக்கும் முக்கியத்துவம் அதே பிள்ளைகளின் ஆத்தும சுத்தத்திற்குக் கொடுப்பதில்லை.



# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

பூமியின் குடிகளே எல்லாரும்
கர்த்தரைக் கெம்பீரமாய்ப்பாடுங்கள்.

மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து,
ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்

கர்த்தரே தேவனென்று அறியுங்கள்;
நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்

நாம் அவர் ஜனங்களும் அவர்
மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.

அவர் வாசல்களில் துதியோடும்,
அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும்
பிரவேசித்து அவரைத் துதித்து அவருடைய
நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்

கர்த்தர் நல்லவர் அவருடைய கிருபை

என்றென்றைக்கும், அவருடைய உண்மை

தலைமுறை

தலை முறைக்கும் உள்ளது.

சங்கீதம் 100

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# Hell is Not Funny

## நரகம் நகைச்சுவையான ஓர் இடமல்ல

**சி**ல நாட்களுக்கு முன்பு ஓர் உணவகத்தில் என் பின்னால் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அதில் ஒருவர் மற்றொருவரிடம் கதையொன்றை சொல்லிக் கொண்டிருந் தார். அக்கதையில் கொஞ்சத்தைத் தான் நான் கேட்டேன். கதை முடிந்தபோது என்னருகே இருந்த அந்த நபர் உரத்த சத்தமாக, இக்கதை நரகத்தைப்போல் நகைச்சுவையாக இருக்கிறது என்று சொன்னார். ஜனங்கள் பயன்படுத்தும் மொழிநடை பெரும்பாலும் தேவனை கனவீனப்படுத்து கிறதாக இருக்கிறது. பலர் வேண்டுமென்றோ அல்லது அறியாமையின் காரணமாகவோ தேவனுடைய நாமத்தை தூஷிக்கின்றனர். மேலே காணப்படும் வார்த்தைகளை உரத்த சத்தமாய்ச் சொன்ன மனிதனுக்கு நரகம் எவ்வளவு கொடுமையானது என்பதைச் சொல்வதற்கு பதிலாக நேர் எதிராக, இக்கதை நரகத்தைப் போல் நகைச்சுவையாக இருக்கிறது என்று சொல்லிவிட்டார். சொல்லப்போனால், நரகத்தைப்போல் பயங்கரமான கதை எதுவும் இருக்க முடியாது. நரகம் என்பது அக்கினியால் நிறைந்த வேதனை ஸ்தலம் (லூக்கா 16:44). நரகம் நித்திய அக்கினியின் ஸ்தலமாகும் (மத்தேயு 25:41). நரகத்தில் அக்கினி அவியாமலிருக்கும் (மாற்கு 9:46).




அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் விளையாட்டாகவோ அல்லது தமாசாகவோ ''ஓ என் கடவுளே'' என்று பயன்படுத்தக்கூடாது. என் தேவனாகிய கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன். என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும்'' (சங்கீதம் 7:1) ''ஓ, என் கடவுளே '' (OMG) என்று சொல்லும், எழுதுவதும் தேவனை அவமதிக்கும் செயல்களாகும். நாம் இக்காரியத்தில் சிறப்பாக செயல்பட தீர்மானிப்போம்.

அதேபோல், நாசமாக போவாய் என்று மற்றவர்களை சபிக்கும் வார்த்தைக்களை தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஒருபோதும்

பயன்படுத்தக்கூடாது. நாம் வாயின் வார்த்தைகளைக் குறித்து தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டியதாயிருக்கிறபடியால் ஜாக்கிரதையாக நம் நாவைக் கையாள வேண்டும். நாம் மற்றவர்களை சபிக்கும் வார்த்தைகளைப் பயன்படுத்தினால் அது கெட்ட கெட்ட வார்த்தைகளை பயன்படுத்துவதற்குச் சமமாகும். ''கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டும். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்'' (எபேசியர் 4:29).

அமெரிக்க ஐக்கிய தேசத்தில் இருதயப் பிரச்சனை மிகவும் மோசமான பிரச்சனையாக உருவெடுத்து வருகிறது. ஜனங்களுக்கு ஆவிக்குரிய இருதயம் இல்லாதபடியால்தான் இத்தகைய மோசமான மொழிநடையை பயன்படுத்துகிறார்கள். எனவே, ஆவிக்குரிய பிரகாரமாகப் பார்த்தால் சமித்தலும், அசிங்கமான வார்த்தைகளும் நம் இருதயத்திலிருந்துதான் ஊற்றெடுத்து வருகிறது. ''நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனிதன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய்பேசும் (லூக்கா 6:45).

தேவனுடைய ஜனங்கள் தங்கள் இருதயத்தை சாபம் மற்றும் மோசமான மொழிநடையால் நிரப்பும் இசை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மற்றும் திரைப்படங்களை பார்ப்பதை நிறுத்த வேண்டும். கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் புது சிருஷ்டியாயிருக்கிறார்கள். ''இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின'' (II கொரிந்தியர் 5:17).

கிறிஸ்தவர்கள் மறுரூபமாக்கப்பட்டிருக்கிறார்கள். ''அப்படியிருக்க, சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12 : 1,2). உங்கள் மொழிநடை புதிதாக்கப்பட்டு மாற்றமடைந்திருக்கிறதா? ஒரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையில் கரடுமுரடான, அசிங்கமான மொழிநடைக்கு இடமே இல்லை. உங்கள் வாயிலிருந்து புறப்பட்டு வரும் வார்த்தைகள் இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறதா? உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினாலே

குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் (மத்தேயு 12:37).

**ஒருவர் கிறிஸ்தவராக மாற,**

**தேவனுடைய வார்த்தையை கேட்க வேண்டும் :**

எல்லாரும் தேவனாயே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்'' (யோவான் 6:45).

**தேவனிடத்திலும், விசுவாசம் வைக்க வேண்டும்:** விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்'' (எபிரெயர் 11:6)

**பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்:**

அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு புலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பதினாலே அதன் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்'' (அப்போஸ்தலர் 17:30 31).

**இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும்:**

மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்'' (மத்தேயு 10:32).

**கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும்.**

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்'' (ரோமர் 6:34). நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16;15,16). என் கன்மலையும், என் மீட்டாருமாகிய கர்த்தாவே என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக (சங்கீதம்19:14). ✝

# கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தப்பட வேண்டிய ஆத்துமாக்கள்

## Souls to be won for Christ

**Dale Grissom**

தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஆத்தும ஆதாயத்தில் ஊக்கப்படுத்துதல் என்பது மிக முக்கியமான பகுதிகளுள் ஒன்றாகும். இருந்தபோதிலும், இது நம்மில் பலரிடத்தில் குறைவுபடுகிற ஒன்றாக இருக்கிறது. இந்த ஊக்கம்தான் நம் குடும்ப அங்கத்தினர்களிடத்தில், நம் நண்பர்களிடத்தில் அவர்களுடைய நித்தியத்தை பற்றிப் பேசுவதற்கு அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது. இந்த ஊக்கம் தான் ஓர் இழந்துபோன ஆத்மாவைக் குறித்து அக்கறைப்படவும், அந்த ஆத்துமா நரகத்திற்குப் போகாதபடிக்கு அவர்களுக்கு நாம் எதையாவது செய்யவும் நம்மைத் தூண்டுகிறது.

நம்மில் பலர் வீழ்ந்துபோன ஆத்துமாக்களை சுவிசேஷத்தால் எதிர்கொள்ள அச்சப்படுகிறவர்களாக, வெட்கப்படுகிறவர்களாகவே காணப்படுகிறோம். நாம் பாவத்தைத்தான் நேசிக்க கூடாது. பாவிகளை நேசிக்கலாமே. சபையில் பிரசங்கிக்கப்படும் பிரசங்கங்களை கேட்கத்தக்கதாக அவர்களை ஆராதனைக்கு அழைக்கலாம். இன்னும் கூடுதலாக அவர்களிடம் தைரியமாகவும், அன்பாகவும் சுவிசேஷத்தை எடுத்துரைக்கத்தக்க தேவனுடைய வார்த்தைகளை ஜாக்கிரதையாகப் படித்து நம்மை நாம் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போஸ் தலனாகிய பவுல் சுவிசேஷத்தின் வல்லமையைக் குறித்து ரோமர் 1: 16 ல் தைரியமாக பேசுவதை நம்மால் காணமுடியும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறரசினவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது.

மற்றவர்களுக்கு வேதாகமத்தை பற்றி போதிக்க வேதாகமத்தின் காரியங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டுமென்று அவசியமிலலை. வேதாகமத்தின் அடிப்படைக் காரியங்களில் நாம் பரிச்சயப்பட்டிருந்தாலே போதுமானது. கிறிஸ்து தம்முடைய சபையைக் கட்டுவதாக வாக்குரைத்தார்(மத்தேயு 16 : 13–80). அந்த சபை ஸ்தாபிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 2). அப்போஸ்தலருடைய

நடபடிகள் புத்தகத்தில் அநேக மனமாற்றச் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. தேவன் ஏற்றுகொள்ளக்கூடிய ஆராதனை சம்மந்தமாகவும் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது சம்பந்தமான வழிமுறைகளும் மாதிரிகளும் புதிய ஏற்பாடு முழுவதும் இடம் பெற்றிருக்கின்றன.

சகோதரர்களே, நாம் சாக்குபோக்குச் சொல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையை அறிந்துகொள்ளவும், மற்றவர்களுக்கு போதிக்கவும் அதை ஜாக்கிரதையாகப் படிக்க வேண்டும். நமக்குத் தெரியாதவைகளை நாம் போதிக்க முடியாதே. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாகவும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வறையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர்4 :12) சுவிசேஷமானது உண்மையும் நன்மையுமான இருதயத்தில் போதிக்கப்படும்போது கிறிஸ்தவர்கள் உருவாக்கப்பட்டு ஆத்துமாக்கள் சபையில் சேர்க்கப்டுகிறார்கள். தேவனுடைய வார்த்தையை போதிப்பதற்கான பொறுப்பிலிருந்து நாம் விலகிப்போகத் துணிய வேண்டாம். ✝

---

**பரலோகத்தின் தேவன் இப்பூமியில் நமக்கு தந்திருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதங்கள்**

| | |
|---|---|
| *இயேசுகிறிஸ்து* | *(யோவான் 3:16)* |
| *வேதாகமம்* | *(II தீமோத்தேயு 3:16)* |
| *கிருபை* | *(ரோமர் 3:24)* |
| *சபை* | *(மத்தேயு 16:18)* |
| *நம்பிக்கை* | *(I பேதுரு 3:15)* |

செயலில் கிறிஸ்தவம்

## ஆடுகளை இடமாற்றம் செய்கிறோமோ அல்லது சீஷராக்குகிறோமா ?

## Swapping Sheep or Making Disciples ?

**Patrick Morrison**

கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்கும் நம்மில் பெரும் பாலானோர் நம்முடைய பிரதான பொறுப்பையும், சிலாக்கியத்தையும் மறந்தவர்களாய் இருப்பது வருத்தத்திற்குரியது. நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் (மத்தேயு 28 : 19). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் எத்தனையோ நன்மைகளைச் செய்திருந்தாலும் கூட அவருடைய மைய நோக்கம் **இழந்துபோனதை தேடுவதும், இரட்சிப்பதுமாகவே இருந்தது** (லூக்கா 19 : 10). நாம் வீட்டை விட்டு வெளியே சென்று ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் பணியை மறந்துவிட்டு கர்த்தருடைய சபையில் ஏற்கனவே அங்கம் வகிக்கும் அங்கத்தினர்களை நம் சபைக்கு இழுக்கும் இழிநிலைக்கு சென்றுவிட்டோம்.

Paul Harvey என்பவர் ஒருமுறை இவ்விதமாகச் சொன்னார். நாம் மனிதர்களை பிடிக்கிறதை விட்டுவிட்டு, மீன் காட்சியகத்தை பாதுகாக்கிறவர்களாக மாறிவிட்டோம். சுவிசேஷ ஊழியத்தின் மூலமாகவும், தவறிச்செல்பவர்களை மீட்டமைப்பதன் மூலமாகவும் சபையை வளர்க்க வேண்டிய நாம், சபையை ஒரு சமூக அமைப்பாக மாற்றி விட்டோம். பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லையே (லூக்கா 5 : 31, 32). ஆப்பிரிக்காவில் உள்ள கிறிஸ்தவர்கள் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக பலமணி நேரம் நடந்து வந்து சாய்வில்லாத வெறும் பெஞ்சுகளில் கூரையே இல்லாத கட்டிடங்களில் உட்காருவதாக தான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், அமெரிக்காவில்



குளிரூட்டப்பட்ட வாகனத்தில் ஐந்து நிமிடம் பயணித்து தேவனை ஆராதிக்க கூட மக்களுக்கு விருப்பமில்லாதது வேதனைக்குரியது. ஒரு மணிநேரம் நீடிக்கும் ஆராதனையில் சொகுசு இருக்கையில் அமர்ந்து தேவனை ஆராதிக்கக்கூட மனமில்லாமல் இருப்பது வெட்கத்திற்குரியது. இன்று பல சபைகள் மக்களை மகிழ்விக்கும் கேளிக்கைக் கூடங்களாகவும், பிள்ளைகளின் பிரியமான விளையாட்டு அரங்கங்களாகவும் மாறிவருகின்றன. நாம் சீராக்குவதில் பரபரப்பாக இல்லையென்றால் ஏற்கனவே நம் மந்தையில் இருப்பவர்களின் மீது நம் கவனம் திசை திருப்பப்படுவதில் ஏதாவது ஆச்சரியம் உண்டா ?

கர்த்தருடைய சபையில் எது வளர்ச்சியை உள்ளடக்குகிறது ? ஒரு பிராந்திய சபை ஆத்துமாக்களை புதிதாகச் சேர்க்காமலேயே பல இடங்களிலிருந்து வந்து சேர்கின்ற ஆத்துமாக்களினால் வளர்கிறது என்று சொல்ல முடியுமா? இன்றைய பொருளாதாரச் சூழலில் மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. அப்படி குடிபெயரும்போது அந்த பிராந்தியத்திலுள்ள சபைக்குச் செல்வது சகஜமாகிவிட்டது. இப்படி ஓரிடத்திலிருந்து வந்து சேர்ந்த ஆத்துமாக்களை வைத்துக்கொண்டு ஒரு சபை வளந்துவிட்டதாக நாம் எடுத்துக்கொள்ள முடியாது. ஒரு சபையில் இழப்பை ஏற்படுத்திவிட்டு மற்றொரு சபை வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பே இல்லை. வேறு மந்தையிலிருந்து ஆடுகளைப் பிடித்து எண்ணிக்கையை பெருக்கிக்கொள்வது தேவனுடைய பார்வையில் வளர்ச்சியே அல்ல. காரணம், நாமெல்லோரும் ஏற்கனவே ஒரே சரீரத்தில் அங்கத்தினர்களாயிருக்கிறோமே ! [I கொரிந்தியர் 12:13,20]. ஆடுகளை ஒரு மேய்ச்சல் நிலத்திலிருந்து மற்றொரு மேய்ச்சல் நிலத்திற்கு மாற்றுவதன் மூலமாக எந்த மந்தையும் வளர்ந்து விட முடியாது. இன்றைய நாட்களில் பல ஊழியக்காரர்கள் மற்ற பிராந்திய சபையிலிருந்து ஆத்துமாக்களை பிடிப்பதில் படு மும்முரமாக இருக்கிறார்கள்வ. இது மிகவும் கேவலமான நடைமுறையாகும். இதில் வேடிக்கை என்னவென்றால், வேறு இடங்களுக்கு குடி பெயர்ந்து அங்கேயிருக்கும் சபையில் தங்களை இணைத்துக் கொள்பவர்கள் கூட தாங்கள் அங்கம் வகிக்கும் சபை வளர்ச்சி அடைந்துவிட்டதாகவும், அது தேவனால் ஆசீர்வதிககப்பட்டு விட்டதாகும் சொல்கிறார்கள். இழந்து போனவர்களின் அவல நிலையை அறவே மறந்துவிட்டு, ஏற்கனவெ கர்த்தருடைய சபையில்

அங்கம் வகிப்பவர்களை நாம் அங்கம் வகிக்கும் சபையில் இணைத்துக் கொள்ள சிவப்பு கம்பளம் விரிக்கும் அளவுக்கு நாம் குருடாகிவிட்டோமோ? அந்த அளவு நம் செவிகள் செவிடாகி விட்டதா? இத்தகைய செயல்பாடுகள் நம்மை வெட்கப்படுத்துவது மாத்திரமல்ல, நம்மை நடுங்கச் செய்ய் வேண்டும். ஏனென்றால், நாம் பலரை சீஷராக்கவில்லையென்றால், கர்த்தருடைய கட்டளையை வெளிப்படையாக மீறுகிறவர்களாக இருப்போம்.

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரமேறுவதற்கு முன்பாக கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் இவ்வுலகத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதாகத் தான் இருந்தது (மாற்கு 16:15; மத்தேயு 28:18; லூக்கா 24:47). சபையானது இருக்கின்ற ஆத்துமாக்கள் போதுமானது என்னும் மனநிலையை விட்டு விட்டு சபை கட்டிடத்திற்கு வெளியே உள்ள ஆத்துமாக்களை உற்றுப் பார்க்க வேண்டும். வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று நம் கண்களை ஏறெடுத்துப் பார்க்க வேண்டும் (யோவான் 4:35). ✝

---

## வேதாகமத்தில் கொடுத்தல்

*விருப்பத்தோடு கொடுத்தவர்* - **ஆபிரகாம்** *ஆதியாகமம் 22: 1-19)*

*கஞ்சத்தனமாகக் கொடுத்தவர்* - **சவுல் ராஜா** *(I சாமுவேல் 15:17-23)*

*தியாகமாகக் கொடுத்தவர்* - **தாவீது** *( II சாமுவேல் 24:24)*

*உதாரணமாய்க் கொடுத்தவர்கள்* - **மக்கதோனியா கிறிஸ்தவர்கள்** *( II கொரி 8:15)*

*உள்ளதைக் கொடுத்தவர்கள்* - **பேதுரு, யோவான்** *( அப்போஸ்தலர் 3:1-10)*

அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# மன ரம்மியமாய் இருக்க கற்றுக்கொண்டுவிட்டீர்களா ?

*Have You Learned Contentment ?*

**Gareely Kirkpatride**

பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் தனக்குப் பிரியமான பிலிப்பி பட்டணத்து சபை தனக்கு அனுப்பிய வெகுமதிகளுக்காக அச்சபைக்கு நன்றிகளை தெரிவிக்கிறார். பவுல் ரோமாபுரி சிறையிலே இருந்தபோது தன்னுடைய துன்பத்தில் சபை பொருளாதார உதவிகளைச் செய்தமைக்காக பலிப்பி பட்டணத்து சபைக்கு நன்மைகளைத் தெரிவித்தார். இருந்த போதிலும் பவுல் தனக்கு பொருளாதார உதவிகள் கிடைத்தாலும், கிடைக்கா விட்டாலும் தான் மனரம்மியமாக இருக்க கற்றுக் கொண்டதாகச் சொல்கிறார் [பிலிப்பியர் 4 : 11ல்] அவர் சொல்வதைக் கவனியுங்கள். என் குறைச்சளினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.

இத்தகைய காரியத்தை பவுல் எப்படி கற்றுக்கொண்டார் ? தத்துவ ஞானிகள் தங்கள் தத்துவங்களை விளக்குவதை கவனித்ததினாலா ? நான்கு வருடங்கள் கல்லூரிக்கு சென்றதினாலா ? ஏதோ புத்தகத்தை வாசித்ததினாலா அல்லது ஏதாவது பிரசங்கத்தைக் கேட்டதினாலா ? இல்லை அவர் இத்தகைய பாடத்தை அனுபவத்தின் மூலமாகவும் தன் வாழ்வில் கிறிஸ்துவின் பெலன் மூலமாகவும் கற்றுக்கொண்டார்.



இப்படித்தான் பவுல் தன் வாழ்வில் வாழ்ந்திருக்கவும் தாழ்ந்திருக்கவும் தெரிந்து கொண்டார். மேலும், இது கிறிஸ்துவின் வல்லமை அவர்மேல் தங்கி அவரைப் பெலப்படுத்தியதி

தாலும் சாத்தியமானது [பிலிப்பியர் 4 : 13]. ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு'' என்று சொல்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், பவுலால் அதிகப் பொருள்களாலும் திருப்தியாயிருக்க முடியும். குறைவான பொருள்களாலும் திருப்தியாயிருக்க முடியும். இன்னும் சொல்லப்போனால் இவைகள் கூட பவுலின் போதுமென்கிற மனதை தீர்மானிப்பதில்லை. உண்மையான காரணம், கிறிஸ்து அவருக்குள்ளாக இருந்த அவரை மனரம்மியமாக இருக்க பெலப்படுத்தியிருக்கிறார்.

எந்த நிலைமையிலும் மனரம்மியமாக இருக்க கற்றுக்கொண்டுவிட்டீர்களா ? உங்கள் அனுபவத்தின் மூலமாக கிறிஸ்துவின் வல்லமை உங்களுக்குள் இருக்கிறபடியால் இது சாத்தியமாயிற்று என்பதை கற்றுக்கொண்டுவிட்டீர்களா ? உங்கள் அனுபவத்தின் மூலமாக கிறிஸ்துவின் வல்லமை உங்களுக்குள் இருக்கிறபடியால் இது சாத்தியமாயிற்று என்பதை கற்றுக்கொண்டு விட்டீர்களா ? அப்போஸ்தலனாகிய பவுல் சமாதானம் என்பது வெளிப்புறமான சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்து அமைவதில்லை. உட்புறமான சந்தோஷத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது என்று சொல்கிறார். யாரோ ஒருவர் இவ்விதமாகச் சொன்னார். சமாதானம் என்பது பிரச்சனையே இல்லாத நிலையல்ல. மாறாக, தேவன் நம்மோடிருக்கும் நிலைதான் என்று.

---

**எரேமியாவின் எலும்புகளில் அக்கினி இருந்ததற்கான காரணங்கள்**

- எரேமியா, தேவனிடத்திலிருந்து வந்த அழைப்பை ஒருபோதும் சந்தேகிக்கவில்லை.
- எரேமியா, ஜனங்களின் பாவத்தைக்குறித்து பாரமுடையவராக இருந்தார்
- எரேமியா, இன்னல்கள், இடர்பாடுகள் மத்தியிலும் ஊழியத்தை ஊக்கமாகச் செய்தார்.
- எரேமியா, தன்னுடைய பிரச்சனைகளை விட, சத்துருக்களை விட தேவன் பெரியவர் என்பதை அறிந்திருந்தார்.

அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

*ஜெபம் – Prayer*

# தேவனோடு அந்த தொடர்ச்சியான உறவு

## *That Continual Relatianship with God*

**Betty Burton Choate**



**ந**ம் அன்றாட கிறிஸ்தவ வாழ்வின் அஸ்திபாரம் நம் பிதாவாகிய தேவனிடத்தில் நாம் கொண்டிருக்கும் தனிப்பட்ட உறவாகும். நம் அன்றாட வாழ்வின் அலுவல்கள் நாள் முழுவதும் நம் பிரதான கவனத்தை ஈர்த்துக் கொள்கிறது. ஆனால், ஒரு கிறிஸ்தவர் என்றும் நிலையில் தேவனைப் பற்றிய உணர்வு அடிப்படை யாகவே இருக்கிறது. சவால்களுக்கு மத்தியில் என் தேவனே எனக்கு உதவி செய்யும் எனும் தன்னிச்சையான கதறல்கள் நம் மனதை ஆக்கிர மித்துக் கொள்கின்றன அல்லது நம் வாழ்க்கையில் நல்ல காரியங்கள் நடக்கும் போது **நன்றி தகப்பனே** என்று ஆனந்தத்தில் நாம் ஆர்ப்பரிப்போம். அதற்குப் பதிலாக அவருடைய பங்கில் ஒரு நாளின் பல நிகழ்வுகள் அவருடைய வார்த்தைகளை நம் மனதுக்குக் கொண்டு வருகின்றன. உதாரணமாக, நான் உன்னை விட்டு விலகுவது மில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை போன்ற வாக்குத் தத்தங்களால் நம்மை தேவன் தேற்றுகிறார். மேலும், நாம் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

மேற்சொல்லப்பட்ட காரியங்களை நாம் சிந்தித்துப் பார்க்கும் போது என் பூமிக்குரிய தகப்பனோடு எனக்கிருந்த வேலை சம்மந்தமான உறவை நினைத்துப் பார்க்கிறேன். நாங்கள் இணைந்து பல காரியங்களைக் கட்டியிருக்கிறோம். நாங்கள் பெரும்பாலும்

அமைதியாக வேலை பார்த்திருக்கிறோம். ஏனென்றால், எங்கள் பங்கு என்னவென்பதையும், நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதையும் நாங்கள் பெரும்பாலும் அமைதியாக வேலை பார்த்திருக்கிறோம். ஏனென்றால், எங்கள் பங்கு என்னவென்பதையும், நாங்கள் பிரச்சனைகள் எழும்பும். அப்போது என் அப்பா அமைதியாக நம்மால் அதை தீர்க்க முடியுமென்று சொல்வார்கள். நாங்கள் சில குறிப்பிட்ட காரியங்களைக் குறித்து வார்த்தைகளை பரிமாறிக்கொள்வோம். சில வேலைகள் எனக்கு புதிதாக இருந்தாலும் கூட, அந்த வேலையை நான் முழுமையாகப் புரிந்து கொள்ளாவிட்டாலும் கூட நாங்கள் ஒருமித்த கருத்தோடு அந்த வேலையை செய்து முடிப்போம்.

அன்றாட வாழ்வு தேவனோடு இதைப்போன்றதுதான். நிச்சயமாகவே செய்ய வேண்டிய வேலைகள் அநேகம் உண்டு. அதில் என்னுடைய பங்கும் உண்டு, என்னுடைய சக்திக்கு அப்பால் தேவனுடைய மிகப்பெரிய பங்கு உண்டு. என்னுடைய எல்லைக்குட்பட்ட மனித தரிசனம் மற்றும் புரிந்து கொள்ளுதலுக்கு மத்தியிலும், நாங்கள் இணைந்து செயல்பட்டு பூரணத்தை நோக்கி கடந்து செல்கிறோம். எனக்கு முன்னால் இருக்கும் பாதையை நான் பார்ப்பதில்லை, ஏனென்றால் என் சக்திக்கு அப்பாலான காரியங்களை தேவன் பராமரித்துக் கொண்டிருக்கிறார். ஒரு பிரச்சனை என்று வரும் போது, அவருடைய ஆறுதலான மறு நிச்சயம் நமக்குண்டு. நம்மால் அதை சரி செய்ய முடியும்.... அல்லது அவருடைய வார்த்தைகளில், அன்றியும், அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ✝

---

### நாம் ஆசாரியர்களாயிருக்கிறோம்

நாம் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாயிருக்கிறோம் (I பேதுரு 2:5)

நாம் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயிருக்கிறோம் (I பேதுரு 2:9)

நாம் ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கப்பட்டிருக்கிறோம் (வெளி 5:10)

அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# ... ஸ்தோத்திரத்தோடே ...

# "...with thanksgiving..."

**Dan Winkler**

**நீ**ங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலிப்பியர் 4 : 6,7).

என்ன ஓர் அருமையான வேதவாக்கியம்! என்ன ஒரு வாக்குத்தத்தம்! எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். எல்லாவற்றையும் குறித்து தேவனிடம் பேசுங்கள். நீங்கள் அசாத்தியம் என்று நினைத்த மனச்சமாதானத்தை பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருங்கள் ! இந்த அருமையான காரியத்திற்கு திறவுகோல் ''ஸ்தோத்திரத்தோடேகூடிய'' என்பதாகும்.

1. பிரச்சனைகள் ?

யாருடைய வாழ்க்கையில்தான் பிரச்சனை இல்லை? (யோபு 14 : 1) பாதுகாப்பின்மை? ஆரோக்கியமின்மை? கவலை? கண்ணீர்? என்று? இவைகளின் மத்தியிலும் நாம் ஒன்றுக்குங் கவலைப்படாமல் இருக்க முடியும்.

2. ஜெபம் !

நம் தேவன் நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார் (எபேசியர் 3 : 20). சிருஷ்டிப்பு ஜலப்பிரளயம் அதிசயமான இயேசு கிறிஸ்து நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார் (சங்கீதம் 147 : 5). நாம் அவரிடம் ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் நம் இருதயத்தை ஊற்ற முடியும்.

3. துதி !

நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து

இறங்கி வருகிறது. கிறிஸ்தவம், நம்பிக்கை போன்ற நன்மையான காரியங்களுக்காக கிறிஸ்தவ குடும்பங்கள் தேவனுக்கு எப்போதும் துதிகளை ஏறெடுக்க வேண்டும்.

4. சமாதானம் !

என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாகும் என்று இயேசு கிறிஸ்து சொன்னார் (யோவான் 16 : 33). ஆனால், மேற்சொல்லப்பட்ட வசனத்தின்படி இந்த சமாதானம் நம் இருதயங் களில் எப்படி வந்து சேருகிறது? கடந்த காலங்களில் தேவன் நமக்கு செய்த நனமைகளை நன்றி நிறைந்த இருதயத்தோடு நினைத்துப் பார்க்க வேண்டும். அது வருங்காலத்திலும் நம்முடைய காரியங்களை தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்க நம்மை ஊக்கப்படுத்தும். மேலும், எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளவும் அது நம்மை உற்சாகப்படுத்தும்.

5. நன்றி உணர்வு

இது நேற்றைய நினைவுகளை அனுபவிக்கவும், இன்றைய கஷ்டங்களை சகித்துக் கொள்ளவும், நிச்சயமற்ற நாளையைக் குறித்து நம்பிக்கை கொள்ளவும் உதவுகிறது. நாம் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிப்போம் (எபேசியர் 5 : 20).

---

## வீட்டில் ஆவிக்குரிய பயிற்சி

- வேதாகமத்தில் உள்ள புத்தகங்களை அடிக்கடி வீட்டிலுள்ளவர்களிடம் சொல்லிப்பாருங்கள்.
- சபையில் பிரசங்கிக்கப்படும் பிரசங்கங்களை குறித்து வீட்டில் அலசி ஆராய்ந்து பாருங்கள்.
- மனம் மாறிய சம்பவத்தைக் குறித்து அடிக்கடி பேசுங்கள்.
- இரண்டு வேதாகமங்களை வைத்துக்கொண்டு யார் முதலில் வசனத்தை கண்டுபிடிக்கிறார் பார்க்கலாம் என்று போட்டியை நடத்துங்கள்.

# Marriage

# விவாகம்

Ken Tyler

**வி**வாகம் என்பது தெய்வீக அமைப்பாகும் (ஆதியாகமம்1:26 –28 2:18–24) விவாகம் தெய்வீகத்திட்டதின்படி நடந்தேறும் போது உண்மையாகவே அது ஓர் அழகான உறவாகும் நாம் காரியங்களை சற்று உற்றுப்பார்த்தால் எபேசியர் 5:22–23 வசனங்களில் கணவன் மனைவி உறவானது கிறிஸ்துவுக்கும், சபையாகிய மணவாட்டிக்கும் இடையே உள்ள உறவாக ஒப்பிடப்பட்டிருக்கிறது.

விவாகமானது அதன் பாதையிலிருந்து தடம்புரளாதவரை அழகானது. துக்ககரமாக, இன்றைய நாட்களில் பல விவாகங்களின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. உறவு முறிந்த பல குடும்பங்களை நீங்கள் ஒன்றன்பின் ஒன்றாக உதாரணமாக எடுத்துவைக்க முடியும் என்று நான் நிச்சயமாகச் சொல்கிறேன். பல வீடுகளில் நிலவும் நிலைமைகளைக் குறித்து நாம் கவலையடைந்து நிலைமை மேம்பட நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

M.F.Mcknight - என்பவர் வலிமை என்பது ஒரு ஆணும், பெண்ணும் குடும்பத்தைக்கட்டும் நோக்கத்திற்காக இருவரும் இணைந்து செய்யும் ஓர் உடன்படிக்கை என்றும், இருவரும் விவாக உறவில் ஈடுபடுத்தப்படும் எல்லா பொறுப்புகளையும் பரஸ்பர ரீதியில் ஏற்றுக் கொண்டு அதில் ஈடுபட்டு எல்லா சிலாக்கியங்களையும் பெற்றுக் கொள்வதென்றும் சொல்கிறார்

தேவனுடைய திட்டத்தில் விவாகம் என்பது மரணம் நம்மைப் பிரிக்கும் வரை நிலைத்திருக்கும் ஒன்றாகும் என்பதை நாமெல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும் ரோமர் 1:2–3 வசனங்களை ஜாக்கிரதையாக கவனியுங்கள்.

அதெப்படியென்றால், புருஷனுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள். புருஷன் மதித்த பின்பு

புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறான் ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் விபசாரியென்னப்படுவாள். புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையான படியால் வேறாரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல. மத்தேயு 19:6 ல், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து: ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.

இருவர் விவாகத்தினல் இணையும் போது அது மரணம் வரையிலான உறவாகும். ஒவ்வொரு தம்பதியினரும் கணவன் மனைவியாவதற்கு முன்பே இக்கருத்தை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். சிலர் சோதனை அடிப்படையில் திருமண பந்தத்தில் பிரவேசித்து பிரச்சனைகள் வரும்போது அதை சமாளிப்பதற்குப் பதிலாக எங்களுக்கு பொருத்தமில்லை என்று உறவை தட்டிக் கழிக்கிறார்கள். அதையே சாக்காக வைத்து உறவை முறித்தும் கொள்கிறார்கள். விவாகம் லேசாக எடுத்துகொள்ளப்படக்கூடாது. விவாகரத்து நம் வீட்டையும் தேசத்தையும் முற்றிலுமாக அழித்துப் போடுவதற்கு முன்பு நாம் விழித்துக் கொள்ளவேண்டும். ✝

## கிறிஸ்தவத்தை எப்படி வெளிப்படுத்துவது?

1. குடும்பத்தில் – அன்பாலும், தன்னலமற்ற தன்மையாலும் உழைப்பாலும்
2. வியாபாரத்தில் – நேர்மையினாலும், கவனத்தாலும்
3. சமுதாயத்தில் – தயவாலும், தாழ்மையினாலும்
4. பாதிக்கப்பட்டவர்களிடத்தில் – கருணையாலும், இரக்கத்தாலும்
5. பெலவீனர்களிடத்தில் – பொறுமையினாலும், உதவியினாலும்
6. துன்மார்க்கரிடத்தில் – நிதானத்தாலும், தீமையை வெல்லுவதாலும்
7. தேவனிடத்தில் – அன்பாலும், கீழ்ப்படிதலினாலும், பயபக்தியாலும்

## கிறிஸ்தவ இல்லம்

# உங்கள் வலைகளைப் போடுங்கள்

## Let Down Your Nets

Gary c. Hampton

**ந**ம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பேதுருவின் படகிலிருந்து திரளான ஜனங்களுக்குப் போதித்தார். அதன் பின்பு அவர் பேதுருவிடம் ஆழத்திலே தள்ளிக் கொண்டுபோய், மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்கு, பேதுரு ஐயரே இரா முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றார் (லூக்கா 5:45). அதன் விளைவு, வலை கிழிந்துபோகத்தக்கதாக படவுகளும் அமிழத்தக்கதாக மீன்களைப் பிடித்தார்கள்.

நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நாமெல்லோரும் சுவிசேஷ வலையை விரிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். இதை நாம் நம் இல்லங்களில் நம் பிள்ளைகளோடும், சபையில் விசுவாசிகளோடும் தொடங்கவேண்டும். தேவன் இஸ்ரவேலிடம்: ஆகையால், கர்த்தர் உங்கள் பிதாக்களுக்கு கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும் உங்கள் பிள்ளைகளின் நாட்களும் பூமியின் மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்படிக்கு நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும், உங்கள் ஆத்துமாவிலும் பதித்து அவைகளை உங்கள் கையின் மேல் அடையாளமாகக் கட்டி உங்கள் கண்களின் நடுவே ஞாபகக் குறியாக வைத்து அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும் படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் எழுதுவீர்களாக என்று கட்டளையிட்டார் (உபாகமம் 11:18–21).

கிறிஸ்தவ தகப்பன்மார்கள் பவுலின் அறிவுரையைப் பின்பற்ற வேண்டும். பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:4).

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் சகல தேசங்களிலும் உள்ளவர்களை சீஷராக்க வேண்டும். மத்தேயு 28:18–20; மாற்கு 16:15,16; லூக்கா 24:46–48]. நாம் கர்த்தரிடத்தில் இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை என்று சொல்லும் படி சோதிக்கப்படுவோம். இத்தகைய பதில் ராஜ்ஜியத்தின் விதையை விதைப்பதினால் உண்டாகும். இதன் மூலம் பவுலின் உண்மையான ஆதங்கத்தை கவனிக்கத் தவறுகிறது [I கொரிந்தியர் 3:67] ஆதித்திருச்சபை இதைப் புரிந்து கொண்டபடியால்தான் சபைக்குத் துன்பம் உண்டான போது அவர்கள் சிதறப்பட்டாலும் கூட அவர்கள் எங்கு திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள் [அப்போஸ்தலர் 8:4].

நம் பிள்ளைகளுக்குப் போதிக்க தீர்மானம் எடுத்துக்கொண்டு, மற்றவர்களுக்குப் போதிக்க வாய்ப்புகளைத் தேடுவோம். ஆழத்திலே வலைகளைப் போட்டுவிட்டு அபரிதமான பலன்களுக்காகத் தேவனிடம் ஜெபிப்போம் ✝

---

## கிறிஸ்தவன்

- கிறிஸ்தவன் என்னும் பெயர் கிறிஸ்துவைத் தழுவி வருவதால் நாமெல்லோரும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாயிருக்கிறோம் ( II யோவான் 2:20)
- கிறிஸ்தவன் என்னும் பெயர் மேன்மையானதும், நம்மை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்துகிற பெயராகவும் இருக்கிறது. (II கொரிந்தியர் 7:1)
- கிறிஸ்தவன் என்னும் பெயர் அதை தரித்திருக்கிறவர் கிறிஸ்துவின் உடைமை என்பதை மற்றவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறது. ( I கொரி 6: 19,20)
- முதல் முதல் அந்நியோகியாவிலே சீசர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. (அப்போஸ்தலர் 11:26).

# ஓய்வு நாளை கிறிஸ்தவர்கள் அனுசரிக்க வேண்டுமா ?

## IS the Sabbath the Day Christians should observe ?

**Maxle B. Boren**

மத உலகில் கணிசமான மக்கள் ஓய்வு நாளானது கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற எல்லோராலும் அனுசரிக்கப்பட வேண்டுமென்று நம்புகிறார்கள். இப்படிப் பிடிவாதமாக இருக்கிற கூட்டத்தாரில் ஒரு பிரிவினர் தங்களை ஏழாம்நாள்காரர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களுடைய நிலைப்பாடு சரியானதா ? இந்தப் பாடத்தைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது ?

முதன் முதலில் வேதாகமத்தில் ஏழாம் நாள் என்னும் வார்த்தை ஆதியாகமம் 2 : 2 ல் இடம் பெற்றிருக்கிறது. இதுதான் பின்னாளில் ஓய்வு நாள் என்று பலரால் பெயர் சூட்டப்பட்டது. இங்கே வசனம் சொல்கிறபடி, தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளெல்லாம் முடித்தபின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். மூன்றாம் வசனத்தில், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதைப் பசிசுத்தமாக்கினார் என்று நாம் பார்க்கிறோமே தவிர, அந்நாளை எல்லோருமே அனுசரிக்க வேண்டுமென்று எந்த கட்டளையையும் அங்கே கொடுக்கப்படவில்லை.

வாரத்தின் ஏழாவது நாள் முதன்முதலாக கர்த்தருக்குரிய ஓய்வு நாள் என்று யாத்திரமாகமம் 16 : 25 ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் 16 : 23–30 வசனங்களில், இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேறிய பிறகு வனாந்தரத்தில் மன்னாவை சேகரிப்பது சம்மந்தமாக அவர்களுக்கு தேவன் கொடுத்த கட்டளைகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மறுபடியும் இந்த வசனப்பகுதியில், ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் அனுசரிக்க வேண்டுமென்று கட்டளை ஒன்றும் கொடுக்கப்படவில்லை. மாறாக, ஆறுநாட்கள் மன்னாவை சேகரித்து ஏழாம் நாள் ஓய்ந்திருப்பதை பற்றித்தான் சொல்லப் பட்டிருகிறது.

ஆனால், யாத்திராகமம் 20 : 8–11 வசனங்களில், மோசே மூலமாக தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்த கட்டளையில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் அவர்களை விடுவித்ததை நினைவுகூரும் விதமாக ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கும்படியாக கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது (உபாகமம் 5 : 2–6–13–16) ஓய்வு

நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டுமென்று சொல்கிற இந்த ஏழாம் நாள்காரர்கள் பழைய ஏற்பாட்டின் மற்ற பிரமாணங்களையும் கடைப்பிடிக்க வேண்டுமல்லவா? அப்படிச் செய்வதற்கு இவர்களுக்கு விருப்பமில்லை. இந்த ஓய்வு நாள் கொள்கையை மாத்திரம் இறுக்கமாய் பிடித்துக் கொள்கிறார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் ஓய்வு நாளில் கதிர்களைக் கொய்ததைப் பார்த்த பரிசேயர்கள் அதினிமித்தம் கிறிஸ்துவை சிக்கவைக்க அவரிடம் சில கேள்விகளைக் கேட்டார்கள். அதற்கு பதிலளித்த நம் இரட்சகர், மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை. ஓய்வு நாள் மனுசனுக்காக உண்டாக்கப்பட்டது என்றார் (மாற்கு 2 : 27). ஓய்வு நாளுக்கு ஆண்டவராக இருக்கிற இயேசுகிறிஸ்து ஓய்வு நாளை உள்ளடக்கிய பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை கடைபிடித்தாரா ? இல்லையா ? ஆம், நம் இரட்சகர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தார் (மத்தேயு 5 : 17). அவர் அப்படியே செய்தார் (லூக்கா 24 : 44,45). பழைய பிரமாணத்தை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையின் மேல் ஆணியடித்தார் என்பதை வேதவசனம் தெளிவு படுத்தியிருக்கிறது (கொலோசேயர் 2:8–17). கலாத்தியர் 3 : 10–29 ரோமர் 3 : 2027 எபேசியர் 2 : 11–18, அப்போஸ்தலர் 15 : 1–11: II கொரிந்தியர் 3 :1–18 வசனங்களை வாசிக்கவும். சத்தியத்தை தேடும் நேர்மையுள்ள ஒரு நபரால் மேற்சொல்லப்பட்ட வசனங்களை வாசித்துவிட்டு மோசேயின் பிரமாணம் இன்னும் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துகிறது என்று சொல்லவே முடியாது. ஓய்வு நாளை ஆசரிப்பது பழைய பிரமாணத்தின் ஒரு பகுதி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் பழைய பிரமாணத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. எனவே, பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியாகிய ஓய்வுநாளை நாம் இப்போது பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டிய அவசியமில்லை. புறஜாதிகள் ஓய்வுநாளை ஆசரிக்கும்படியாக கட்டளையிடப்படவில்லை. அது கிறிஸ்து வரும் வரை இஸ்ரவேலர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட பிரமாணம் (கலாத்தியர் 3:16–19, 23–25). கிறிஸ்து இப்பூமிக்கு வந்தபோது அவர் பழைய பிரமாணத்தை நிறைவேற்றி புதிய பிரமாணத்தை புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்தார். இன்று எல்லோரும், யூதர்களும், புறஜாதிகளும் அந்த உண்மையை ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கணக்கொப்புவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம் (மத்தேயு 28 : 18, அப்போஸ்தலர் 2 : 36) கிறிஸ்துவின் பிரமாணத்தில் ஓய்வுநாளை ஆசரிக்கும்படிக்கு எந்தக் கட்டளையும் கிறிஸ்தவர்களுக்கு

கொடுக்கப்படவில்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில்தான் உயிர்த்தெழுந்தார்(மத்தேயு 28 : 1–10, மாற்கு 16 : 1–10 : லூக்கா 24 : 1–10 : யோவான் 20 : 1–10). சபையானது பெந்தெகொஸ்தே நாளில்தான் ஸ்தாபிக்கப்பட்டது. அது எப்போதுமே வாரத்தின் முதல் நாளில்தான் வரும். அப்போஸ்தலர் 2 : லேவியராகமம் 23 : 15–16. ஆதி திருச்சபை வாரத்தின் முதல் நாளில் தான் சபை கூடியது (அப்போஸ்தலர் 20:7 I கொரிந்தியர் 16 : 2). பெரும்பாலான வேத வல்லுநர்கள் இந்த நாள் வெளிப்படுத்தின விசேஷம் 1 : 10ல் குறிப்பிடப்பட்டிருக்கும் கர்த்தருடைய நாள் என்பதில் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். சத்தியத்தை உண்மையாக நேசிக்கும் ஒருவருக்கு பரிசுத்த வேதாகமமே எல்லாவற்றிற்கும் போதுமானது என்றாலும் கூட, உலக வரலாறு கூட ஓய்வு நாள் வாரத்தின் முதல் நாள்தான். வாரத்தின் கடைசி நாள் அல்ல என்பதை தெரிவுப்படுத்தி இருக்கிறது.

மேலும், சிலர் வாரத்தின் முதல்நாளை **கிறிஸ்தவ ஓய்வு** நாள் என்றழைக்கிறார்கள். இதுவும் தவறானது. இச்சொற்றொடரை நாம் வேதாகமத்தில் எங்குமே காண முடியாது. வாரத்திற்கு ஏழுநாட்கள் உண்டு என்பது வேத அடிப்படையிலானது தான். ஆனால், ஒவ்வொரு நாளும் கிரகங்களின் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. இதற்கு மிகச்சிறந்த உதாரணம் ஞாயிற்றுக்கிழமை. ஞாயிறு என்றால் சூரியன். முற்காலங்களில் சில சூரியனை கடவுளாக வணங்கினார்கள். அதனால் தான், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கிரகங்களின் பெயர்களைத் தாங்கி வரும் கிழமைகளை உச்சரிப்பதை தவிர்த்திருக்கிறார்கள். இன்றைய நாட்களில் கூட கிரகங்களின் பெயர்களைத் தாங்கி வரும் கிழமைகளை உச்சரிப்பதை நாம் தவிர்க்க நினைத்தாலும் உலகத்தில் பெறும்பாலோனோர் அப்பெயர்களையே பயன்படுத்துவதால் நாமும் அவர்களோடு ஒத்துப்போக வேண்டியிருக்கிறது. இருந்தபோதிலும், பல கடவுள்களை வழிபடுபவர்கள் ஞாயிறு அல்லது சூரியனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல் நாமும் முக்கியத்துவம் கொடுக்காமல் அந்த நாளுக்கு அல்லது வாரத்தின் முதல் நாளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அதில் தவறொன்றுமில்லை.

ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்ற பிரமாணங்களை உள்ளடக்கிய மோசேயின் பிராமணத்தின் கீழ் இன்று யாருமில்லை.

# முக்கிய வசனம் குறித்த துரித வியாக்கியானம்
# ஆமோஸ் 4:12

**Maxle B. Boren**

தேவன் எப்படிக் கிரியைச் செய்கிறார்? என்று அடிக்கடி கேள்வி கேட்கப்படுகிறது. எந்த இடமும், நபரும் அல்லது பொருளும் கீழ்ப்படியும் பிள்ளைகளை ஆசீர்வதிக்க ஒரு கருவியாக தேவனால் பயன்படுத்தப்பட முடியும். இதை வைத்து தேவன் கீழ்ப்படியாதவர்களை தண்டிப்பார். அதே நேரத்தில் அவரை எதிர்பவர்களை அழித்துப் போடுவார்.

லூக்கா 12:48 **எவனிடத்தில் அதிகங்கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும். மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்** என்று சொல்கிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்திற்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாத்தீகமும், மனிதத்துவமும் நம் கலாச்சாரத்தை கட்டுபடுத்துவது அதிகரித்துவிட்டது. தேவன் கடந்த காலங்களில் எப்படிக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளை தண்டித்தார் என்பதை அறிந்துகொள்வோம். இந்த நான்காம் அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேலரோடு எப்படி இடைப்பட்டார் தம்மிடத்தில் இஸ்ரவேலர்களைக் கொண்டு வருவதற்கு எப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்தார் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

**...**ஆகையால் நான் உங்கள் பட்டணங்களில் எல்லாம் உங்கள் பல்லுகளுக்கு ஓய்வையும், உங்கள் ஸ்தலங்களில் எல்லாம் அப்பக்குறைவையும் கட்டளையிட்டேன். ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

கருக்காயினாலும், விஷப்பனியினாலும் உங்களைத் தண்டித்தேன். உங்கள் சோலைகளிலும், திராட்சத் தோட்டங்களிலும், அத்தி மரங்களிலும் ஒலிவமரங்களிலும் மிகுதியானதை பச்சைப்புழு அரித்துப்போட்டது. ஆகிலும், என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

சோதோமையும், கொமோராவையும் தேவன் கவிழ்த்துப்போட்டது போல உங்களைக் கவிழ்த்துப்போட்டேன். ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆகையால் இஸ்ரவேலே, இந்தப்பிரகாரமாக உனக்குச் செய்வேன். இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிற படியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.

# தேவனுடைய தயவு – ரோமர் 2:4

# The Goodness of God

**Mark. N. Posey**

முன்னுரை:



**நே**ர்மையாக சிந்தித்துப் பார்த்தால் தேவ தயவு நம் ஒவ்வொருவருடைய இருதயங்களையும் உருக்கவேண்டும் (ரோமர் 2:4) நன்மைக்கும் நமக்கும் எந்த சம்மந்தமும் இல்லாதபோது அவருடைய இரக்கம் நமக்கும் அவசியமாயிருந்த போது அவர் நமக்கு நன்மை செய்து கொண்டே வருகிறார்.

தேவன் நம்மை நேசிக்கிறார். அக்கறைப்படுகிறார். நம்மைப் பராமரிக்கிறார். இவை எல்லாவற்றையும் நாம் அவருடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு விரோதமாக காரியங்களை செய்தபோதும் நமக்காக வெளிப்படுத்தியிருக்கிறார். பிதா எனும் வார்த்தைக்கு உண்மையான பொருளை விளங்கச் செய்யும் படி அவர் நம் பிதாவாக இருக்கிறார். தேவன் நமக்கு நன்மை செய்கிறவாராக தாராளபிரபுவாக இருக்கிறபடியால் நம்முடைய சித்தங்களை அவருக்கு கொடுக்க வேண்டாமா? அவருடைய வார்த்தைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிய வேண்டாமா? அவருடைய அன்பை பகிர்ந்துகொண்டு பரலோகத்தில் அவருடைய ஐக்கியத்திற்காக ஏங்க வேண்டாமா? மேற்சொல்லப்பட்டவைகளை நீங்கள் எல்லோரும் ஒத்துக் கொள் வீர்கள் என்று நிச்சயித்திருக்கிறேன். ஆகையால் , நாம் அனுதினமும் நித்தியத்திற்தாக ஆயத்தப்படும் போது இப்பூமிக்குரிய வாழ்வில் அவர் நமக்கு தந்திருக்கிற ஆசீர்வாதங்களை ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்போம்.

1. **இயேசு:**

அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்துவின் மதிப்பை மிக ஆழமாக உணர்ந்திருக்கிறார். **தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்** என்று மெய்சிலிர்த்து தேவனை போற்றித் துதிக்கிறார். யோவான் 3 :16 ல் நாம் காணும் **தந்தருளினார்** எனும் வார்த்தை **இதுவரை யாரும் தந்திராத** மாபெரும் ஈவை நமக்கு அடையாளப்படுத்துகிறது. இவ்வுலகம் இயேசுவை ஏற்றுக்கொள்ளும் படியாக (கொலோ 2:6) தேவன் அவரைத் தந்தருளினார்.

(யோவான் 3:16). இவ்வுலகம் ஜீவனை அடையும் படியாக கிறிஸ்து மரித்தார்(யோவான் 20:31) மனித இனம் இதுவரை அறிந்திராத, கண்டிராத மிகபெரிய ஈவு இயேசு கிறிஸ்து தான்.

**வேதாகமம்:**

இவ்வுலகில் இருக்கின்ற புத்தகங்களிலேயே வேதாகமம் தான் மகத்தான புத்தகம். ஏனென்றால், அது தேவனுடைய மனதிலிருந்து வந்தது. (II தீமோத்தேயு 3:16) பலர் வேதாகமத்தை அழிக்க முயற்சித்தார்கள். ஆகிலும், இது எல்லாவற்றையும் கடந்து நிலைத்து நிற்கிறது. சந்தேகப்பேர்வழிகள் வேதாகமத்திற்கு எதிராகப் போராடினார்கள். இருந்தபோதிலும் மனித இனத்தின் மீது அது ஏற்படுத்திய தாக்கத்தை அவர்களால் மறுக்க முடியவில்லை. ஏசாயா தீர்க்கதரிசி **புல் உலர்ந்து பூ உதிரும்**; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்று அறிவித்தார் ( ஏசாயா 40:8). அவருடைய வார்த்தைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்

**கிருபை:**

தேவனுடைய கிருபையானது உலகிலுள்ள ஒட்டுமொத்த மனித இனத்துக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது (ரோமர் 3:24) (தீத்து 2:11). கிருபை இரட்சிப்பைக் கொண்டு வருகிறது (தீத்து 2:11) (எபேசியர் 2:8) ஆனால், அது விசுவாசத்தினாலே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் (II கொரிந்தியர் 6:1) (எபேசியர் 2:8). கிருபை என்பது **மனிதன் செய்யும் எல்லாவற்றையும் மூடி மறைப்பதற்கு** மனித இனத்தின் மீது தேவனால் தூக்கி எறியப்பட்ட நிபந்தனையற்ற போர்வை அல்ல! கிருபையை பெற்றுக்கொண்டு தேவனுடைய முழு ஆலோசனைக்கும் கீழ்ப்படிவதன் மூலமாக இரட்சிக்கப்படும் ஒவ்வொரு பாவிக்கும் இது தேவனிடத்திலிருந்து கிடைக்கும் ஆசீர்வாதமாகும்.

**சபை:**

உலகத்தில் இருப்பவைகளிலேயே கிறிஸ்துவின் சபை தான் மிகப் பெரிய அமைப்பாகும். இது கி.பி.33 ல் எருசலேமிலே இயேசு கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டது (மத்தேயு 16:18; அப்போஸ்தலர் 2:5). கிறிஸ்து இதன் தலைவராகவும், இரட்சகராகவும் இருக்கிறார். (எபேசியர் 1:22; எபேசியர் 5:23). சபை கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருக்கிறது (ரோமர் 16:16). இதன் அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருக்கிறார்கள் (எபேசியர் 3:15; யாக்கோபு 2:7). சபை வேதாகமத்தையே அதன் விசுவாச சட்டமாகக் கொண்டு அதை நடைமுறைப்படுத்தி வருகிறது. (I தீமோத்தேயு 3:16,17). சபை இழந்து போன ஆத்துமாக்களை இரட்சிக்க அனுதினமும் பாடுபடுகிறது (II தீமோத்தேயு 2:3).

நாம் பரலோகம் போக வேண்டுமென்றால் இந்தச் சபையில் அங்கம் வகிக்க வேண்டும் [I கொரிந்தியர் 15:24]. கிறிஸ்துவின் சபைக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**நம்பிக்கை :**

கிறிஸ்தவர்களுடைய ஒரே நம்பிக்கை பரலோகமாக இருக்கிறது [எபேசியர் 4:4]. அப்போஸ்தலனாகிய பேதுரு உங்களிடத்திலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் என்று அறிவித்தார் [I பேருது 3:15]. கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்களுக்கு எந்த நம்பிக்கையுமே இல்லை [I தெசலோனிக்கேயர் 4:13; எபேசியர் 2:12]. ஆயினும், கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு பரலோகம் போவது ஜீவனுள்ள நம்பிக்கையாக இருக்கிறது [I பேதுரு1:3–4].

**பரலோகத்திற்கு நேராக ஒருவருக்கு வழிகாட்ட என்ன செய்யலாம்?**

- ✤ உங்களை மோசமாக நடத்தியவர்களிடத்தில் உங்கள் பேச்சிலும், செயலிலும், மனநிலையிலும் உயரிய ஒழுக்க நெறியை வெளிப்படுத்துங்கள்.
- ✤ சோர்வில் இருக்கும் ஒருவரை உற்சாகப்படுத்தும் வகையில் உங்களின் வார்த்தைகளின் தன்மை அமையட்டும்.
- ✤ கிறிஸ்து உங்கள் வாழ்வில் ஏற்படுத்திய நேர்மறையான தாக்கத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- ✤ சபையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக்குறித்து உங்கள் நண்பர்களிடமோ அல்லது அயலகத்தாரிடமோ தெரிவித்து அவர்களை அன்பாக அழையுங்கள்.
- ✤ தேவனுடைய வார்த்தையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்துக் கொண்டு அதைப் படிப்பதில் உங்கள் நேரத்தைச் செலவு செய்யுங்கள். அது உங்களுக்கு சிறந்த முறையில் ஆத்தும ஆதாயம் செய்ய உதவும்.
- ✤ அறிமுகம் இல்லாதவர்களைப் பார்த்து புன்னகைப்பதற்கோ அவர்களுக்கு வணக்கம் சொல்வதற்கோ வாய்ப்பு கிடைத்தால் அதை நழுவ விடவேண்டாம்?

## சத்திய வழி


❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**

❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி


❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**

❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை


❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.


**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**


E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763

P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420

B. **அர்ஜுனன்** : 994435 58041

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( 4 இதழ்கள் ) (அ) ரூ. 200 ( 8 இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________

# ✯ சத்தியத்தின் குரல் ✯

## Editorial Team


Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
86-A, Dharapuram Road,
Kangayam - 638701. TN. India.
Cell : 98427 30382, 99655 30385

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
Cell : 92 4421 4421, 92 4420 4420

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
Cell : 94435 58041


## 5 நிமிட வேத பாடம்

### கர்த்தர் என்னை அறிந்திருக்கிறார்

Paula Bates

1. கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து ........ என் உட்காருதலையும், என் எழுந்திருக்குதலையும் நீர் ............, என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர் (சங்கீதம் 139:1,2).

2. ........... அவர்கள் நினைவுகளை அறிந்து, நீங்கள் உங்கள் இருதயங்களில் .............. , .............. ? மத்தேயு 9:4.

3. அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் ........... அவர்களை நம்பி இணங்கவில்லை. ............. அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் ............ கொடுக்கவேண்டிய தாயிருக்கவில்லை (யோவான் 2:24, 25).

4. உன் ............, உன் ......., உன் வரவையும் நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன் ( II ராஜாக்கள் 19:27)

5. ஆகிலும் உங்களில் ........... சிலர் உண்டு என்றார், விசுவாசியாதவர்கள் ............ தம்மை காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதி முதலாக இயேசு .............. அவர் பின்னும் (யோவான் 6: 64).

6. எல்லாருடைய ............... அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய ............... போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக (அப்போஸ்தலர் 1:24).

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்



## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்
நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்
' திருமறை ஆசான் '
' கிருபையுள்ள வார்த்தை '
' வேர்டு ஆப் கிரைஸ்ட் '


மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385



சத்தியத்தின் குரல் Volume - 40 THE VOICE OF TRUTH INTERNATIONAL